பக்கங்கள் : இருபத்தெட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 27 செவ்வாய்க்கிழமை (12.07.2011) UTHAYAN-A Lively National Tamil Daily இதழ்: 228



11 அரச உதவி கிடைக்காத மக்கள்



14 இந்தியக் கொள்கையில் பிரகாசம்



17 வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ்



25 அரையிறுதியில் ஆசிய அணி

யாழ்.பத்திரிகையில் வந்த செய்தியை முற்றாக மறுக்கிறது அரசு

## வடக்கில் கூட்டமைப்புக்கு தொடர் நெருக்கடிகள் பிரசாரத்தை முடக்கும் நடவடிக்கை உண்மையே

### ஆதாரங்களை திரட்டிக் கூறுகிறார் 'கபே' பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,ஜூலை12

கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரங்களை முடக்க அரசு திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றது என்று யாழ்ப்பாண பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தியில் எதுவித உண்மையும் இல்லை என்று மறுக்கிறார் அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல.

இல்லை, இல்லை. அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவை அத்தனையும் உண்மை. நாங்கள் நேரடியாகச் சென்று நன்கு அவதானித்து விசாரணைகளை நடத்திய பின் உறுதி செய்யப்பட்ட தகவல்களைத்தான் பத்திரிகை வெளியிட்டுள்ளது என்றார் நீதியானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கபே) நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன்.

அவர் தெரிவித்தவை வருமாறு:-

எமது அமைப்பின் பிரதிநிதிகளுடன் நானும் நேரடியாகச் சென்று கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் இல்லாத ஒரு மூலை முடுக்குக் கூட இல்லை. அதே போன்று பொலிஸாரும் காவல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவற்றிற்கெல்லாம் மேலாக ஜனாதிபதியின் சகோதரர், பலம்மிக்க அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, மகன் நாமல் ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்களும் வடக்கில் தற்போது முகாமிட்டுள்ளனர். (27ஆம் பக்கம் பார்க்க)

குடாநாட்டில் தொடரும் தேர்தல் வன்முறைகள்:

## கூட்டமைப்பின் முறைப்பாடுகள் குறித்து ஆராய பிரதித் தேர்தல் ஆணையாளர் யாழ்.வருகை

### நேற்று அவசரமாக அனுப்பிவைப்பு

கொழும்பு, ஜூலை 12

**யாழ். குடாநாட்டில் இடம்பெறும் தேர்தல் வன்முறைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்ததை அடுத்து பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் நாளை யாழ். தேர்தல் அலுவலகத்தில் விசேட கூட்டம் ஒன்றைக் கூட்டுகிறார்.**

யாழ். குடாநாட்டில் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டங்கள் மீதான தாக்குதல்கள், கூட்டமைப்பு வேட்பாளர்களின் வீடுகள் மீது மேற்கொள்ளப்படும் அடாவடித் தனங்கள், இராணுவ அத்துமீறல்கள் தொடர்பாக கூட்டமைப்பு நேற்று தேர்தல்கள் ஆணையாளரிடம் எழுத்து மூலம் தேர்தல் வன்முறைகளைப் பட்டியலிட்டு முறைப்பாடு செய்தது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## இன்று தபால்மூல வாக்களிப்பு

கொழும்பு, ஜூலை 12

ஒரு மாநகரசபை, ஒன்பது நகர சபைகள் உட்பட 65 உள்ளூராட்சி சபைகளுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று நடைபெறும்.

இந்தத் தபால் மூல வாக்களிப்பைக் கண்காணிக்கும் பணியில் நூறு தொண்டர்கள் ஈடுபடுத்தப்படுவர் என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், தபால் மூல வாக்களிப்பை நீதியாகவும், நியாயமானதாகவும் நடத்துவதற்குத் தேவையான சகல பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன (04ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் கடமைக்கு 150 பொலிஸார்

யாழ்ப்பாணம்,ஜூலை12

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவடையும் வரை யாழ்ப்பாணப் பொலிஸாருடன் இணைந்து பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுவதற்கென மேலதிகமாக 150 பொலிஸார் யாழ்ப்பாணத்துக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த 150 பொலிஸாரும் கொழும்பு மற்றும் அனுராதபுரம் ஆகிய இடங்களில் இருந்து இரு பிரிவுகளாக நேற்றும் நேற்று முன்தினமும் யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான (28ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.நூலகம், யோகேஸ் எம்.பியின் வீடு எரிப்பு

## 1981இல் நடந்தவை இந்தத் தேர்தலிலும் நடக்கலாம் என்ற அச்சத்தில் மக்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

1981 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவட்ட சபைத் தேர்தலின் போது கொழும்பில் இருந்து வந்த அரச அதிகாரிகளால் நடத்தப்பட்ட அடாவடித்தனம் போன்று உள்ளூராட்சித் தேர்தலிலும் இடம் பெறுமா என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

நீதியானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தில் (கபே) நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோனிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (04ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ் 200 பேருடன் நேற்று சைக்கிளில் சென்று பிரசாரம்

தென்மராட்சி, ஜூலை 12

உள்ளூராட்சித் தேர்தலையொட்டி ஆளும் கட்சியின் சார்பில் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் நோக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் சைக்கிள் மூலமான தேர்தல் பிரசாரம் தென்மராட்சி பிரதேசத்தின் ஒரு பகுதியில் நடைபெற்றது.

இந்தப் பிரசாரம் நேற்று பிற்பகல் 3.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணிவரை நீடித்தது.

அமைச்சருடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின் மற்றும் ஈ.பி.டி. பியின் (28ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா சிறையில் 4 கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம்

### விடுவிக்கப்படுவோர் கைதாவதற்கு எதிர்ப்பு

வவுனியா, ஜூலை 12

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டோரை மீண்டும் கைதுசெய்யக்கூடாது என்றும் அரசியல் கைதிகளின் வழக்குகளைத் தாமதமின்றி விசாரித்து அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும் கோரி நான்கு கைதிகள் வவுனியா சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதமிருந்து வருகின்றனர்.

மரியதாஸ் நேவின் டெல் றொக்சன் (வயது 35),ரங்கசாமி நந்தகுமார் (வயது 27), பொன்னம்பலம் சிவகுமார் (வயது 30), கட்டையன் யோகேஸ்வரன் (வயது 40) ஆகியோரே அந்த நால்வரும் ஆவர்.

* வவுனியா, செட்டிகுளம், காந்தி நகரைச் சேர்ந்த கட்டையன் யோகேஸ்வரன் என்பவர் கடந்த 01.07.2009 அன்று சரணடைந்து புனர்வாழ்வளிக்கப்பட்டு 15.01.2010 அன்று விடுவிக்கப்பட்டவர். இவரை மீண்டும் 18.01.2010 அன்று கைதுசெய்து வவுனியா சிறையில் அடைத்துள்ளனர். இவருக்கு

(28ஆம் பக்கம் பார்க்க)

## பாலியல் துன்புறுத்தல், துஷ்பிரயோகம் நடந்தால் நேரடியாகவே நீதிமன்றில் முறையிடவும் ஏற்பாடு

### குடாநாட்டில் புதிய பொறிமுறையை நடைமுறைப்படுத்த முடிவு

யாழ்ப்பாணம்,ஜூலை12

குடாநாட்டில் அண்மைக் காலத்தில் திடீரென அதிகரித்துள்ள பாலியல் துன்புறுத்தல் சம்பவங்களை அடுத்து -


குடும்பத்திலோ அல்லது வேறு எந்த இடத்திலும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் - துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றால், அவை குறித்து நேரடியாகவே நீதிமன்றுக்கு முறைப்பாடு செய்யும் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படவிருக்கிறது.

சட்ட உதவி ஆணைக்குழுத் தலைவர் நீதியரசர் என்.கே. உடலகம மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்களுடன் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா நடத்திய கலந்துரையாடலின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய முறைப்பாடுகள் (04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




கிளி, முல்லை மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடனும் ஏனைய மாவட்டங்களில் தெளிவான காலநிலையும் காணலாம்.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
ஆடி 11, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6767.59↓
மிலங்கா(MPI) 6274.45↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1.8Bn
பங்குகளின் அளவு(No.) 89.32Mn
வியாபாரம்(No.) 19286
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
ஓறியன்ர் 32.20
செறன்டிப் ஹொட்டல் 23.00
செலான் பாங் 74.50
ஹொட்டல் சிகிரியா 74.00
சுவர்ணமகால் 76.80
குறைவு(Top 5 losers) - விலை Rs.
லயன் பிறேவறி 379.50
ஓட்டோறோம் 814.20
மிறமார் பீச் ஹொட்டல் 298.40
பிபுத் 60.10
அபான்ஸ் 55.50
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# 12 வருடங்களின் பின் தனங்கிளப்பில் குடியமர்வு

தென்மராட்சி தெற்கின் தனங்கிளப்பு பிரிவில் 12 வருடங்களின் பின்னர் மக்கள் நேற்று முன்தினம் மீள் குடியமர்த்தப்பட்டனர்.

அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருந்த இந்தப் பகுதியில் வெடிப் பொருள்கள் அகற்றப்பட்ட பின்னர் குடியிருப்பாளர்களுக்கு உத்தியோகபூர்வமாக கடிதங்கள் வழங்கப்பட்டு மீளக் குடியமர்த்தப்பட்டனர்.



பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சர் டிலான் பெரேரா, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில்கள் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் மீளக் குடியமரும் மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதியும், பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

அந்தப் பகுதிக்கு மின்சார விநியோகத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வும், படையினரால் அமைக்கப்பட்ட பஸ் தரிப்பிடத் திறப்பு விழாவும் இடம்பெற்றன. (ஜ-207-131)

# பெற்றோல் மோசடிக்கு பின்னால் அரசியல்

## ஐ.தே.க. சந்தேகம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 12

பெற்றோல் மோசடிக்குப் பின்னால் அரசியல் காணப்படுகின்றதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக நேற்றுத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தரமற்ற பெற்றோலை இலங்கைக்கு கொண்டுவந்ததற்கான கொடுப்பனவுகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டதாகப் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்திருந்தார். எனினும், தரமற்ற பெற்றோலை ஏற்றிவந்த கப்பல் மற்றும் நிறுவனங்களுக்கான கொடுப்பனவுகள் அனைத்தும் செலுத்தப்பட்டுவிட்டன என்று அறியக்கிடைத்தது.

இந்த மோசடியுடன் தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் அமைச்சின் செயலாளர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்த அமைச்சு, செயலாளர் ஓய்வூதியம் பெறுவதற்கும் வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறது.

பெற்றோலுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அதனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டதாகவும் பெற்றோலிய வளத்துறை அமைச்சு தொடர்ச்சியாக அறிவித்து வந்தது. என்றாலும் நாம் அதனை மறுத்தோம். உண்மையிலேயே அது அப்பட்டமான பொய். தரமற்ற பெற்றோல் மற்றும் தட்டுப்பாடு தொடர்பாக அமைச்சரும், செயலாளரும் அறிக்கை விட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் கொலன்னாவை மத்திய பெற்றோல் சேமிப்பகத்துக்குச் சொந்தமான 41ஆம் இலக்க தாங்கியில் 11ஆயிரத்து 500 மெற்றிக் தொன் பெற்றோல் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, தரக்குறைவான பெற்றோல் விநியோகித்ததால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 450 குழாய்கள் சேதமடைந்துள்ளதோடு, பாவனைக்கு உதவாத வகையில் உள்ளன - என்றார். (ஒ-சி)

# எத்தனை, எத்தனை மாற்றங்கள்....!



அச்சுவேலி-தொண்டமானாறு வீதியைத் திறந்து வைக்கும் வைபவத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ புலிகள் அமைப்பின் ஊடகப் பேச்சாளராக இருந்த தயா மாஸ்டருடன் முதுகில் கை வைத்தவாறு வெகு சுவாரஸ்யமாக உரையாடிக் கொண்டிருக்கிறார். அருகில் வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி. இந்த வைபவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

## நாளை ஏழாலையில் பிரசாரக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

வலி. தெற்கு பிரதேச சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரக் கூட்டம் ஏழாலை மயிலங்காட்டில் நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

எஸ். கஜதீபன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, ஈ. சரவணபவன், எஸ். சிறிதரன் உட்படப் பலர் உரையாற்றுவர். (ஐ)

## ஆக்கத் திறன் கண்காட்சி

கோப்பாய், ஜூலை 12

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் இன்று முற்பகல் 10 மணிக்கு விஞ்ஞான ஆக்கத்திறன் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் ச. அருந்தவரட்ணம் கலந்துகொள்ளவுள்ளார்.

மாணவர்களின் பல்வேறு ஆக்கங்கள் கண்காட்சியில் இடம்பெறவுள்ளன. (எ-72)

## நயினை உற்சவம் நேரடி அஞ்சல்

யாழ்ப்பாணம், ஜூலை 12

வரலாற்று சிறப்பு மிக்க நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தோற்சவம் ஆகிய நிகழ்வுகள் மூன்று தினங்களும் ஆலயத்திலிருந்து யாழ். எவ்.எம். அலைவரிசையூடாக நேரடியாக அஞ்சல் செய்யப்படவிருக்கிறது.

இந்த அஞ்சல் நேர்முக வர்ணனையை மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன் தொகுத்து வழங்கவுள்ளார். (ஐ)

## வீட்டார் ஆலயம் செல்ல வீடு உடைத்து திருட்டு

தென்மராட்சி, ஜூலை 12

வீட்டில் உள்ளவர்கள் முறிகண்டி ஆலயத்துக்கு சென்றிருந்த வேளையில் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதிமிக்க பொருள்களைத் திருடிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளர் மாணிக்கலீலா விநோதன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஜ-207)

# நிகழ்வுகள்

## அமிர் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 12

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கத்தின் 22ஆவது சிரார்த்த தினத்தை ஒட்டிய நிகழ்வு நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றுவர். (ஐ)

## தீ மிதிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 12

சித்தன்கேணி ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலயத்தின் வருடாந்த ஆனிப்பூரணைத் தீர்த்தமும், தீமிதிப்பு விழாவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வின்போது பஜனைப் பாடல்களும், சைவப் புலவர் செ. கந்தசத்தியதாசனின் சைவச் சொற்பொழிவும் நடைபெறவுள்ளன. (ஜ-207)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 12

வட்டு - யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரி வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் நோயல். ஏ. விமலேந்திரன் தலைமையில் பிரதம அதிதியாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரும் - இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியுமான இ.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார். (ஏ-302)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அளவெட்டிச் சம்பவத்தில் 2 பொலிஸார் காயம் கதிரை ஒன்று கவிழ்ந்து கிடந்தது அவ்வளவுதான்!

## தெல்லிப்பழை பொலிஸ் பொறுப்பதிகாரி கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 12

அளவெட்டித் தாக்குதலில் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மாத்திரமே காயமுற்றனர். இந்தச் சம்பவம் இடம்பெற்ற மண்டபத்தில் ஒரு கதிரை மாத்திரமே கவிழ்ந்து கிடந்தது. இது தொடர்பாக எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை.

-இவ்வாறு இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி சீ.ஐ.வீரசிங்க நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அளவெட்டித் தாக்குதல் இடம்பெற்று நேற்றுடன் 55 நாள்கள் கடந்துள்ளன. இதற்கென விசாரணைகளை மேற்கொள்வதற்காக இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பாக எவராவது கைது செய்யப்பட்டுள்ளனரா? தற்போது விசாரணைகள் எந்தக் கட்டத்தை அடைந்துள்ளன என்பது தொடர்பாகக் கேட்டபோதே பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும், சம்பவ இடத்துக்குச் சென்று தாம் பார்வையிட்டபோது ஒரு கதிரை மாத்திரமே கவிழ்ந்துகிடந்தது என்றும் பெரியளவில் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, விசாரணைகள் இன்னும் முழுமையாகப் பூர்த்தியடையவில்லை எனக் கூறிய அவர், இனந்தெரியாத குழுவொன்றே இத்தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் கூட்டமொன்று கடந்த மே மாதம் 16ஆம் திகதி அளவெட்டியில் நடைபெற்றது. இதன்போது மண்டபத்துக்குள் திடீரென நுழைந்த இராணுவச் சீருடை அணிந்த குழுவினர் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தினர்.

அத்துடன் அங்கு வந்திருந்த மக்களை ஓடஓட விரட்டினர். நாடாளுமன்ற உறுப்பினர்களையும் யும் தாக்கமுற்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-சி)

# கூட்டமைப்புக்கு மக்கள் வாக்களிப்பதைத் தடுத்து கருணா, டக்ளஸை முன்னிலைப்படுத்த அரசு சதி!

## விக்கிரமபாகு கருணாரட்ன குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 12

வடக்கில் மக்களை அச்சுறுத்தி கூட்டமைப்புக்கு வாக்களிக்க விடாமல் தடுத்து, தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் கருணா, டக்ளஸ் ஆகியோரே என்ற மாயையை உருவாக்க அரசு முயற்சிக்கின்றது. பின்னர் இவர்களுடன் பேச்சு நடத்தி அரசுக்குத் தேவையான தீர்வைத் தமிழ் மக்கள் மீது திணிப்பதே அரசின் நோக்கம்.

- இவ்வாறு புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார். இது தொடர்பாக அவர் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகத் தொடர்ந்தும் திட்டமிட்டபடி வன்முறைச் சம்பவங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

### தெற்கில் ஆர்ப்பாட்டம் நடத்துவோம்

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாம் தெற்கில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம். ஜனநாயக மக்கள் முன்னணி, நவசமசமாஜக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன இதில் பங்கேற்கும்.

அரசு-தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இடையில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பாக நடைபெற்றுவரும் பேச்சுகளைத் திசை திருப்பும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு அந்தப் பிரதேச மக்களின் நம்பிக்கையை வென்ற கட்சி என்ற அடிப்படையில் கூட்டமைப்புடன் பேசியே அரசியல் தீர்வை அரசு வழங்கவேண்டும் என சர்வதேசம் கூறியுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

தமிழ் மக் களின் ஏக. பிரதிநிதிகள் கூட்டமைப்பி னர் அல்லர், அந்தப் பிரதேச மக்கள் எங்களுக்கும் வாக்களித்துள்ளனர் என சர்வதேசத்துக்குக் கூற முயற்சிக்கின்றது.

அது மட்டுமின்றி, அரசியல் தீர்வு தொடர்பாக டக்ளஸ், கருணா ஆகியோருடன் பேச்சு நடத்தி அரசுக்குத் தேவையான தீர்வைத் தமிழ் மக்களுக்கு வழங்குவதற்கே அரசு முயற்சிக்கின்றது - என்றார். (ஓ-சி)

# இந்திய தொலைக்காட்சியில் 'கொலைக்களம்'; இராணுவப் பேச்சாளருக்கு சிக்கல் விவாதத்தில் கலந்துகொண்டதால்

இந்தியாவின் ஹெட்லைன்ஸ் டுடே தொலைக்காட்சியில் மறு ஒளிபரப்பான இலங்கையின் 'கொலைக்களங்கள்' ஆவணப் படத்துடன் இணைந்து நடத்தப்பட்ட விவாதத்தில் இலங்கை இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல பங்கேற்றது பெரும் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

இதன் காரணமாக இலங்கை வெளிவிவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் ஒன்றின் மீது ஒன்று குற்றஞ்சாட்டியுள்ளதுடன், முறுகலான நிலை ஒன்றும் ஏற்பட்டிருப்பதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இணையச் செய்திகள்

இலங்கையின் போர்க் குற்றங்கள் என்ற ஆவணப் படத்துடன் இணைந்ததாக நேரடி விவாத நிகழ்வு ஒன்றையும் ஹெட்லைன்ஸ் டுடே தொலைக்காட்சி ஒளிபரப்பியிருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை நாள் இரவு இடம்பெற்ற இந்த நேரலை விவாதத்தில் இலங்கையின் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல செய்மதித் தொழில்நுட்பத்தின் மூலம் பங்கேற்றிருந்தார்.

சென்னையில் இருந்து இந்த நிகழ்ச்சி நேரலையாக ஒளிபரப்பப்பட்டது.

இந்த விவாதத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு இலங்கை இராணுவப் பேச்சாளர் உரிய வகையில் பதிலளிக்கவில்லை என்றும் நிகழ்ச்சியில் எதிர்த்தரப்பில்எழுப்பப்பட்ட பல வாதங்களுக்கு அவர் பொருத்தமான பதில் கூறாமல் மழுப்பி விட்டதாகவும் இலங்கை வெளி விவகார அமைச்சின் மூத்த அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

அதேவேளை, இந்த நிகழ்ச்சி முழுவதுமே விடுதலைப் புலிகளுக்கு சார்பாகவே நடத்தப்பட்டதாகவும், நிகழ்ச்சியின் பின்னணியில் விடுதலைப் புலிகளின் கொடியும் கூட காண்பிக்கப்பட்டதாகவும் இலங்கை பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இராணுவப் பேச்சாளர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றதன் மூலம் அது பக்கச்சார்பற்றது என்ற அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும், இதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியது இலங்கை அரசின் தரப்பில் இழைக்கப்பட்ட மிகப்பெரிய தவறு என்றும் இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் இராணுவப் பேச்சாளரே பதிலளிக்க வேண்டும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகளே அழுத்தம் கொடுத்துள்ளனர்.

# பஸ் குடைசாய்ந்ததில் பெண் ஒருவர் பலி; 11 பேர் படுகாயம்

கதிர்காமம் சென்ற யாத்திரிகர்கள் பஸ் ஒன்று வெல்லவாய - எல்ல பிரதான வீதி, கரந்தகொல்ல பகுதியில் வைத்து குடைசாய்ந்ததில் அதில் பயணித்த பெண்ணொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மேலும் 11 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில் நுவரெலிய, லபுக்கெல, குடாஓயா பரதேசத்தைச் சேர்ந்த விமலாவதி (வயது 65) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். விபத்துக்குள்ளானவர்களின்மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# லசந்த கொலை வழக்கு; இராணுவ வீரர் பிணையில்

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்த இராணுவ வீரர் ஒருவர் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவைச்சேரந்த லான்ஸ் கோப்ரலான கந்தகெதர பயவன்ஸ எனும் இந்த இராணுவ வீரரரை 75,000 ரொக்கப் பிணையிலும் 100,000 ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையிலும் செல்ல கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன பத்மன் சிரிசேன அனுமதியளித்தார்.

இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது, சந்தேக நபர் குற்றஞ் சுமத்தப்படாமல் நீண்ட காலமாக விளக்கமறியலில் இருப்பதாக சந்தேக நபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சேனக உல்லந்துபட்டிய, தெரிவித்தார்.

லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பாக மருதானையிலுள்ள திரிபோலி இராணுவ முகாமில் வைத்து இந்தச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஊடகவியலாளர்களான கீத் நோயர், உபாலி தென்னகோன் ஆகியோரை தாக்கிய குற்றச்சாட்டிலும் இந்தச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டதாகவும், பின்னர் எந்தவித ஆதாரங்களுமின்றி லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டதாகவும் அவரின் சட்டத்தரணி கூறினார்.

# வைத்தியசாலைக்குச் செல்ல பொன்சேகாவுக்கு அனுமதி

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் தோளில் ஏற்பட்ட நோய் காரணமாக ஒரு வார காலத்துக்கு தினமும் வைத்தியசாலைக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள சரத் பொன்சேகாவை கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் 7 நாள்கள் சிகிச்சை பெறுமாறு எலும்பியல் மருத்துவ நிபுணர் ஒருவர் ஆலோசனை வழங்கியுள்ளதாக தே.ஜ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட தெரிவித்தார்.

இராணுவ நீதிமன்ற தீர்ப்பின் காரணமாக சிறைத்தண்டனை அனுபவித்து வரும் சரத் பொன்சேகாவுக்கு தேவையான மருத்துவ சிகிச்சைகளை வழங்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளை கொழும்பு மேல் நீதிமன்றம் பணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு அதிகாரி ஸ்மித்தை அமெரிக்கா திருப்பி அழைப்பு

இலங்கை இராணுவம் நடத்திய போர்க் வெற்றிக் கருத்தரங்கில் சர்ச் சைக்குரிய கருத்தை வெளியிட்டிருந்த அமெரிக்கத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் லெப். கேணல் லோறன்ஸ் ஸ்மித் நியூயோர்க்குக்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளார்.

2008ஆம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பொறுப்பேற்ற லேப். கேணல் லோறன்ஸ் ஸ்மித், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில் கொழும்பில் பணியாற்றியவர்.

அண்மையில் இலங்கை இராணுவம் நடத்திய போர்க்கருத்தரங்கில் பங்கேற்ற அவர், போரின் இறுதிக்கட்டத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் சரணடைய முன்வந்தனர் என்பதில் சந்தேகம் உள்ளதாகக் கூறியிருந்தார்.

இதையடுத்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் லெப். கேணல் ஸ்மித்தின் கருத்து தனிப்பட்டது என்றும், அது அமெரிக்காவின் அதிகாரபூர்வ கருத்தல்ல என்றும் கூறியிருந்தது.

இந்த நிலையிலேயே அவர் அமெரிக்காவுக்கு திருப்ப அழைக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக லெப். கேணல் பற்றிக் ஜே.ஸ்கூலர் அமெரிக்கத் தூதரகத்தின் புதிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட பாதுகாப்பு ஆலோசகர் லெப். கேணல் பற்றிக் ஜே.ஸ்கூலரை கடந்த ஞாயிறன்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு பிரதி அமெரிக்கத் தூதுவர் வலேரி பௌலர் அம்மையர் அறிமுகப்படுத்தி வைத்தார். இந்தச் சந்திப்பில் பங்கேற்ற லெப். கேணல் லோறன்ஸ் ஸ்மித் இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் விடைபெற்றுக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தமாக பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

தற்போது கலாசாரச் சீரழிவுகள், பாலியல் பலாத்காரங்கள் தலைதூக்கி ஆடுவதை அவதானிக்க முடிகின்றது. எனவே இவ்வாறான சம்பவங்களை கட்டுப்படுத்தும் முகமாகப் பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறைகள் மற்றும் பாலியல் துன்புறுத்தல், பலாத்காரம் தொடர்பாக கடுமையான நடவ டிக்கை எடுக்கப்படல்வேண்டும் என்றும் அதற்கு சட்ட உதவி ஆணைக்குழுவின் உதவியை நாடமுடியும் என்றும் நீதியரசர் உடலகமவுடனான சந்திப்பின் போது தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில் சாவகச்சேரி நீதிமன்றின் ஓர் அங்கமாக இலவச சட்ட உதவி மன்றம் மற்றும் சமுதாய சீர்திருத்தப் பிரிவு ஆகியன ஆரம்பிக்கப்பட்டு செயற்படும் என்றும் அறிவிக்கப் படுகிறது. (ஒ-ஐ-207)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்தார்.

இன்று தபால் மூல வாக்களிப்புத் தினமானாலும், வாக்களிக்கத் தவறுபவர்கள் எதிர்வரும் 23ஆம் திகதி மாலை 4 மணிக்குள் வாக்களித்து அதனை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்குக் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்வது அவசியம் என தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை -

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் இன்று இடம்பெறவுள்ள தபால் மூல வாக்களிப்புக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.சு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

உதவித் தேர்தல் ஆணையாளர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 163 நிலையங்களில் 5 ஆயிரத்து 152 பேர் வாக்களிக்கவுள்ளனர். இன்று காலை முதல் மாலை வரை திணைக்களங்களில் இந்தத் தேர்தல் இடம்பெறவுள்ளது. இதற்காக கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு 11 அலுவலர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். (ஒ-சி-15)

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதை அடுத்து துரித நடவடிக்கை மேற்கொண்ட தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய, பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட்டை நேற்றைய தினமே யாழ். குடாநாட்டுக்கு உடனடியாக அனுப்பி வைத்தார்.

பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தலைமையில் யாழ். செயலகத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள விசேட கூட்டத்தில் யாழ். மாவட்டத்துக்குப் பொறுப்பான உயர் இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் கலந்துகொள்வர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பிரதிநிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் கலந்து கொள்வார் என கூட்டமைப்பின் வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இதேவேளை -

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு செய்த முறைப்பாட்டை அடுத்து உடனடி நடவடிக்கைக்காகவே யாழ். தேர்தல் அலுவலகத்துக்கு பிரதித்தேர்தல் ஆணையாளர் மொஹமட்டை தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அனுப்பி வைத்துள்ளார்.

(ஒ-ஐ-சி)

# புகலிடக்காரர்களின் கோரிக்கையை நியூஸிலாந்து ஏற்றுக்கொள்ளாது

கொழும்பு, ஜூலை 12

நியூஸிலாந்துக்கு வரும் வழியில் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப் பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த சுமார் 87 புகலிடக் கோரிக்கையாளர்களும் வரவேற்கப்படவில்லையென அந்த நாட்டு பிரதமர் ஜோன் கீ தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை இந்தோனேஷியாவில் டன்ஜீங் பனாங் கடற்பரப்பில் இந்த அகதிகளை ஏற்றிச்சென்ற கப்பல் நங்கூரமிட்டு நின்றபோது, அகதிகள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு இந்தோனேஷியாவில் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர். அவர்கள் கப்பலிலிருந்து இறங்குவதற்கும் மறுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.புகலிடக் கோரிக்கையாளர்களின் நிலைமை குறித்து எங்களுக்குத் தெரியும். ஆனால் அவர்களுக்கு நியூஸிலாந்து உதவியளிக்காதென நியூஸிலாந்துப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அகதிகளில் சிலர் நியூஸிலாந்துக்கு வரவேண்டுமெனக் கூறி கொடிகளையும் பதாகைகளையும் தாங்கியவாறும் காணப்படுவதை என்னால் விளங்கிக் கொள்ள முடியும். ஆனால் அவர்கள் வரவேற்படவில்லையென்பதே எங்களது தகவல் என ஜோன் கீ மேலும் தெரிவித்தார். (ச)

## 1981 இல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் வந்த அவர் நேற்று முன்தினம் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்துக்குச் சென்று கலந்துரையாடினார். அண்மைய சம்பவங்கள் குறித்து விவரங்களையும் பெற்றார்.

கட்சியின் நிர்வாகச் செயலாளர் சி.வி.கே. சிவஞானம் கீர்த்தி தென்னக்கோனுக்குத் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

✱1981 ஆம் ஆண்டு மாவட்ட சபைத் தேர்தலின் போது தெற்கு அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்து அடாவடிகளில் ஈடுபட்டனர். யாழ்.நூலகம், நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் வீடு ஆகியன எரிக்கப்பட்டன. இவைபோன்ற சம்பவம் மீண்டும் அரங்கேறும் சூழலே தற்போது காணப்படுவதாக மக்கள் கருதுகின்றனர்.

✱ வன்செயல்கள் தொடரும் என்று மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

✱ மக்களை வாக்களிக்கச் செய்யாமல் தடுப்பதற்கு அச்சநிலை தோற்றுவிக்கப்படுகிறது.

✱ அரச வளங்கள், அரச உத்தியோகத்தர்கள் தேர்தல் பிரசாரத்துக்குத் தாராளமாகப் பயன்படுத்தப்படுகின்றன. (ஒ-ஐ)

# மரண அறிவித்தல்



## வேலும்மயிலும் இலட்சுமியம்மா

இன்பர்சிட்டி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலும்மயிலும் இலட்சுமியம்மா நேற்று (11.07.2011) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வவிநாயகம் வேலும்மயிலும் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, கதிரமலை, தம்பிராசா ஆகியோரின் சகோதரியும் விசுவலிங்கம், செந்திவேல், ஆனந்தவேல், சாந்த லிங்கம், தங்கலட்சுமி, தனலட்சுமி, அமிர்தலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயும் வி.மலர், செ.மகாலட்சுமி, ஆ.சுபத்திரா, சா.பராசக்தி, ம.கணபதிப்பிள்ளை, ம.நந்தகுமார், த.சந்திரதாஸ் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2011) செவ்வாய்க்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9 மணிக்கு சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

இன்பர்சிட்டி, பருத்தித்துறை.


# பங்களிப்பின் பரிணாமம்

## வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டம்

அண்மையில் அனைவராலும் அறியப்பட்ட வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டமானது உலக வங்கியினதும், இலங்கை அரசாங்கத்தினதும் அனுசரணையுடனும், நிதி வழங்கலுடனும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளூர் சேவைகளை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்படும் ஒரு திட்டமாகும். கணக்கறிதகைமையுடன் வகைகூறக்கூடிய வகையில் இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி மன்றங்களால் வழங்கும் உள்ளூராட்சி உட்கட்டுமான சேவைகளினை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் ஆரம்ப அபிவிருத்திக் குறிக்கோளாகும். இதன் மூலம் துரித அபிவிருத்தி, நவீனமயமான போக்குவரத்து வசதிகள், கல்வி வசதிகள், சுற்றுச்சூழல், சுகாதாரமேம்பாடு, தூய்மையான குடிதண்ணீர் திட்டம் என்பவற்றில் நிறைவு பெற்ற அபிவிருத்தி அடைந்த நகராக மாற்றுவதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்தத் திட்டத்துக்கு பொது மக்களாகிய உங்களது பூரண பங்களிப்பும், ஆலோசனைகளும் வேண்டப் படுவதுடன் இந்தத் திட்டத்தின் வெற்றியானது உங்களது கண்காணிப்பிலும் பாதுகாப்பிலுமே தங்கியுள்ளது. குறிப்பாகப் பெண்களின் பிரசன்னம் இங்கு முக்கியமானதொரு விடயமாகக் கருதப்படுவதுடன் இவர்களின் கருத்துகள், விருப்பங்கள் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இவர்களின் பங்களிப்புக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் வீதிகள், சந்தை வசதிகள், கிராமிய மின் இணைப்பு வசதிகள், சமூக கட்டமைப்பு வசதிகள், குடிதண்ணீர் வசதிகள், சுகாதாரம், ஆரோக்கியம், சூழல் பாதுகாப்பு, நீர் மின்வலு, மற்றும் ஏனைய வசதிகள் விரைவில் அனைவரையும் சென்றடையவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தை நான்கு வருடத்தில் செயல்படுத்தும் வகையில், நல்லூர் பிரதேச சபையின் பின்வரும் திட்டங்களுக்கு முதற்கட்டமாக (2011ஆம் ஆண்டு ) பணம் விடுவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1) மணிப்புரி வீதி, அரியாலை | 7.45 மில்லியன் |
| 2) கேணியடி வீதி, கொக்குவில் | 6.27 மில்லியன் |
| 3) மணிப்புரி இணைப்பு வீதி, அரியாலை | 8.44 மில்லியன் |
| 4) மணிப்புரி 8ஆம் குறுக்கு வீதி, அரியாலை | 6.89 மில்லியன் |

இதன் பிரகாரம் ஆரம்ப கட்டமாக அரியாலை, மணிப்புரி வீதி வேலையின் ஆரம்ப நிகழ்வு 13-07-2011ஆம் திகதி மிகக் கோலாகலமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. இதனைத் தொடர்ந்து வரும் 2012, 2013 ஆம் ஆண்டுகளுக்கு ஏறத்தாழ 30 மில்லியன் ரூபா வீதம் ஒதுக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் நல்லூர் பிரதேச சபை வாழ் மக்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என்பதில் ஐயமில்லை.



அரியாலை, மணிப்புரி வீதி வேலை தொடர்பாக மக்களுடனான கலந்துரையாடலின் போது

நல்லூர் பிரதேச சபை. (சி/171) (24-53) செயலாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எந்தப் பக்கம் ஓடும் இந்த வண்டி?

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ - மூனைச் சந்தித்து வந்த கையோடு, நாட்டில் இரண்டாவது பிரதம கட்சியாக விளங்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், இப்போதைய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க திடீர் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

சர்வதேச அழுத்தங்களில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கும் தாம் - தமது கட்சி - ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்றும் அவர் திருவாய் மலர்ந்துள்ளார்.

இம்மாதம் ஐந்தாம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் செய லாளர் நாயகம் பான் கீ - மூனை, ராஜீக வழமைகளுக்கு மாறாகச் சந்தித் துப் பேசிய வேளை, அவர் வெளியிட்ட கருத்துக்கள் அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்கும் வகையில் அமைந்திருந்தது என்பதை இப்பத்தியில் சுட்டிக்காட்டி இருந்தோம். அதனை மெய்ப்பிக்கும் வகையில் அவரது சுகததாச நினைவு நிகழ்வு உரை அமைந்துள்ளது.

எனினும் -

கொழும்புக் கூட்டத்தில் ரணில் தெரிவித்த தகவல்கள், யோசனைகள் ஊன்றிக் கருத்தில் எடுக்கப்பட வேண்டியவை.

★ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களை முன்னெடுத்து நிலையான அரசியல் தீர்வை வழங்க வேண்டும்.

★ போரின் இறுதிக்கட்டம் தொடர்பில் அரசு கவலையை வெளியிட வேண்டும்.

★ இலங்கை சர்வதேச நிகழ்ச்சி நிரல்களுக்குள் உள்ளீர்க்கப்பட்டுள்ளதாகவும், எனவே அதற்கமையவே பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் ஐ.நாவின் செயலாளர் என்னிடம் தெரிவித்தார்.

★ 2009 ஆம் ஆண்டு பான் கீ- மூன் இலங்கைக்கு விஜயம் செய்த போது, போரின் இறுதிக்கட்டம் தொடர்பில் ஆராயவும் விசாரணை நடத்தவும் அரசாங்கம் இணக்கம் தெரிவித்தது. ஆனால் அரசு அவ்வாறு செய்ய வில்லை.

★ அதனாலேயே ஐ.நா. பொதுச் செயலாளர் தமக்கு யோசனை வழங்க நிபுணர் குழுவை நியமித்தார். நிபுணர் குழுவின் அறிக்கை வெளிவந்ததும் அரசாங்கம் கடுமையாக விமர்சித்தது. ஆனால் இப்போது ஐ.நாவுடன் பேச்சுக்களை நடத்துகிறது.

★ சர்வதேசத்துடன் பேச்சுக்களை நடத்தவேண்டியதில்லை. நமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்வோம் என ஒரு சிலர் கூறுகின்றனர். இந்தத் தர்க்கம் தவறானது. மேற்குலகின் உதவிகள் கிடைக்காவிடில் நாடு பின்னடைவு காணும். மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

★ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்சினை இது என்று எமது கட்சியில் உள்ள சிலர் கூறுகின்றனர். அது தவறு. இப்பிரச்சினை நாட்டைப் பாதிக்கும். நாட்டின் நற்பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும்.

★ ஆகையால் இதனைத் தீர்த்து வைப்பதில் எமக்கும் பொறுப்பு உள்ளது. ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை குறித்து தனது நிலைப்பாடு என்ன என்பதனை, முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன என்பதனை அரசு அறிவிக்கவேண்டும்.

★ அவ்வாறு அறிவித்தால் அரசின் முன்னுள்ள சவாலை எதிர்கொள்ள, அதற்கு ஒத்துழைப்பு வழங்க ஐக்கிய தேசியக்கட்சி தயா ராக உள்ளது.

★ செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு கூடவுள்ளது. ஆகையால் காலத்தை இழுத்தடிக்காது அரசு எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து தீர்வு காண முன்வரவேண்டும்.

★ அதற்கு முன்தாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வுகாணவேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே சர்வதேசத்துக்குப் பதில் அளிக்க முடியும்.

இந்த நாட்டின் பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் என்று கூறுமளவுக்குத் தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசுடன் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாக ரணில் விக்கிரமசிங்க கூறுவது கவனத்தில் கொள்ளக்கூடியதே.

பதவியில் இருக்கும் கட்சி ஒரு தீர்வைக் கொண்டுவரும் போது, அதற்கு எதிராக சிங்கள மக்களைத் தூண்டி, உணர்ச்சிகளைக் கிளறி அதனைப் படுதோல்வியுறச் செய்வது தென்னிங்கையின் இரண்டு பிரதான கட்சிகளினதும் வரலாறாகிவிட்டது.

பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தம் என்பன முறையே செயலிழந்தும் அரைவேக்காட்டில் கிடப்பதற்கும் இதுவே பிரதான காரணம்.

இப்பொழுது கூட, சமீப காலம் வரை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்குக் கூடுதலாக தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்கப்போவதாக கூறிவந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, திடீரென தோசையைத் திருப்பிப் - புரட்டிப் - போடுவது போன்று, ஒன்றும் கிடையாது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே சகலதையும் தீர்மானிக்கும் என்று பேரொலி எழுப்புகிறார்.

இதற்கான காரணம் வெளிப்படையானது. தாம் தமிழர்களுக்குச் சேரவேண்டியதை நியாயமாகச் செய்தாலும், ஐக்கிய தேசியக் கட்சி அதனைக் கையிலெடுத்து சிங்கள மக்களைத் திசைதிருப்பி தனது எதிர்கால அரசியல் செல்வாக்கைக் குறைத்துவிடும் என்ற அச்சம் அவருக்கு!

இத்தகைய பின்புலத்தில், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசுடன் ஒத்துழைக்கத் தமது கட்சி தயார் என்று ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பது வரவேற்கத் தக்கது. எனினும் இது அவரது சொந்தக் கருத்தாக இல்லாமல், ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தியோக பூர்வமான முடிவாக மாறவேண்டும்.

போர்க்குற்றச் சாட்டு என்ற மிக இறுக்கமான பூட்டிலிருந்து சற்றேனும் அரசு ஆசுவாசுப் படுத்திக்கொள்ள, ரணிலின் யோசனையையும் ஆதரவையும் இருகரம் நீட்டிப் பற்றிக்கொள்ளுமா என்பதிலேயே ஆக்கபூர்வமான விளைவு தங்கி உள்ளது.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்ற வண்டியை அரசாங்கம் எந்தத் திசையை நோக்கிச் செலுத்தும்?

# நல்லூர் பாலகதிர்காம ஆலயத்தின் ஆடிவேல் வீதியுலா மூன்று தினங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம ஆலயத்தின் ஆடிவேல் விழா எதிர்வரும் 16 ஆம், 17 ஆம், 18ஆம் திகதிகளில் பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்பநாளான எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆடிவேல் வீதியுலா ஆரம்பமாகிப் பருத்தித்துறை வீதி வழியாக வீரமாகாளி அம்மன் ஆலயத்துக்குச் சென்று அங்கிருந்து யாழ் வீதியூடாக மாலை 6.30 மணிக்கு வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலைச் சென்றடையும்.

பின்னர் மறுநாள் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு புறப்படும் ஆடிவேல் ஊர்வலம் காங்கேசன் துறைவீதி வழியாக வண்ணை நாச்சிமார் அம்மன் ஆலயத்துக்குச் சென்று அங்கிருந்து மாலை 6.30 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப் பதி முருகன் ஆலயத்தை அடையும்.

மறுநாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு திருநெல்வேலி வழியாக அரசடி சிவகாமசுந்தரி அம்மன் ஆலயத்தைச் சென்றடையும் ஆடிவேல் ஊர்வலம் அங்கிருந்து கல்வியங்காடு ஊடாக ஸ்ரீ பாலகதிர்காம ஆலயத்தைச் சென்றடையும்.

யாழ்.நகரில் மூன்று தினங்கள் தொடர்ச்சியாக இடம்பெறும் ஆடிவேல் வீதியுலாவில் பக்தர்களைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (த-7-26)

# தேவேந்திரமுனை பஸ்சேவைக்கு ஒருவழிக் கட்டணமாக 771 ரூபா

வடமராட்சி, ஜூலை 12

பருத்தித்துறையிலிருந்து தேவேந்திர முனைக்கு நடைபெற்றுவரும் பஸ் சேவைக்கு ஒரு வழிக் கட்டணமாக 771 ரூபா அறவிடப்பட்டு வருகிறது.

தினமும் பருத்தித்துறையிலிருந்து அதிகாலை 5.30 மணிக்கு புறப்படும் பஸ் தேவேந்திர முனையை இரவு 9 மணிக்கு சென்றடையும்.

தேவேந்திர முனையிலிருந்து அதிகாலை 4.30 மணிக்கும் புறப்படும் பஸ் இரவு 8.00 மணிக்கு பருத்தித்துறையை வந்தடையும்.

பருத்தித்துறை - தேவேந்திரமுனை பாதையில் சேவையில் ஈடுபடும் இரு புதிய பஸ்களும் லீசிங் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கொடிகாமம், கிளிநொச்சி, வவுனியா, அநுராதபுரம், புத்தளம், நீர்கொழும்பு, கொழும்பு ஊடாக இந்தச் சேவைகள் இடம்பெற்றுவருகின்றன. (த-232)

# நவீன வசதிகளுடன் நெடுந்தீவில் விரைவில் கலாசார மண்டபம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

நெடுந்தீவில் கலாசார மண்டபம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலாசார மண்டபத்தை நவீன வசதிகளுடன் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மண்டபத்தை அமைப்பதற்கான முதற் கட்டப்பணிகள் விரைவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இந்தக் கலாசார மண்டபத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. (த-26)

# மாநகர வீதிகளுக்கு 'காப்பெற்' ஆரம்ப நிகழ்வு நாளை காலை

யாழ். நாவலர் வீதி, கோயில் வீதி ஆகியவற்றைக் 'காப்பெற்' வீதிகளாக அமைக்கும் நிகழ்வுகள் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு வைபவ ரீதியாக இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வு கைலாச பிள்ளையார் கோயில் முன்பாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியின் கீழ் இந்த வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. 'காப்பெற்' வீதியாகப் புனரமைக்கப்படவுள்ள இந்த வீதிகளின் ஆரம்ப நிகழ்வில் பொது மக்களைக் கலந்து சிறப்பிக்குமாறு யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அழைப்பு விடுத்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியின் கீழ் வேம்படி வீதி உட்பட 42 வீதிகள் யாழ். மாநகர சபைப் பகுதியின் 'காப்பெற்' வீதிகளாக மாற்றப்படவுள்ளன. (த-7)

# பேராசிரியர் சிவத்தம்பியின் மறைவு தமிழ் இலக்கிய உலகுக்கு பேரிழப்பாகும்

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் இத் திடீர் மறைவானது தமிழ் உலகுக்கு ஏற்பட்ட ஓர் பேரிழப்பாகும்.

எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் எனக்கு ஒரு வயது மூத்த மாணவனாக, கொழும்பு ஸாகிரா கல்லூரியின் தமிழ் மன்றத் தலைவராக இருந்த காலம் தொடக்கம் அறிமுகமானார். அந்தக் காலத்திலேயே அவர் ஸாகிரா கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரால் மிகவும் மதிக்கப்பட்டும் விரும்பப்பட்ட ஒருவராகவும் விளங்கினார்.

ஸாகிரா அதிபர் அஸீஸ் அவர்களால் கொடுக்கப்பட்ட ஊக்கத்தின் காரணமாக அவர் பாடசாலை நாள்களில் பல விழாக்களை ஒழுங்கு செய்தார். அவற்றில் இன்றும் என்னால் நினைவு கூரத்தக்க ஒன்று அப்பொழுது இந்தியாவில் மிகவும் புகழ் பெற்ற தமிழ் சஞ்சிகையான கல்கி' வார இதழின் ஆசிரியரான கிருஷ்ண மூர்த்தி அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பெரு வரவேற்பு நிகழ்வாகும். அன்று தொட்டு அவருடனான உறவானது பல ஆண்டுகாலம் நீடித்து நின்றது. அவருடைய வகுப்புத் தோழர்களாக 'தினகரன்' தமிழ் தினசரியின் பிரதம ஆசிரியராக பதவிவகித்த காலஞ்சென்ற சிவ குருநாதன் ரட்னநாதன், இடது சாரிக்கட்சியின் வாராந்த சஞ்சிகையான 'தேசாபிமானி' யின் ஆசிரியராக விளங்கிய எச்.எம்.பி மொகைய தீன் மற்றும் றோயல் கல்லூரியில் கல்வி கற்று பின் யாழ். பல்கலைக்கழகத் தின் துணை வேந்தராகப் பதவி வகித்த காலஞ் சென்ற கலாநிதி கைலாசபதி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ் இலக்கிய சமூகத்துடன் இணைந்து அவரது குடும்பத்தினர், உறவினர் மற்றும் நண்பர்களின் துன்பத்தில் நானும் பங்கு கொள்ளும் இந்த வேளை இவ்வாறான ஒரு தமிழ் அறிஞர் காலத்தில் நானும் வாழ்ந்தேன் என்று பெருமிதம் கொள்கின்றேன். அன்னார் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றேன்- என்றுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர சிகிச்சை, விபத்துப் பிரிவு யாழ்.ஆஸ்பத்திரிக்கு புதிய கட்டடம்

## பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம் ஜூலை 12 யாழ்.போதனா வைத்திய சாலையில் பயன் படுத்தப் படாமல் உள்ள இரண்டு மாடிக்கட்டடம் ஒன்று இடிந்து விழும் நிலையிலுள்ளது. அந்தக் கட்டடத்தை இடித்து அந்த இடத்தில் ஐந்து மாடிக் கட்டடம் ஒன்றை நிர்மாணித்து அதில் அவசர கிசிக்கைப் பிரிவு மற்றும் விபத்துப் பிரிவு என்பவற்றை இயங்க வைப் பதற்குக் கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித் தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

குறித்த இரண்டு மாடிக் கட்டடத்தில் முன்னர் மருத்துவ விடுதி இயங்கி வந்தது. அது பாழடைந்துள்ளதால் தற்போது பயன் படுத்தப்படாமல் கை விடப்பட்டுள்ளது. எனவே அதனை இடித்து அந்த இடத்தில் ஐந்து மாடிக்கட்டடம் ஒன்றை நிறுவுவது தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டு வருகின்றது. இது பற்றி கொழும்பிலுள்ள அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தவுள்ளோம்.

ஐந்து மாடிக்கட்டடம் நிர்மாணிக்கப்படும் பட்சத்தில் அதில் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் விபத்துப் பிரிவு என்பவற்றை உரிய வசதிகளுடன் இயங்க வைக்க முடியும் என்றார்.

இந்தக் கட்டடம் யாழ். போதனா வைத்தியசாலையில் சிறுவர் மருத்துவ விடுதிக்குப் பின்புறமாக மின்சார நிலைய வீதியை அண்மித்ததாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# பேராசிரியர் சிவத்தம்பிக்கு யாழ்.பல்கலையில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 12 தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் அரும்பணியாற்றிக் கடந்த வாரம் இறைபதம் அடைந்த பேராசிரியர் கா.சிவத்தம்பியின் அஞ்சலி நிகழ்வுகள் நேற்றுக் காலையும் நண்பகலும் யாழ். பல்கலைக் கழகத்தில் இடம் பெற்றன.

கடந்த வாரம் கொழும்பில் இறைபதம் அடைந்த பேராசிரியர் கா. சிவத்தம்பியின் அஞ்சலி நிகழ்வுகள் நேற்று முற்பகல் 11 மணிக்கு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின் ஏற்பாட்டில் பேராசிரியர் சிவநாதன் தலைமையில் ஆரம்பமாகியது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் பேராசானின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இந்த நிகழ்வில் இரங்கல் உரைகளை துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழக வணிக மற்றும் முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் கே.தேவராஜா ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடந்து இரங்கலுரைகளை வணிக பீடத்தின் சந்தைப்படுத்தல் துறைகளின் தலைவர் இ.ரட்ணம், பேராசிரியர்கள் நிகழ்த்தினார்கள்.

இந்த நிகழ்வு யாழ்.பல்கலைக் கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நண்பகல் 12 மணிக்கு பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் விஞ்ஞான, கலை, வர்த்தக மாணவர் ஒன்றியங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் இதில் உரை நிகழ்தினர். (த-319)

## தமிழ் வளர்த்த பெருமகனுக்கு...



சிரம் தாழ்த்தி: யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடந்த அஞ்சலி நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கின்றார். (த-319)

# நட்டத்தில் இயங்கும் சங்கங்களின் நிர்வாகக் கட்டமைப்பில் மாற்றம்

## கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 12 யாழ்.குடாநாட்டில் நட்டத்தில் செயற்பட்டு வரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் கட்டமைப்பபை மாற்றியமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஊழியர்களுக்கு மாதாந்தச் சம்பளக்கொடுப்பனவை சரியாக வழங்கமுடியாது பல சங்கங்கள் பெரிதும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இந்தச் சங்கங்களின் நிர்வாகங்களில் உள்ள சீர்கேடே இதற்குக் காரணமாக அமைந்துள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனை அடுத்து சங்க நிர்வாகக் கட்டமைப்பில் முதுகெலும்பாகவுள்ள பொது முகாமையாளர் பதவியைத் தகுந்தவர்களிடம் வழங்குவதற்கு கூட்டுறவு அபிவிருத்தித்திணைக்களம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

முதற்கட்டமாக புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் பதவி மாற்றியமைக்கப்படவுள்ளது. அத்துடன் நெடுந்தீவுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளரையும் மாற்றிப் புதிய ஒருவரை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பொதுமுகாமையாளர் பதவி மாற்றத்தின் மூலம் பல சங்கங்கள் இப்போது வெற்றிகரமாக இலாபத்தில் செயற்பட்டு வருவதாக கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-26)

# கூரைத் தகரங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை12 வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்றம் நடைபெற்ற வெற்றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப் படையில் கூரைத் தகரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தால் ஒரு குடும்பத்துக்கு 12 தகரங்கள் வீதம் இவை வழங்கப்பட்டுள்ளன. (த-78)

# வட்டுக்கோட்டை பொலிஸார் இரவு ரோந்து

யாழ்ப்பாணம், ஜூலை 12 வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வேட்பாளர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து இரவு நேர ரோந்து நடவடிக்கையை முடுக்கிவிட்டுள்ளதாக அந்தப்பகுதி பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த ரோந்து நடவடிக்கை கடந்த 1 ஆம் திகதி தொடக்கம் சிவில் மற்றும் பொலிஸ் சீருடையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ளூராட்சி வேட்பாளர்களுடனான கூட்டம் ஒன்று பிரதேச பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வின் போது பொலிஸாரின் ரோந்து நடவடிக்கை குறித்து அறிவிக்கப்பட்டது.

இரவுவேளைகளில் இனந்தெரியாதவர்கள் வேட்பாளர்களின் வீடுகளின் மீது தாக்குதல் நடத்துவதுடன் அவர்களை அச்சுறுத்தியும் வருகின்றனர். இந்த அசம்பாவிதங்களைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (த-10-04)

# காரைநகர் வாசி விபத்தில் பலி

காரைநகர், ஜூலை 12 காரைநகரில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவம் ஒன்றில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்து அந்த இடத்திலேயே மரணமானார்.

சம்பவத்தில் காரைநகர் விளானை கணவோடையைச் சேர்ந்த காசிநாதன் குலசேகரம் (வயது-72) என்பவரே மரணமாகியுள்ளார். இவர் ஏழு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

சம்வம் குறித்து தெரியவருவதாவது:

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தது. எதிரில் திருமணச் சடங்கில் கலந்து விட்டு மோட்டார் சைக்கிளில் பிரஸ்தாப நபர் வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை காரைநகர் கிழக்கு வீதியில் பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகின. அந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த முதியவர் சம்பவ இடத்தில் பலியானார்.

பஸ் சாரதியை ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்ததுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். (ஒ-10-250-325)

# கைதடியில் விரைவில் புதிய மின் பிறப்பாக்கி

யாழ்ப்பாணம், ஜூலை 12 கைதடி நகர்ப்பகுதியில் புதிய 160 கிலோ வாட்ஸ் மின் பிறப்பாக்கி வெகுவிரைவில் பொருத்தப்படவுள்ளது.

கைதடிப் பகுதியில் அண்மைக்காலமாக வர்த்தக நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், வங்கிகள் போன்றன புதிதாக திறக்கப்படுவதால் இவற்றுக்கான மின்சாரத்தின் தேவை அதிகரித்துள்ளது.

இதனை நிவர்த்தி செய்வதுக்கு சாவகச்சேரி இலங்கை மின்சாரசபை புதிய மின்மாற்றியை இணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-207)

# அரச நிகழ்வுகளுக்கு இ.போ.ச பஸ்கள் குடாநாட்டு பயணிகள் வீதிகளில் தவிப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 12 தற்போது குடாநாட்டிலும், கிளிநொச்சிப் பகுதியிலும் சூடுபிடித்துள்ள அரச திறப்பு விழாக்கள் மற்றும் அமைச்சர்களின் நிகழ்வுகள் ஆகியவற்றில் மக்கள் பங்கு பற்றுவதற்காக இ.போ.ச பஸ்கள் அரச தரப்பால் பயன்படுத்தப்படுவதால் நேற்றுத் திங்கட்கிழமையும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமையும் குடாநாட்டின் உள்ளூர் போக்குவரத்தில் சீரற்ற நிலை காணப்பட்டதாகத் தெரியவருகிறது. இந்தப் போக்குவரத்துச் சீரின்மையால் மக்கள் வீதிகளில் நீண்ட நேரம் காத்திருந்ததுடன் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

உள்ளூராட்சித்தேர்தல் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பகுதிகளில் அமைச்சர்கள் கலந்துகொள்ளும் திறப்பு விழாக்கள், நிகழ்வுகள் ஆரவாரமாக நடைபெற்று வருகின்றன.

இந்த விழாக்களில் அதிக மக்களைப் பங்குபற்றச் செய்வதற்கான போக்குவரத்துச் சேவையில் இ.போ.ச பஸ்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.

இதனால் குடாநாட்டு உள்ளூர் போக்குவரத்தில் கடந்த சில நாள்களாக சீரற்ற நிலையில் உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பல பஸ்சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுத் திங்கட்கிழமையும் காலை தொடங்கி மதியம் வரை பஸ்கள் குறைந்த அளவே சேவையில் ஈடுபட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இது தொடர்பாக பருத்தித்துறை டிப்போ முகாமையாளரிடம் நேற்றுத் தொடர்பு கொண்டுகேட்டபோது

ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்ற கூட்டத்துக்கு எமது பஸ்கள் சேவைகளில் ஈடுபட்டன.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சந்நிதி - அச்சுவேலி வீதித் திறப்புவிழாவிலும் எமது பஸ் ஒன்று சேவையில் ஈடுபட்டது.

பஸ்கள் இவ்வாறு சென்றமையால் உள்ளூர் போக்குவரத்தில் சீரற்ற நிலைமை ஏற்பட்டது. இதற்காக மனம் வருந்துகிறோம் - என்றார் அவர்.(த-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளின் உதவியுடன் குடாநாட்டில் 3 துறைமுகங்கள்

## கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ். மாவட்டத்தில் கரையோரங்களில் மூன்று துறைமுகங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்தார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற கிராமிய கடற்றொழில் சம்மேளனத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். மாவட்டத்தில் குருநகர், இன்பருட்டி, மயிலிட்டி ஆகிய இடங்களில் 3 துறைமுகங்கள் அமைக்கப்படவுள்ளன.

குருநகரில் புதிதாக அமைக்கப்படும் துறைமுகத்துக்கான நிதியுதவியை டென்மார்க் அரசு வழங்கியுள்ளது. அதேபோல் இன்பருட்டியில் அமைக்கப்படும் துறைமுகத்துக்கான நிதியுதவியை ஜப்பான் அரசு வழங்குவதாகக் கூறியுள்ளது. மயிலிட்டியில் ஏற்கனவே துறைமுகம் இருந்தமையால் அவற்றைப் புனரமைப்பதற்கான நிதியுதவியைக் கொரியா நாடு வழங்கியுள்ளது.

இந்த மூன்று துறைமுகங்களையும் அமைப்பதற்கு கிட்டத்தட்ட 2 வருடங்களேனும் தேவைப்படும். குருநகரில் அமைக்கப்படவுள்ள துறைமுகத்தின் கட்டுமானப் பணிகள் முதற்கட்டமாக மேற்கொள்ளப்படும் - என்றார். (த-313)

# நெடுந்தீவில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு புதிய விடுதிகள்

## 4 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 12

நெடுந்தீவில் 'நிக்கொட' உதவியுடன் ஆசிரியர்களுக்கான விடுதிகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ரூபா 40 லட்சம் செலவில் இந்த விடுதிகள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நெடுந்தீவில் கடமையாற்றும் வேறு இடங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் அங்கு தங்கி நின்று தமது கடமையைச் செய்யக் கூடியவகையில் வசதிகள் தற்சமயம் அங்கு இல்லை. இதனால் வெளியிடங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் இங்கு பணியாற்றுவதில் தயக்கம் காட்டி வருவதும் எப்படியாவது இடமாற்றம் பெற்றுத் திரும்பி விடுவதும் வழமையாக உள்ளது.

இதனால் பாடசாலைகளின் கல்வி நிலையிலும் வீழ்ச்சி ஏற்படுகிறது. இந்த நிலையை மாற்றி மாணவர்களின் கல்வி மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு வெளியிடங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் நெடுந்தீவில் தங்கி நின்று தமது பணியை முன்னெடுக்க வசதியாக ஆசிரியர்களுக்கான விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-7)

# யாழ். மாவட்டத்தில் விரைவில் 3,600 மலசல கூடங்கள்

யாழ்.மாவட்டத்தில் 3 ஆயிரத்து 600 மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக சமுர்த்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

யாழ். குடாநாட்டில் தற்போது மீள்குடியமர்வு பரவலாக இடம்பெற்று வருகின்றது. இதற்காக மக்கள் மீள்குடியமரும் பகுதிகளில் மலசல கூடங்களை அமைக்கும் பணிகளில் சமுர்த்தி அதிகாரசபை ஈடுபட்டுள்ளது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை, தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு ஆகியவற்றில் தலா 500 மலசல கூடங்கள் அமைக்கப்படவுள்ளன. ஏனைய 13 பிரதேச செயலர் பிரிவுகளில் 2 ஆயிரத்து 400 மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான தெரிவுகள் இடம்பெறவுள்ளதாகவும், தெரிவுகள் இரண்டு வாரங்களில் முடிவடைந்ததும் இதனை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-15-86)

## அனைத்தையும் அறியும்...



*எதிர்காலச் சந்ததி:* காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணயக் கண்காட்சியின் போது அதன் ஒருங்கமைப்பாளர் பேராசிரியர் ஸ்ரனிஸ்லஸ் சர்வதேச நாணயங்கள் தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கமளிக்கின்றார். (த-250)

# காரைநகர் மல்லிகைக் கிராமத்துக்கு மின்சாரம் பெற்றுத்தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 12

காரைநகர் மல்லிகைக் கிராமத்துக்கு மின்சார விநியோகத்தைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பிரதேச மக்கள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தை சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட மக்கள் கையொப்பமிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் கையளித்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

மல்லிகைக் கிராமத்துக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனால் இங்குள்ள பாடசாலை மாணவர்கள் கற்றல் செயற்பாட்டை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே இந்தப் பிரதேசத்துக்கான மின் விநியோகத்தை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுள்ளது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வடக்கின் வசந்தம் நிதி மூலமோ அல்லது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி மூலமோ விரைவில் இந்தப் பிரதேசத்துக்கு மின் விநியோகத்தை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மக்களிடம் உறுதியளித்துள்ளார். (த-60)

# சமூக, பொருளாதார மூலவளத் திட்டம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை12

வடமாகாணத்தில் முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்ட சமூக பொருளாதார மூலவளத் திரட்டுத் திட்டம் நாளை புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி தலைமையில் யாழ்.பொது நூலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து கொள்வார்.

வடமாகாணத்தில் வேலணை, வலி.மேற்கு, பருத்தித்துறை பிரதேச சபைகளும், பிரதேச செயலகங்களும் இணைந்து ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட சமூக பொருளாதார மூலவளத்திரட்டே இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம், ஆஸ்திரேலிய எயிட் நிறுவனம், வடக்கு மாகாண சபை, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகியன இணைந்தே இந்தத் திட்டத்தை [illegible] இரண்டு வருட காலமாக ஒருங்கிணைத்து இருந்தன. (த-302)

# யாழ். சங்கத்துக்கு சொந்தமான காணியில் அத்துமீறிக் குடியமர்வு

## அவர்களை வெளியேற்ற நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை12

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான காணியில் அத்துமீறிக் குடியேறி உள்ள மக்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு சங்க நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கொட்டடிப் பகுதியில் அமைந்துள்ள இந்தக் காணியில் குடியமர்ந்துள்ளோர் தொடர்பாகச் சங்கத்தின் நிர்வாகம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

சங்கத்துக்குச் சொந்தமான இந்தக் காணியில் மக்கள் சட்டவிரோதமாகக் குடியமர்ந்துள்ளமையால் அவர்களை வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தி உதவுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சங்கத்துக்குச் சொந்தமான இந்தக் காணி அதன் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்த இருப்பதால் அதனை உடன் பெற்றுத் தருமாறு ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-26)

# பரவைக்குளம் வீதியை புனரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 12

திருநெல்வேலி பரவைக்குளம் வீதியை உடன் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்குத் தேவையான மண் குவிக்கப்பட்ட நிலையில் திருத்த வேலைகள் தடைப்பட்டுள்ளமையால் மழை காலத்தில் தாம் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கப் போவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்சமயம் இந்த வீதியில் குவிக்கப்பட்டுள்ள மண்ணினால் வாகனப் போக்குவரத்துக்கு இடையூறுகள் உள்ளதாகவும், மழைபெய்ய ஆரம்பித்ததும் குவிக்கப்பட்ட மண் மழை வெள்ளத்தில் கரைந்து வீட்டு வளவுகளுக்குள் பரவக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே உடனடியாக திருநெல்வேலி சிவன் வீதியில் இருந்து குடியிருப்புகள் உள்ள பகுதி வரையாவது இந்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அல்லது குவிக்கப்பட்டுள்ள மண்ணை அகற்ற வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரியுள்ளனர். (த-7)

# பயிர்களைப் பாதுகாப்பதற்கு தோட்டங்களுக்கு மின் ஒளி

யாழ்ப்பாணம், ஜூலை12

விவசாய நிலங்களில் பயிரிடப்பட்ட விளை பயிர்களைப் பன்றிகளிடமிருந்தும் திருடர்களிடமிருந்தும் பாதுகாப்பதற்காக இரவு வேளைகளில் தோட்டங்களில் மின் குமிழ்கள் ஒளிர விடப்படுகின்றன.

மின்குமிழ்கள் கூடுதலாக வலி. கிழக்குப் பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான தோட்டங்களில் இரவில் ஒளிர்வதைக் காணமுடிகின்றது.

தோட்டங்களில் பயிரிடப்பட்ட பயிர்களைப் பன்றிகள் சேதமாக்குவதைத் தவிர்க்கவும், அவற்றை இரவில் திருடர்களிடம் இருந்து பாதுகாப்பதற்குமே இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளதாக அந்தப் பகுதி விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறுதோட்டங்களுக்கு மின் வசதி ஏற்படுத்தப்படுவதுடன் இரவில் விவசாயிகள் காவல் கடமையில் ஈடுபடுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் மிக அதிகமானவர்களுக்கு வாய் சம்பந்தப்பட்ட நோய்கள்

## 35 வயதுக்குக் குறைந்த 90 வீதமானோர் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 12 நாட்டுமக்களுள் 35 வயதுக்குக் குறைந்த 90 வீதம் வரையிலானோர் ஏதோவொரு வகையான வாய் சம்பந்தப்பட்ட நோயினால் அவதியுறுவதாக சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வு ஒன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இதனிடையே 50 வயதுக்குக் குறைந்த நபர்கள் மத்தியில் 27 மில்லியன் வரையிலானோருக்கு பற்துவாரங்கள் காணப்படுவதாகவும் சுகாதார அமைச்சின் பிரதிப்பணிப்பாளர் நாயகமான மருத்துவர் ஜயசுந்தர பண்டார தெரிவித்துள்ளார்.

எவ்வாறான போதிலும் 50 வயதுக்குக் குறைந்த நபர்களில் பெரும்பாலும் அனைவருக்குமே வாய் சம்பந்தப்பட்ட ஏதோவொரு நோய்க்குள் ளாகும் அறிகுறி நிலவுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் இந்த நாட்டிலுள்ள 12 வயதுக்குக் குறைந்த சிறார்களுக்கு இடையில் 74 வீதம் வரையிலான சிறார்களின் முரசுகள் நோய்த்தாக்கங்களுக்கு உள்ளாகியிருப்பதாக மேற்படி ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளதாகவும் மருத்துவர் ஜயசுந்தர கூறியுள்ளார்.

எனவே ஒவ்வொருவரும் தமது பற் சுகாதாரம் பற்றி கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும், குறைந்த பட்சமாக ஆண்டுக்கு ஒரு தடவையேனும் பல் மருத்துவரை நாடி பரிசோதித்துக் கொள்ளவேண்டும் என் றும் ஜயசுந்தர குறிப்பிட்டார்.

(ஒ-22)

அருள் கிடைக்கட்டும்...



நெடுந்தீவு நடுக்கு நிச்சி பெருக்கடி சித்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். (7)

# இந்தியாவில் பொறியியல் படிப்புக்கு 69 இலங்கையர்கள் விண்ணப்பம்

இந்தியாவில் பொறியியல் கற்கை நெறியை மேற்கொள்வதற்கு இலங்கையிலிருந்து 69 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் நடப்புக் கல்வியாண்டில் மேற்கொள்ளப்பட்ட கலந்தாய்வு மூலம் மேற்படி கற்கை நெறியில் இணைந்து கொள்வதற்காக 69 இலங்கை அகதிகள் விண்ணப்பித்துள்ளனர்.

தமிழக அரசின் அனுமதியின் பேரில் கலந்தாய்வு மூலம் ஒவ்வொரு ஆண்டும் இலங்கை அகதிகள் பொறியியல் படிப்புகளில் சேர்க்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் செல்லும் அகதி கள் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் பாடசாலைக் கல்வியை தமிழகத்தில் மேற்கொண்டிருக்க வேண்டும்.

இவ்வாறான நிபந்தனையின் அடிப்படையில் கலந்தாய்வு மூலம் பொறியியல் கற்கை நெறிக்கு இலங்கையர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர் எஎன்று இந்திய ஊடகங்களில் தகவல் வெளியாகியுள்ளது.

எனவே இலங்கை மாணவர்களுக்கு இது வரப்பிரசாதமாக அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டனின் சனல்-4 காணொளி; இந்திய அரசுக்கான அழுத்தம்

## டெக்கான் குரோனிக்கிள் பத்திரிகை தெரிவிப்பு

பிரிட்டனில் சனல்-4 ஒளி நாடாவின் பயங்கரமான காட்சிகள் இந்தியாவில் திரும்பத் திரும்பத் தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்படுகின்றமை இலங்கை தொடர்பாக இந்திய அரசு உறுதியாகச் செயற்பட வேண்டும் என்ற அழுத்தத்தை ஏற்படுத்தி இருப்பதாக டெக்கான் குரோனிக்கிள் பத்திரிகை தெரிவித்துள்ளது.

சென்னையில் செய்தி அலை வரிசையில் இந்தக் காட்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. பிரபல்யமானவர்கள் இந்தக் காட்சிகள் தொடர்பாகத் தமது கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

உலகில் பல நகரங்களில் ஒரே நேரத்தில் ஒளிநாடா காண்பிக்கப்பட்டிருந்தது. ஐ.நா.மீதும் முன்னணி நாடுகள் மீதும் இலங்கைக்கு எதிராகப் போர்க் குற்ற விசாரனையை ஆரம்பிப்பதற்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சியாக புலம் பெயர்ந்த தமிழர்கள் இதனை மேற்கொண்டிருந்தனர்.

பத்திரிகைகள், தொலைக்காட்சிகள்,வானொலி நிலையங்கள் இந்தக் கொடூரமான ஒளி நாடா தொடர்பான விமர்சனங்களைத் தெரிவித்து வருகின்றன என்று ஆஸ்திரேலியாவிலுள்ள இன்பத் தமிழன் வானொலியைச் சேர்ந்த பிரபாகரன் என்பவர் கூறியுள்ளார்.

இலங்கையில் இடம் பெயர்ந்த தமிழர்களுக்குத் துரிதமான புனர்வாழ்வை அளிக்க வேண்டும் என்ற சர்வதேசத்தின் போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு புதுடில்லி மீது அழுத்தம் கொடுப்பதற்காக ஜெயலலிதா மீது புதிய எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளனர்.

விரைவில் தமிழக முதலமைச்சரைச் சந்தித்து அவருக்கு நன்றி செலுத்த நாங்கள் எதிர்பார்த்திருக்கிறோம் என்று டெக்கான் குரோனிக்கின் பத்திரிகைக்கு அன்டனிதாஸ் தெரிவித்துள்ளார். (எ)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## திருமதி திருநாவுக்கரசு பார்வதிப்பிள்ளை

தோற்றம் 20.07.1938

மறைவு 12.06.2011



அன்புக்கு இலக்கணமே எங்கள் அம்மா!
ஆருயிர்களைத் தவிக்கவிட்டு எங்குதான் சென்றீர்களோ?
ஏங்கி நிதம் தவிக்கின்றோம்- அம்மாவின்
சிரித்த முகமும் சிங்காரப் பேச்சும்
உறவுகளை அரவணைக்கும் உன்னத அன்பும் - எம்
நெஞ்சில் என்றும் நிழலாடுகின்றதே.
நித்தம் நித்தம் உங்கள் நினைவு - எம்
நெஞ்சை வாட்டுதம்மா.
எங்கள் குடும்பத்தோர் நல் வாழ்விற்காய்
ஏணியாய் நின்றவரே
ஏன் இந்த அவலம் எங்களுக்கு!

ஆயிரம்தான் உறவிருந்தும் - அம்மா
உங்கள் அன்பிற்கு ஈடாகுமா?
ஏனிந்த அவலத்தை இறைவன் தந்தானோ?
எண்ணித்தான் பார்க்கின்றோம் - நீங்கள்
எம்முடன் வாழ்ந்த ஒவ்வொரு கணமும்
எமக்குச் சொர்க்கமம்மா - உங்கள்
நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் பசுமரத்தாணியாய்....
கால ஓட்டத்தில் எங்கள் அம்மா எம்முடன்
இன்னும் பல காலம் வாழ்ந்திருக்கலாம்
ஏன் இந்த அவசரமோ?
எம் உயிருள்ளவரை எங்கள் அம்மாவே
உங்களை நாங்கள் எங்கள் நெஞ்சங்களில் சுமந்திடுவோம்.
இதயக் கோயிலிலே இருத்திப் பூஜிப்போம் - எங்கள்
பார்வதி அம்மாவே பரமசிவன் கழலடியில்
அமைதிபெற இறைஞ்சுகின்றோம்.

★ இன்று [12.07.2011] செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில்நடைபெறும் ஆத்ம சாந்தி, வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

"ஸ்ரீரங்கம்"
374, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பாசத்துடன் நினைவுகூரும் குடும்பத்தினர்-
[[illegible], பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாடுகாத்து, நம் உரிமையை வென்றெடுப்போம்" நாளை தென்கிழக்குப் பல்கலைச் சமூகம் பிரகடனம்

அம்பாறை, ஜூலை 12

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் பேரவையும், கிழக்கு மாகாண சிவில் சமூகமும் ஒன்றிணைந்து "நாடு காத்து நம் உரிமையை வென்றெடுப்போம்" எனும் தலைப்பிலான பிரகடன நிகழ்வு நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாக முன்றலில் நடைபெறவுள்ளது.

முஸ்லிம்களின் எழுச்சி அரசியல் தீர்வு முயற்சியில் ஈடுபடும் தரப்புக்களுக்கான அழுத்தங்களாக மாற்றப்பட வேண்டும், அரசியல் அதிகாரங்களுடன் தொடர்புபடும் எந்த விடயத்திலும், முஸ்லிம்கள் ஒருமித்த நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும், அரசியல் தீர்வு முயற்சியில் முஸ்லிம்களுக்கும் சமவாய்ப்பு வழங்கப்பட வேண்டும், முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளை உறுதியுடன் செயற்பட்டு முஸ்லிம் தலைமைகள் வென்றெடுக்கவேண்டும், பாதிக்கப்பட்டதும், இன முரண்பாடுகளைத் தீர்க்கும் முயற்சியில் அனைத்துலக நாடுகள் பாரபட்சமாக நடந்து கொள்ளக் கூடாது போன்ற விடயங்களை வலியுறுத்தி இந்தப் பிரகடன நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நாளை காலை ஒலுவில் சந்தியில், ஒலுவிலின் தென்புறமுள்ள ஊர்களில் இருந்து வரும் மக்களும், களிஓடைப் பாலத்துக்கு அருகில் வட புறமுள்ள பிரதேசங்களில் இருந்து வரும் மக்களும் ஒன்று கூடி சுலோகங்களையும் பதாகைகளையும் ஏந்திய வண்ணம் முஸ்லிம்களின் உரிமைக்கான கோஷமிட்டு ஊர்வலமாக தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்றலுக்கு வந்தடைவர்.

அதன் பின்னர் அங்கு கூடும் மக்கள் மத்தியில் "நாடு காத்து நம் உரிமையை வென்றெடுப்போம்" என்னும் பிரகடன நிகழ்வு இடம்பெறுமெனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அன்றைய தினம் 12 மணிவரை அலுவலகங்கள், வியாபாரத்தலங்கள், பாடசாலைகள் போன்றவற்றின் பணிகள் பிற்போடப்பட்டு நாடு, சமூக உரிமைக்கான முன்னெடுப்புக்கு உணர்வுபூர்வ ஒத்துழைப்பை வழங்குவதுடன், பிரகடன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (ச-30)

# உயர்தரப் பரீட்சைப் புள்ளித் திட்டம்; பல்கலை ஆசிரியர்கள் வழங்க மறுப்பு

கொழும்பு, ஜூலை 12

கல்வித்துறை சார்ந்த பல்கலைக்கழகப் பணியாளர்கள் இந்தவருடம்நடைபெறவுள்ள ஜீ.சி.ஈ பரீட்சை தொடர்பில் விடைத்தாள்களுக்கு புள்ளியிட அவசியமான புள்ளித் திட்டத்தை வழங்கமாட்டார்களென பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்தப் புள்ளித்திட்டம் இல்லாமல் உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு நடக்க முடியாதென பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிரி தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் விமர்சனமே பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனத்தின் உயர்மட்டக் குழு இந்த முறையை எடுக்க காரணமாகும் என தெரிவித்துள்ளார்.

அமைச்சர் குணவர்த்தன விரிவுரையாளர்களை அவமதித்துள்ளார். அத்துடன், எமது கோரிக்கைகளை அவதூராகப் பேசியுள்ளாரெனக் கூறிய கலா நிதி தேவசிரி, கல்வித்துறை சார்ந்த பணியாளர்களின் கோரிக்கை நியாயமானதென தெரிவித்துள்ளார். (ச)

# தொழில்புரியும் ஊழியர்களின் ஆயுள்காலம் குறைவடைந்தது

கொழும்பு, ஜூலை 12

இலங்கையில் தொழில் புரிவோரின் ஆயுள் காலம் குறைவடைந்து செல்வதாக ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதிக எண்ணிக்கையிலானவர்கள் உரிய முறையில் தமது உடல் ஆரோக்கியத்தை பராமரிப்பதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார பழக்க வழக்கங்களினால் தொழில்புரியும் ஊழியர்கள் தமது ஆயுள் காலத்தை சுருக்கிக் கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது. அதிகளவானவர் கள் இவ்வாறு உயிரிழப்பதனால் நாட்டின் பொருளாதாரத்துக்கு பாதக விளைவு களை உண்டு பண்ணும் என தெரிவிக்கப்படுகிறது.

தொற்றாத நோய்களினால் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீரிழிவு, இருதய நோய் போன்றவற்றினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒழுங்குமுறையான உணவுப் பழக்க வழக்கம், உடற் பயிற்சி போன்றவற்றின் மூலம் ஆயுள் காலத்தை நீடிக்க முடியும் என ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)



கொழும்பிலுள்ள அரச கட்டடங்களின் மதில்களை அகற்றும் திட்டத்தின் கீழ், கொழும்பு ரேஸ் கோர்ஸ் மைதானத்தின் மதில் இடித்து அகற்றப்படுகின்றது.

# ஜனசெவன திட்டத்தின்கீழ் 6 மாதங்களில் நாடுமுழுவதும் மேலும் 11, 000 வீடுகள்



ஜனசெவன வீடமைப்புத் திட்டத்தின்கீழ் இந்த வருடத்தின் 6 மாத காலத்துக்குள் நாடு முழுவதும் சுமார் பத்தாயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

அடுத்து ஆறு மாதத்துக்குள் மேலும் 11 ஆயிரம் வீடுகளை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நிர்மாணிக்கும் என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அண்மையில், மொரட்டுவை பிரதேச செயலாளர் கேட்போர் கூடத் தில் 50 குடும்பங்களுக்கு ஜனசெவன வீடமைப்புத் திட்டத்துக்கான கடன் வழங்கி வைக்கும் நிகழ்விலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவித்ததாவது:

மஹிந்த சிந்தனையின்கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களது வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமுகமாகவே ஜனசெவன 10 லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டம் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய கடந்த 5 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் 150 கோடி ரூபா ரூபா நிதி வீடமைப்புக் கடனாக 6 அரச வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இக்கடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 25 மாவட்ட அலு வலகங்கள் ஊடாக வீடற்ற மக்களுக்கு ஒரு லட்சம் ரூபா தொடக்கம் 4 லட்சம் ரூபாவரை குறைந்த வட்டிக்கு வீடமைப்புக் கடனாக வழங்கப்படுகின்றது. இதனடிப்படையில் மொரட்டுவையிலும் 50 குடும்பங்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ச)

# லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு சட்டத்தில் திருத்தம்

கொழும்பு, ஜூலை 12

லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது என்று நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் நடைமுறைச் சட்டம் போதுமானதாக இருக்கின்ற போதும், சுற்றி வளைப்புகளுடன் கூடிய சரத்திலேயே திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இதுதொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும், சட்டத் திருத்தம் தொடர்பிலான யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்து அனுமதியை பெற்றுக் கொள்ள உத்தேசித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

# எரிபொருள் அளவையில் மோசடி 3 நிலையங்களுக்கு 'சீல்' வைப்பு

## மாத்தளைப் பிரதேசத்தில்

மாத்தளை, ஜூலை 12

மாத்தளை நகரில் இயங்கி வரும் மூன்று எரிபொருள் விற்பனை நிலையங்களில் அளவையில் மோசடி செய்தமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அவற்றுக்கு 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

மூன்று லீற்றர் எரிபொருள் விநியோகத்தில் 25 மில்லி லீற்றர் குறைவாக காணப்பட்டமை நிறுத்தல் அளவை திணைக்கள அதிகாரிகளின் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த எரிபொருள் விற்பனை நிலையங்களின் பம்பிகளில் உள்ள அரச முத்திரைகள் அகற்றப்பட்டமையும் தெரியவந்துள்ளது.

பொதுமக்கள் தெரிவித்த இரகசியத் தகவல்களையடுத்து நகரிலுள்ள பிரபல்யமான எரிபொருள் விற்பனை நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

நாட்டிலுள்ள சில எரிபொருள் விற்பனை நிலையங்கள் இவ்வாறு அளவையில் மோசடி செய்கின்றன என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என அளவை நிறுவைத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாத்தளை நகரில் இடம்பெற்ற சுற்றிவளைப்பு சோதனையைப் போல் ஏனைய பிரதேசங்களிலும் நடத்தப்படும் என அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (ச)

# இந்தியக் கடற்படையால் கைதான இலங்கை மீனவர்களுக்கு அபராதம்

கொழும்பு, ஜூலை 12

இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள 10 இலங்கை மீனவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இந்திய விசாகபட்டணம் நீதிமன்றத்தினால் இவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என கடற்தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தியக் கடற்பிரதேசத்தில் அத்துமீறி பிரவேசித்து கடற்தொழிலில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலே இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.கடந்த ஏப்ரல் மாதம் தேவேந்திரமுனை, சிலாபம் ஆகிய பிரதேசங்களில் இருந்து இந்த மீனவர்கள் கடற்தொழிலுக்காக சென்றிருந்தனர்.

படகுகளுக்காக விசாகபட்டண நீதிமன்றத்தினால் 5 லட்சம் இந்திய ரூபா அபராதமாக அறவிடப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சபை செயலாளர்களிடம் கையளிக்கப்பட்ட தண்ணீர் பவுசர்கள் இராணுவத்திடம் ஒப்படைப்பு

## நாமல் எம்.பியின் செய்கையால் பலரும் ஆச்சரியம்

கிளிநொச்சி, ஜூலை 12

கிளிநொச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவினால் பிரதேச சபைச் செயலாளர்களிடம் கையளிக்கப்பட்ட தண்ணீர் பவுசர்கள் உடனடியாக இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகளுக்குப் பத்துத் தண்ணீர் பவுசர்களை வழங்கும் நிகழ்வில் நாமல் கலந்து கொண்டார். அதில் பிரதேச சபைச் செயலாளர்களிடம் தண்ணீர் பவுசர்களும் வழங்கப்பட்டன அங்கு உரையாற்றிய நாமல்:

''வெற்றிலைச் சின்னத்துக்கு வாக்களியுங்கள். இது போன்று இன்னும் பல அபிவிருத்திகளை உங்களுக்கு நாம் செய்வோம்'' எனக் கூறினார். உரையாற்றி முடிந்ததும் அங்கிருந்து புறப்படும் போது தண்ணீர் பவுசர்கள் பத்தையும் இராணுவத்தினரிடம் கையளியுங்கள் எனக் கூறியதுடன் அருகில் நின்ற இராணுவத்தினரைச் சுட்டிக் காண்பித்துவிட்டுச் சென்றுள்ளார். இந்தச் சம்பவம் கரைச்சிப் பிரதேச சபையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள பிரதேச சபைகளில் தண்ணீர் பவுசர்களுக்குத் தட்டுப்பாடு நிலவியதால் இவற்றை பெற்றுத் தரும்படி வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் ஆளுநரால் தண்ணீர் பவுசர்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அவை கடந்த வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஆளுநரால் கையளிக்கப்படவிருந்தன. ஆனால் பின்னர் இந்த நிகழ்வு பிற்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் அன்றைய தினமே நாமல் இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றியதுடன் தண்ணீர் பவுசர்களையும் கையளித்தார். இதன்போது ஆளுநருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை யெனத் தெரிய வருகின்றது. மேலும் இராணுவத்தினர் இனிமேல் தண்ணீர் விநியோகத்தை மேற்கொள்வார்களென நாமல் கூறியதாகவும் தெரிய வருகின்றது.

தாம் பெற்றுக்கொண்ட தண்ணீர் பவுசர்களைப் பிரதேச சபைச் செயலாளர்கள் உடனடியாகவே இராணுவத்தினரிடம் கையளித்தனர். இராணுவத்தினரும் அவற்றை எடுத்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் அங்கு நின்ற பலருக்கும் ஆச்சரியத்தை கொடுத்துள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-4)

## டைனமோ இல்லாத சைக்கிள்கள் பொலிஸாரால் பறிமுதல்

மன்னார், ஜூலை 12

மன்னார் நகரில் டைனமோ இல்லாத சைக்கிள்களை மன்னார் வீதிப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை பறிமுதல் செய்துள்ளனர்.

மன்னார் நகரப் பகுதியில் தெருமின்சாரம் இல்லாத பகுதிகளில் இரவு வேளையில் மறைந்து நின்ற வீதிப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸாரே டைனமோ இல்லாத சைக்கிள்களைப் பறிமுதல் செய்தனர். இரவு வேளையில் வெளிச்சம் இல்லாது சைக்கிள்களில் பயணிப்போரால் அதிக விபத்துக்கள் ஏற்படுவதால் இதனைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

(க-601)

## விழவு எப்போது...?



இதுவுமொரு வீதி: மன்னார் மூர்வீதிப் பள்ளி வாசலுக்குச் செல்லும் பிரதான வீதி மோசமாகச் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றது. (601)

## வீதியை ஆக்கிரமிக்கும் வாகனங்கள்

மன்னார், ஜூலை 12

மன்னார் மூர்வீதியிலுள்ள பிரதான வீதியில் அமைந்துள்ள அல் - அஸ்கர் மகா வித்தியாலயத்துக்கு முன்பாகத் தனியார் வாகனங்களை நிறுத்தி வைப்பதனால் அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியில் தனியாருக்குச் சொந்தமான பேருந்து ஒன்று தொடர்ந்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது போக்குவரத்துக்குப் பெரும் இடையூறாகவுள்ளதாகப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாகப் பாடசாலை மாணவர்களும், வீதியால் பயணிப்பவர்களும் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகப் பல முறை உரியவர்களிடத்தில் எடுத்துக் கூறியுள்ளபோதும் பயனெதுவும் கிட்டவில்லை யெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-601)

## மன்னாரில் நடமாடும் சேவை



மன்னார், ஜூலை 12

இந்தியாவில் பிறந்த இலங்கையைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான நடமாடும் சேவை கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் ஆரம்பமானது.

மன்னார் மாவட்டச் செயலகத்தினூடாக மன்னார் ஒப்பர் அமைப்பின் அனுசரணையுடன் இடம்பெற்ற மேற்படி நடமாடும் சேவைக்கு ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான ஸ்தாபனம் நிதியுதவியை வழங்கியிருந்தது.

முதல் நாளன்று மாந்தை மேற்கு, நானாட்டான், முசலி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கான சேவைகள் வழங்கப்பட்டன. மறுநாள் சனிக்கிழமை மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்குச் சேவைகள் வழங்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன், உதவி மாவட்டச் செயலாளர் பரமதாஸ், குடிவரவு குடியகல்வுத் திணைக்களங்களின் அதிகாரிகள், ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான ஸ்தாபன அதிகாரிகள் மற்றும் பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(க-601)

# திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் மாணவர்கள் மகிழ்வூட்டல் செயலமர்வு





முல்லைத்தீவு, ஜூலை12

முல்லைத்தீவு மாவட்டம் திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் மாணவர் மகிழ்வூட்டல் செயலமர்வு நடைபெற்றுள்ளதாகப் பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

இதன் ஓர் அங்கமாக கடந்த 6ஆம் திகதி தரம்- 1 ஐச் சேர்ந்த மணவர்கள் கிளிநொச்சிச் சந்தைப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மறுநாள் இவர்கள் பாடசாலையில் சந்தை அமைத்து வியாபாரத்தை மேற்கொண்டனர். பாடசாலைச் சமூகத்தினர் மாணவர்களிடம் பொருள்களைக் கொள்வனவு செய்து அவர்களை மகிழ்வித்தனர்.

மேலும் அன்றயதினம் அங்கு நடைபெற்ற நான்கு நாள்கள் கொண்ட மாணவர் மகிழ்வூட்டல் செயலமர்வில் வடமாகாண ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளரான செல்வி கே. உதயகலா மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோரும் மாணவர்களிடம் பொருள்களைக் கொள்வனவுசெய்து அவர்களை மகிழ்வித்தனர்.

மேலும் இந்தப் பாடசாலையில் 80 மாணவர்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்ட மாணவர் மகிழ்வூட்டல் செயலமர்வானது கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வில் வடமாகாண உள சமூகவியல் திட்ட இணைப்பாளரும், ஆசிரிய மத்திய நிலைய உதவி முகாமையாளருமான செல்வி கே. உதயகலா கலந்துகொண்டார. (க)

## மக்கள் குடியமர்ந்த தேவிபுரம் கிராமத்தில் பொருள்கள் சூறையாடப்படுவதாகத் தகவல்

முல்லைத்தீவு, ஜூலை 12

முல்லைத்தீவு மாவட்டம் தேவிபுரம் கிராமத்தில் மீள்குடியமர்ந்த மக்களில் சிலர் அயலிலுள்ள காணிகளுக்குள் சென்று அங்குள்ள பொருள்களைச் சூறையாடுவதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

முன்பு தேவிபுரத்தில் வசித்த மக்களில் சிலர் வெளிமாவட்டங்களில் தற்காலிகமாகத் தங்கியுள்ளனர். இதனால் இந்தப் பகுதியில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டபோது இவர்களால் சமுகமளிக்க முடியவில்லை.

இருநாள்கள் கழிந்து இவர்கள் தமது காணிகளுக்குள் சென்றபோது அங்குள்ள பொருள்கள் யாவற்றையும் சிலர் உழவு இயந்திரங்கள் மூலம் ஏற்றிச் சென்றுள்ளமை தெரியவந்தது.

கீழே வீழ்ந்து கிடந்த தேங்காய்கள், கொப்பறாக்கள் என்பவற்றை எடுத்துச் சென்றவர்கள் மரங்களிலிருந்த தேங்காய்களையும் விட்டுவைக்கவில்லை. அவற்றையும் பறித்து எடுத்துச் சென்றுள்ளனர்.

யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் கையில் கிடைத்தவற்றை எடுத்துச்சென்றனர். மீதிப் பொருள்களை அப்படியே விட்டுச் சென்றனர். ஆனால் இவற்றையும் சிலர் எடுத்துச் சென்றுவிட்டனர்.

தற்போது சிலர் ஆளில்லாத வீடுகளைப் பார்த்துப் பொருள்களைச் சுருட்டிச் செல்வதாகத் தெரியவருகின்றது.

எனவே பாதுகாப்புத்தரப்பினர் இந்த விடயத்தில் தலையிட்டு இந்தச் செயல்களைத் தடுப்பதோடு சூறையாடப்பட்ட தமது பொருள்களை மீட்டுத் தருமாறு பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

(க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச உதவிகள் கிடைக்காத நிலையில் மன்னார் சிறுநாவற்குளம் கிராம மக்கள்

மன்னார், ஜூலை 12
மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மன்னார்-உயிலங்குளம் பிரதான வீதியில் உள்ள சிறுநாவற்குளம் கிராமத்தில் மீள்குடியமர்ந்த மக்கள் எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றிப் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மக்கள் 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொடிய யுத்தத்தினால் இடம் பெயர்ந்து இந்தியா மற்றும் இலங்கையின் பல பகுதிகளிலும் வசித்து வந்தனர்.

தற்போது தமது கிராமத்தில் இவர்கள் மீள்குடியமர்ந்த போதிலும் இவர்களுக்கான அடிப்படை வசதிகள் எதுவும் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக இந்தக் கிராமத்தில் வசிக்கும் பெரியசாமி என்பவர் கருத்துத் தெரிவிக்கும் போது 1990 ஆம் ஆண்டு நாம் இடம் பெயர்ந்தோம். எமது கிராமம் இராணுவப் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்ததால் சுமார் 33 குடும்பங்களைச் சேர்ந்த165 பேர் கடந்த ஜூன் மாதமே குடியமர்ந்தோம்.



எமது வீடுகள் இருந்த இடமே தெரியாதவாறு தரைமட்டமாகி விட்டன. ஆனாலும் அடர்ந்த காடுகளின் மத்தியில் குடியமர்ந்தோம். காடுகளைத் துப்பரவாக்கி ஓலைக் குடிசைகளை அமைத்து வாழ்ந்து வருகின்றோம்.

ஆனால் நாம் குடியமர்ந்து ஒரு வருடம் கழிந்த நிலையிலும் எமக்கான வீட்டுத்திட்ட நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றார். ஆனால் எமது காணிகளைச் சுவீகரிக்கும் நோக்குடன் சில அரச அதிகாரிகள் செயற்பட்டு வருகின்றனர் என்று அங்கு வாழும் மக்கள் தெரிவித்தனர். மேலும் 20 குடும்பங்கள் இங்கு வரவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

மீள்குடியமர்ந்த இந்தக் கிராம மக்களுக்கு அரசினால் எந்த விதமான மீள்குடியமர்வு உதவிகளும் வழங்கப்படவில்லை. ஆனால் மடுச் சந்தியில் சிங்கள மக்களுக்கென எட்டு லட்சம் ரூபா பெறுமதியான நிரந்தர வீடுகள் அமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-601)

# தாக்குதலில் காயமடைந்த சாரதி யாழ். வைத்தியசாலையில் அனுமதி

கிளிநொச்சி, ஜூலை 12
சகதொழிலாளர்களால் வீடு புகுந்து தாக்கப்பட்ட ஓட்டோ சாரதி ஒருவர் தலையில் படு காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். தாக்குதலுக்குள்ளான இன்னொருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் கிளிநொச்சி தொண்டமான்நகர் 155 ஆம் கட்டைச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த 27 வயதான த.பாலரஞ்சன் என்பவரே காயமடைந்த நிலையில் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மற்றைய நபரான 65 வயதான செ. யோகேஸ்வரன் என்பவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தாக்குதலின் போது காயமடைந்த இந்த இருவரும் உடனடியாகக் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸார் அவ்விருவரையும் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதித்தனர். பின்னர் பாலரஞ்சன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். தொழில் ரீதியாக ஏற்பட்ட தகராறே இந்தத் தாக்குதலுக்குக் காரணமெனக் காயமடைந்தவர் தெரிவித்தார். (க-4)

## வானமே கூரையாக...



அவலங்களுக்குள் மழலைகள்: போரினால் அழிவடைந்த செம்மலை முன்பள்ளிக் கட்டடத்துக்கு முன்பாக மரத்தின் கீழிருந்து ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கல்வி கற்கின்றனர். (555)

# கிரவல் மீது தார் ஊற்றப்படும் வீதி

பூநகரி, ஜூலை 12
பூநகரிப் பிரதேசத்தின் முக்கிய வீதியொன்றுக்குக் கற்களுக்குப்பதிலாகக் கிரவல் போடப்பட்டுத் தார் ஊற்றப்படுவதால் இதன் எதிர்காலம் குறித்து மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் பல்லவராயன்கட்டு, கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, பொன்னாவெளி, பாலாவி ஆகிய கிராமங்களை இணைக்கும் பிரதான வீதியே இவ்வாறு கிரவல் போடப்பட்டு அதன் மீது தார் ஊற்றப்படுகின்றது.

பூநகரியில் போதியளவு கற்கள் உள்ள நிலையில் இவ்வாறு கிரவலை உபயோகித்து வீதி அமைக்கப்பட்டு வருகின்றமை இந்தப் பகுதி மக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வீதி ஆரம்பத்தில் கற்கள் பரவப்பட்டுத் தார் ஊற்றப்பட்டே அமைக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது கற்களுக்குப் பதிலாகக் கிரவல் இடப்பட்டுத் தார் ஊற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-496)

# வைர விழா

கிளிநொச்சி, ஜூலை 12
கிளிநொச்சி ஞானிமடம் அ.த.க.பாடசாலையின் வைர விழா இன்று நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருமதி தவமலர் கனகசபையின் தலைமையின் கீழ் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-420)

# சைவச்சிறார் இல்லத்துக்கு சாரதிகள் நியமனம்

கிளிநொச்சி, ஜூலை 12
கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறார் ஆச்சிரமத்தில் நிரந்தரமாகப் பணியாற்றுவதற்கு 5 டிராக்டர் சாரதிகள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

விண்ணப்பதாரர் 18 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்டவராக இருப்பதுடன் கனரக வாகன அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவராகவும் ஆச்சிரமத்தில் இருந்து பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் சகல தகைமைச் சான்றிதழ்களுடன் சுய விவரத்தை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், மகாதேவ சைவச்சிறார் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி எனும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

சாரதி அனுமதிப் பத்திரம், நற்சான்றிதழ் பத்திரம் இல்லாதோர் விண்ணப்பம் செய்ய வேண்டாம் என மகாதேவா சைவச்சிறார் இல்லத் தலைவர் கேட்டுள்ளார். (க-302)

# பயிர்களுக்குச் சேதம் கமக்கார அமைப்பை சாடுகின்றனர் விவசாயிகள்

முல்லைத்தீவு, ஜூலை 12
முத்துஐயன்கட்டு இடதுகரை மூன்றாம் கண்டம் பகுதியில் விவசாயத்தை மேற்கொள்ளும் பல விவசாயிகள் வயல்களுக்கான பாதுகாப்பு வேலியை அடைக்காமல் விட்டுள்ளதால் பயிர்களுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டு வருகின்றது.

குறிப்பாக நூறு ஏக்கரில் விவசாயத்தை மேற்கொண்ட பல விவசாயிகளே இவ்வாறு வேலிகளை அடைக்காமல் உள்ளனர்.

இது தொடர்பாக அந்தப் பகுதியிலுள்ள கமக்கார அமைப்பினரிடம் பல தடவைகள் முறையிட்ட போதும் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லையெனப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்தைக் கமநல சேவை அதிகாரி தமது கவனத்தில் கொண்டு வேலிகளை அடைக்காது விட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மேலும் விவசாயிகளின் நலனில் அக்கறையில்லாத கமக்கார அமைப்பினரின் அசமந்தப் போக்கினைக் கண்டித்து வேண்டுமெனவும் விவசாயிகள் எழுந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-500)

# கிணற்றிலிருந்த கெளிறு மீனினால் கடியுண்டவர் ஆஸ்பத்திரியில்

முல்லைத்தீவு, ஜூலை 12
கிணற்று நீரைச் சுத்திகரித்து இறைப்பதற்காகக் கிணற்றினுள் இறங்கிய ஒருவருக்குக் கிணற்றிலிருந்த மீன் கடித்ததால் காலில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

விசுவமடு, வள்ளுவர்புரத்தைச் சேர்ந்த 43 வயது நிறைந்த எஸ். நிர்மலகுமார் என்பவரே இவ்வாறு காயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

போர் முடிவடைந்தும் நீண்டகாலமாக அங்குள்ள கிணறுகள் சுத்திகரிக்கப்படாமலேயே உள்ளன. இந்த நிலையில் உதவித் திட்டம் ஒன்றின் மூலம் அந்தப் பகுதியிலுள்ள கிணறுகள் கிராம அலுவலரின் மேற்பார்வையின் கீழ் இறைக்கப்பட்டு வருகின்றன.

இதன்போதே இந்த நபர் கிணற்றிலிருந்த நன்கு வளர்ச்சி பெற்ற கெளிறு வகை மீனினால் கடியுண்டதாகத் தெரிய வருகின்றது. (க-4)

# வவுனியா நகரசபையின் பௌர்ணமி கலை விழா

வவுனியா, ஜூலை 12
வவுனியா நகரசபை நடத்தும் பௌர்ணமி கலைவிழா நாளை மறுதினம் வியாழக் கிழமை நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நாளை மறுதினம் 14 ஆம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் வவுனியா நகர சபையின் புதிய கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வுகளுக்கு வவுனியா நகரசபையின் உப தலைவரான எம்.எம். ரதன் தலைமை தாங்குவார்.

பிரதம விருந்தினர்களாக வவுனியா அரச அதிபரான திருமதி பீ.எஸ்.எம். சார்ள்ஸ், வவுனியா நகரசபைத் தலைவர் ஐ.கனகையா ஆகியோர் கலந்து கொள்வர். முதன்மை விருந்தினர்களாக நகரசபை உறுப்பினர்களான ஜி.சிவகுமாரன், க.குமாரசாமி, ஏ.எல்.எம்.முனைபர், அப்துல்பாரி, கே.பார்த்தீபன், ம.லலித் ஜெயசேகர ஆகியோர் கலந்து கொள்வர். சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, சட்டத்தரணி ரி.தயாபரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வவுனியா வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் எஸ்.சந்திரகுமார், செந்தில்நாதன் நற்பணி மன்றத் தலைவர் எஸ். மயூரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

கலைவிழாவின் முக்கிய நிகழ்வாக கைகேயி சூழ்வினைப் படலத்தில் மந்தரையின் சூழ்ச்சியால் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர் யார்? என்னும் தலைப்பிலான கருத்தாடு களமும் இடம்பெறவுள்ளது. நன்றியுரையை வவுனியா நகரசபைச் செயலாளர் வே.வசந்தகுமார் வழங்கவுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்காகோலா அறிமுகப்படுத்தும் 'பிர்ர்ர் ஆகுங்கள்; சுவிஸ் செல்லுங்கள்'

இலங்கையில் குளிர்ச்சியான பாவனையாளர்களுக்கான திட்டத்தின் கீழ் 1,60,000 இற்கும் மேற்பட்ட பாவனையாளர்களுக்கு ரூ. 3.8 மில்லியன் பெறுமதியான பரிசுகள் வெல்லச் சந்தர்ப்பம்.

கொக்கா கோலாவின் 'பிர்ர்ர்' பிரசாரத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் முகமாக, கொக்கா கோலா பெவரேஜஸ் ஸ்ரீலங்கா **'பிர்ர்ர் ஆகுங்கள்; சுவிஸ் செல்லுங்கள்'** இனை இன்று அறிமுகப்படுத்துகின்றது.

இந்தக் கிளர்ச்சியூட்டும் முன்னெடுப்பானது, நாடெங்கிலுமுள்ள பாவனையாளர்களை இலக்கு வைத்து அறிமுகப்படுத்தப்படுகின்றது. 'பிர்ர்ர்' எனும் மந்திரம் மூலம் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குத் தொற்றக் கூடிய சில்லென்ற கொக்கா கோலாவின் புத்துணர்ச்சி அனுபவத்தை அதற்கப்பாலும் பரவச்செய்யவுள்ளது. இலங்கையின் தனித்துவமான மற்றும் மிகப்பெரிய பாவனையாளர் ஊக்குவிப்புத் திட்டமான இது-

**கொக்கா கோலா பெவரேஜஸ் ஸ்ரீலங்காவின் வதிவிட முகாமையாளர் பட்றிக் பெச் மற்றும் தென்மேற்கு ஆசியாவுக்கான பிராந்திய முகாமையாளர் குமார் கௌரவ் சிங் ஆகியோரால்** அறிமுகப்படுத்தப்பட்டது.

இவ்வாறான முன்னெடுப்பில் தெரிவாகும் 8 அதிஷ்டசாலிகளுக்கு, ஜோடியாக சுவிற்சர்லாந்து சென்று, என்றுமில்லாதவாறு 'பிர்ர்ர்' அனுபவத்தைப் பெறுவதற்கு வாய்ப்புக் கிட்டும். அதற்கு மேலதிகமாக, 1,60,000 இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு ரூ. 3.8 மில்லியனுக்கும் அதிகமான பரிசுகளை வெல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பதோடு, 1,00,000 கொக்கா கோலா போத்தல்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இந்த முன்னெடுப்புப் பற்றி உரையாற்றிய **கொக்கா கோலா பெவரேஜஸ் ஸ்ரீலங்காவின் வதிவிட முகாமையாளர் பட்றிக் பெச்**, ''தன் வாடிக்கையாளர்களைப் புத்துணர்வுபடுத்த கொக்காகோலா பெவரேஜர்ஸ் ஸ்ரீலங்கா லிமிட்டட், எப்போதும் புதுப்புது வழிகளைக் கண்டு பிடித்தவண்ணமுள்ளது. எங்களது புதிய 'பிர்ர்ர்' ஆகுங்கள்'' சுவிஸ் செல்லுங்கள்' முன்னெடுப்பு இதற்குச் சரியான சாட்சியாக விளங்குகின்றது.

இந்தத் தனித்துவமான முன்னெடுப்பின் மூலம், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சுவிற்சர்லாந்தின் சில்லென்ற குளிர்ச்சியில் தொற்றக்கூடிய' 'பிர்ர்ர்' அனுபவத்தை அடைவதற்கான சரியான வாய்ப்பை வழங்குகின்றோம். மேலதிகமாக ரூ. 3.8 மில்லியன் பெறுமதியான பரிசுகளைப் பெறவும், 1,00,000 கொக்கா கோலா போத்தல்களை இலவசமாகப் பெறவும் வாய்ப்பேற்படுகின்றது. கொக்கா கோலாவுடனான வாடிக்கையாளர்களின் நெருக்கத்தைக் கூட்டும் முகமாக நாம் ஏற்கனவே அறிமுகப்படுத்திய 'பிர்ர்ர்' முன்னெடுப்பின் தொடர்ச்சியாகவே இது அமைகின்றது. வருடத்துக்கான பிரசித்தமான மென்பானத்துக்கான வர்த்தகப் பெயராகவும், இளைஞர்களிடையே பிரசித்தம் பெற்ற மென்பானத்துக்கான வர்த்தகப் பெயராகவும், கொக்கா கோலா இரண்டு SLIM விருதுகளை வென்றுள்ளது. இவ்வாறான பரபரப்பூட்டும் முன்னெடுப்புகளை எதிர்காலத்திலும் முன்னெடுப்பதன் மூலம் எங்களின் நம்பிக்கையான வாடிக்கையாளர்களுக்கு கொக்கா கோலாவின் நிகரில்லாத மாயாஜால அனுபவத்தை வழங்கவிருக்கின்றோம்.''

இந்த முன்னெடுப்பில் வாடிக்கையாளர்கள் பங்குபற்ற அவர்கள் செய்யவேண்டியதெல்லாம் இவ்வளவே. கொக்கா கோலா, பண்டா ஒரேன்ஞ், பண்டா போர்டல்லோ, பண்டா கிறீம் சோடா அல்லது ஸ்பி ரைட் ஆகிய மென்பானங்களில் ஏதேனுமொன்றைக் கொள்வனவு செய்து, அவற்றில் விசேடமான பச்சை நிற ஊக்குவிப்பு மூடிகள் உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறிருப்பின், அவற்றுக்குப் பரிசுகள் உள்ளனவா அல்லது போத்தலின் மூடிக்குக் கீழே 9 இலக்கங்கள் கொண்ட சங்கேதக் குறியீடு இருக்கின்றனவா என்பதைச் சரி பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதன் பின்னர் தங்கள் கடைக்காரரிடம் தமக்குரிய பரிசைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன், 'Brrr' என டைப் செய்து போத்தலிலுள்ள 9 இலக்க சங்கேதக் குறியீட்டையும் டைப் செய்து 2580 எனும் இலக்கத்துக்கு குறுஞ் செய்தியொன்றினையும் அனுப்ப வேண்டும். ஜோடியாக இலவசமாக சுவிற்சர்லாந்து சென்று திரும்புவதற்கான வாய்ப்பை இதன்மூலமே வெல்ல முடியும். கணினி மூலமான சீட்டிழுப் பொன்றின் மூலமே அதிஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர். இம்முன்னெடுப்பு 175 மிலி., 300 மிலி., 500 மிலி. திரும்பப் பெறக்கூடிய கண்




ணாடிப் போத்தல்கள் என்பனவற்றுக்கும் செல்லுபடியாகும்.

இம்முன்னெடுப்பு குறிப்பிட்ட ஒரு கைத் தொலைபேசி சேவையை வைத்திருப்பவருக்கு மட்டும் மட்டுப்படுத்தப் பட்டதல்ல. மாறாக எல்லா வாடிக்கையாளர்களும் இம்முன்னெடுப்பின் மூலம் பயன்பெறத்தக்க வகையில் டயலொக், மொபிற்றல், எடிசலாட், எயார்ரெல் அல்லது ஹச் என எவ்விதமான கைத்தொலைபேசி சேவைகளை வைத்திருப் போரும் (சிடிஎம்ஏ மற்றும் இணையம் மூலமான குறுஞ்செய்தி தவிர்ந்த) குறுஞ்செய்தியை அனுப்பலாம். இப்புதிய முன் னெடுப்பு, HSenid மொபைலின் தொழில்நுட்ப நிபுணத்துவத்தின் மூலம் சாத்தியமாகியுள்ளது. (த)

## DELL அறிமுகப்படுத்தும் 39 புதிய தீர்வுகள்




எந்த வேளையிலும், எந்த இடத்திலிருந்தும் வியாபார பிரயோகங்கள் மற்றும் தரவு ஆகியவற்றினைப் பெற்றுக் கொள்ளும் தேவையுடனான மாற்றமடைந்து வருகின்ற வேலைப் படையின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் Dell நிறுவனம் தனது வரலாற்றிலேயே மிகவும் அதிக எண்ணிக்கையிலான அறிமுகங்களுள் ஒன்றாக இந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ள 39 புதிய தீர்வுகளின் ஒரு பகுதியாக மடிக் கணினிகள் (Laptops), tablet கணினிகள், desktop கணினிக்கு மற்றும் பணியிட (workstation) கணினிகள் உள்ளடங்கலாக 24 புதிய வியாபார கணித்தல் தீர்வுகள் மற்றும் வடிவக் காரணிகளை அறிமுகப்படுத்துவது தொடர்பில் அறிவித்துள்ளது.

புதிய வளங்களில் Dell Latitude E5420, E5520, E6220, E6320, E6420, E6520 மற்றும் E6420, ATG மடிக்கணினிகள் உள்ளடங்கியுள்ளன. இதைவிட Dell OptiPlex 990, 790 and 390 desktops மற்றும் அனைத்துத் தீர்வுகளும் ஒரே வடிவத்தில் கிடைக்கப்பெறுகின்ற OptiPlex small form Factor ஆகியவற்றையும் Dell அறிமுகப்படுத்துகின்றது. Dell Precision T 1600 desktops Workstation மற்றும் Dell Precision M4600 நடமாடும் பணியிடம் ஆகியன தொடர்பிலும் Dell அறிவித்துள்ளது.

**Dell Latitude E -Family (இலத்திரனியல் வகுப்பு)**

Latitude E -Family வர்க்கம் முழுவதும் தற்போது Latitude E5420, E5520, E6520, E6420, E6320, E6220 மற்றும் E6420 ATG Laptops ஆகிய வடிவங்களில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. புதிய வர்க்க Latitude மடிக்கணினிகள் 100இற்கும் மேற்பட்ட வடிவ மேம்படுத்தல்களை உள்ளடக்கியுள்ளதுடன் அதிகரித்து வருகின்ற பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத் திறன் தேவைகள் உள்ளடங்கலாக மாற்றமடைந்து வருகின்ற வியாபாரத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பல வகைப்பட்ட புதிய அம் சங்களையும் கொண்டுள்ளது. Dell Latitude வர்த்தகத்தின் புதிய அறிமுகங்கள் பல வகைப்பட்ட பாவனைத் தேவைகளுக்கு ஆதரவளிக்கின்றன. (த)



மக்கள் வங்கியின் ஐம்பதாவது ஆண்டு பூர்த்திப் பொன்விழா நிகழ்வை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார் வட வலயக் கல்வித் திணைக்கள பிரதம பொறியியலாளர் சிவபாலன். அருகில் பிரதம தபால் அத்தியட்சகர் எஸ். ரட்ணசிங்கம், வங்கி முகாமையாளர், உதவி முகாமையாளர் ஆகியோர் உள்ளனர். (த)

## செலான் வங்கியின் உரிமை வழங்கலில் பங்குகள் முழுமையாக வழங்கப்பட்டன

செலான் வங்கியின் உரிமை வழங்கலானது முழுமையாக விநியோகிக்கப்பட்ட நிலையில் கடந்த ஜூன் 2 ஆம் திகதியன்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இதன்போது வாக்குரிமையுள்ள பங்குகள், வாக்குரிமையற்ற பங்குகள் என்ற இருவகைப் பங்குகளையும் கொள்வனவு செய்வதற்காகத் தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையை விட மிகையான அளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்தன.

இந்த உரிமை வழங்கலின் நோக்கம், செலான் வங்கியானது உறுதியான மூலதன தளத்தினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வங்கிக்கு அவசியமான முதன்மை மூலதனத்தை (Tier I Capital) அதிகரித்துக்கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும். அத்துடன் வங்கியின் நீண்டகாலக் கடன் வழங்கல் திட்டங்களில் குறிப்பாக வீடமைப்புத்துறை மற்றும் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு (SME) எதிர்பார்க்கப்படும் அதிகரிப்புகளுக்கு நிதியிடுவதற்கான நீண்டகால அடிப்படையிலான நிதியை திரட்டிக்கொள்வதும் வங்கியின் எதிர்கால விஸ்தரிப்பு நிகழ்ச்சித் திட்டத்துக்கு நிதி வசதியளிப்பதும் மேற்படி உரிமை வழங்கலின் நோக்கங்களாகும்.

செலான் வங்கியின் [illegible] குறிப்பிடுகையில், "இந்தப் புதிய முன்னெடுப்புக்கு கிடைத்த குறிப்பிடத்தக்க வெற்றியானது, செலான் வங்கியின் மீது இலங்கை மக்கள் பூரணமான நம்பிக்கையை கொண்டுள்ளனர் என்பதற்கு மீண்டும் ஒரு தடவை சான்று பகர்ந்துள்ளது '' என்றார்.

செலான் வங்கியில் ஏற்கனவே சாதாரண வாக்குரிமை பங்குகளைக் கொண்டுள்ள பதிவு செய்யப்பட்ட பங்குதாரர்களுக்கு செலான் வங்கி 43,333,333 சாதாரண வாக்குரிமைப் பங்குகளை வழங்கியது. கம்பனியின் ஒவ்வொரு மூன்று பங்குகளையும் ஏற்கனவே தம்வசம் வைத்திருந்த பங்குதாரருக்கு ஒரு பங்கு என்ற விதத்தில் இந்த பங்கு வழங்கல் மேற்கொள்ளப்பட்டது. சாதாரண வாக்குரிமையுள்ள பங்கு ஒன்றினது விநியோக விலை 75 ரூபாவாக இருந்தது.

அதேநேரம், செலான் வங்கியின் சாதாரண வாக்குரிமையற்ற பங்குகளைக் கொண்டிருந்த பதிவுசெய்யப்பட்ட பங்குதாரர்களுக்கு 41, 186,666 வாக்குரிமையற்ற பங்குகளையும் நிறுவனம் வழங்கியது. கம்பனி ஒவ்வொரு மூன்று வாக்குரிமையற்ற பங்குகளையும் ஏற்கனவே தம்வசம் வைத்திருந்த பங்குதாரருக்கு ஒரு பங்கு என்ற விதத்தில் இந்தப் பங்குகள் வழங்கப்பட்டன. சாதாரண (வாக்குரிமையற்ற) பங்கு ஒன்றின் விநியோக விலை 35 ரூபாவாக அமைந்திருந்தது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் சட்டவிரோத ஆயுதங்கள் இதுவரை ஒப்படைக்கப்படவில்லை

## பொலிஸார் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 12

கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோத ஆயுதங்கள் இன்னமும் ஒப்படைக்கப் படவில்லை எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோத மான முறையில் ஆயுதங்களைப் பயன் படுத்துவோர் உடனடியாக ஆயுதங் களை ஒப்படைக்குமாறு அறிவிக்கப் பட்டு ஒரு வார காலம் கடந்துள்ள போதிலும், இதுவரையில் ஆயுதங்கள் ஒப்ப டைக்கப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களை ஒப்படைக்க வருவோர் பழைய குற்றச் செயல்களுக்காகத் தண்டிக்கப்படுவர் என்ற அச்சம் காரணமாக, பலர் ஆயுதங்களை ஒப்ப டைக்க அஞ்சுவதாகத் தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களை ஒப்படைக்கச் செல்லும் நபர்களைக் கைது செய்யும் உத்தேசம் கிடையாது எனப் பொலிஸாரும், இராணுவத்தினரும் அறிவித்துள்ளனர்.

சட்டவிரோத ஆயுதங்களைப் பயன் படுத்தி பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெற்று வருவதாகச் சுட்டிக்காட் டப்படுகிறது.

உரிய நேரத்தில் ஆயுதங்களை ஒப் படைக்கத் தவறும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)



கிண்ணியா சூரங்கல் வடிச்சல் வீதி புனரமைப்புப் பணிகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

# பின்தங்கியுள்ள பிரதேசங்களுக்கு வளங்களைப் பயன்படுத்த வேண்டும்

கொழும்பு, ஜூலை 12

அரசின் வளங்களை மிகவும் பின் தங்கிய பிரதேசங்களுக்கு நாம் எடுத்துச் செல்ல வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் உபதலைவர் எஸ். ஜெயபாரதி தெரிவித்துள்ளார்.

தலவாக்கலை, ட்ரூட் தோட்ட வீதியை காப்பற் முறையில் புனரமைக்கும் திட்டம் நெடுஞ்சாலைகள், துறைமுகங் கள் பிரதி அமைச்சர் நிர்மல கொத்தலா வலவினால் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நுவரெலியா, பதுளை மாவட்டங் களைப் பொறுத்தவரையில் தோட்டப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கான வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன. எமது சமூகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் களும், மாகாணசபை, உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களும் அதிக எண் ணிக்கையில் உள்ளார்கள்.

ஆனால், எம்மைவிடவும் மிகவும் பின் தங்கிய நிலையில் பெருந்தோட்டத் துறைசார்ந்த மக்கள் வெளிமாவட்டங் களில் வசிக்கின்றார்கள். அந்த மக் களின் நலனிலும் நாம் அக்கறை காட்ட வேண்டும்.

அரசுக்கு ஆதரவளிக்கும் அனைத்து அமைப்புகளும் ஒன்றிணைந்து பெருந் தோட்டத்துறையின் ஒட்டுமொத்தமான அபிவிருத்திகள் சம்பந்தமாகத் திட்ட மிட வேண்டும். எமக்கு பிரதிநிதித் துவம் இல்லாத மாவட்டங்களில் வாழும் மக்களின் தேவைகளுக்காக அவ்வப் பகுதி அமைச்சர்களூடாகச் செயற்பட வேண்டும். இல்லாவிட்டால் ஏனைய பிரதேசங்களிலுள்ள எமது சமூகத்தவர்கள் மேலும் பின்தங்கிய நிலைக்கே தள்ளப்படுவார்கள் - என்றார்.

# தப்பிய கைதி இறத்தோட்டையில் சிக்கினார்

கண்டி, ஜூலை12

கண்டி, போகம்பரைச் சிறைச்சாலை யிலிருந்து தப்பிச்சென்ற 17 வழக்குகளு டன் சம்பந்தப்பட்ட கைதி ஒருவரை மாத் தளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இறத்தோட்டை, கவ்கந்த கவ்டா பகுதி யில் வீடொன்றில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என மாத்தளை தலை மையகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மாத்தளை தலைமையக பொலிஸ் நிலையத்திற்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கைது செய்யப்பட் டுள்ள இவருக்கு மாத்தளை நீதிமன்றத் தில் எட்டு வழக்குகளும், கண்டி நீதி மன்றத்தில் இரண்டு வழக்குகளும், வறக்காப்பொல நீதிமன்றில் ஒரு வழக் கும், பொலனறுவை நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகளும், குருநாகல் நீதிமன்றில் இரண்டு வழக்குகளும், மாத்தளை நீதிமன்றத்தில் ஒருவழக்கும், ஹிங்குராங்கொடை நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் இவருக்கு எதிராக இருக்கின் றன என பொலிஸ் விசாரணை களிலிருந்து தெரியவந்துள்ளது.

# கருப்பைக் கழுத்து புற்றுநோய்

**புற்றுநோய் விழிப்புணர்வுத் தொடர் 12**


வடபகுதியில் மக்களிடையே புற்றுநோய் இப்போது வெகுவேகமாகப் பரவி வருகிறது. இந்த உயிர்க்கொல்லி நோயைக் குணமாக்குவதற்கான பல நவீன சிகிச்சை முறைகள் இப்போது அறிமுகமாகியுள்ளன.

ஆனால் புற்றுநோயால் பாதிக்கப்படுவோர் பிந்திய நிலையிலேயே சிகிச்சைக்குச் செல்வதால், அதனைக் குணமாக்குவதில் வைத்தியப் பகுதியினர் பல சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகிறது.

குடாநாட்டில் புற்றுநோய்க்கு நவீன சிகிச்சை முறைகளை அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு வேண்டிய இருநூறு (200) மில்லியன் ரூபாவைத் திரட்டும் இலக்குடன் காலி, தேவேந்திர முனையிலிருந்து பருத்தித்துறை வரை (TRAIL) அடிச்சுவடு பாதை நடை பயணம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தக் காலப்பகுதியில் மக்களிடையே புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் பெருநோக்குடன் உதயனில் இக்கட்டுரைத் தொடர் வெளியிடப்படுகிறது.


இலங்கையில் பெண்களில் ஏற்படும் புற்றுநோய்களில் கருப்பைக் கழுத்து புற்று நோய் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. (படம் - 1)




படம்: 1

வளர்ச்சியடைந்தநாடுகளில் இப்புற்று நோயின் அளவு மிகவும் குறைவாகவே உள்ளது. இதற்கான பிரதான காரணமாக அந்த நாடுகளில் அறிமுகப் படுத்தப்பட்ட இப் புற்று நோய்த் தடுப்புநிர்ப்பீடன ஊசி வழங்கல் மற்றும் புற்றுநோய் முன்னிலைகளிலேயே இப் புற்றுநோயை இனம் கண்டு சிகிச்சை அளித்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களைக் குறிப்பிடலாம்.

கருப்பையின் கீழ்ப்பகுதியையும் பிறப்புக் கால்வாய் / யோனி மடலையும் இணைக்கும் பகுதியான கருப்பைக் கழுத்துப் பகுதியில் இயற்கையாகவே மேலணிக் கலங்களின் தன்மையில் மாற்றம் ஏற்படுகின்றது. அதாவது கொம்பு மேலணிக் கலப்பகுதி செதில் மேலணிக் கலப் பகுதியாக (Transfomation Zone) மாற்றம் அடையும் (படம் - 2). இப்பகுதியிலேயே புற்றுநோய் உருவாக்கம் ஏற்படுகின்றது.





படம்: 2

## கருப்பைக் கழுத்து புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணிகள்

**பாலியல் நடத்தைகள்**

* பாலியல் உடலுறவைக் குறைந்த வயதிலேயே ஆரம்பித்தல். குறிப்பாக 18 வயதுக்கு முன்னரே ஆரம்பித்தல்.
* ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் உடலுறவு கொள்ளுதல்.
* ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் தொடர்புடைய ஆண்களுடன் உடல் உறவு கொள்ளல்.
* இளவயதிலேயே உடலுறவை ஆரம்பித்த ஆணுடன் அல்லது கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் உடையவர்களுடன் தொடர்புடைய ஆணுடன் உடலுறவு கொள்ளுதல்.
* பாலுண்ணி வைரஸ்(Human Papilloma Virus) தொற்று ஏற்படல் - பாலுண்ணி வைரஸ் (HPV) இன் 16 மற்றும் 18 உப வகைகள் பிரதானமாக இப்புற்றுநோயை ஏற்படுத்துகின்றது. (படம் - 3).

பாலுண்ணி வைரஸ் (HPV) இன் உப வகையான 31, 33 மற்றும் 45 என்பவையும் இந்நோயின் உருவாக்கத்தில் கணிசமான அளவு பங்காற்றுகின்றது. இவ்வைரஸ் தாக்கமானது மேற்கூறிய நடத்தைகள் மூலமும் வேறு வழி களிலும் கருப்பைக் கழுத்தில் புற்றுநோய் உருவாக்கத்தில் முழுமையாகப் பங்கேற்கின்றது.




படம்: 3

* வாய் மூலமான கருத்தடை மாத்திரைகளை (Oral Contraceptive Pills) அதிக காலம் உட்கொள்ளல்.
* ஆண் உறுப்பின் சுகாதாரமற்ற தன்மை மற்றும் முன் தோல் இறுக்கமாக உள்ள ஆண்களுடன் உடலுறவு கொள்ளல்.
* அதிக எண்ணிக்கையான குழந்தைப்பேறு உடையவர்கள்.

மேலும் பல காரணிகள் இந்தப்புற்று நோய் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைகின்றன.

* புகைத்தல்- ஒரு நாளைக்கு பல சிகரெட்கள் வீதம் பல வருடமாகப் புகைக்கும் பெண்களில் அதிகமாக ஏற்படும். இலங்கையில் இந்தப் பிரச்சினை மிகவும் குறைவே.
* நோய் எதிர்ப்பு சக்தி / நிர்ப்பீடனம் குறைவடைதல்.

எயிட்ஸ் (AIDS) நோயாளர்கள், உறுப்பு மாற்றுச் சிகிச்சை செய்தவர்கள்.

* விற்றமின் A குறைபாடு
* குறைந்த சமூக பொருளாதார மட்டத்தில் உள்ளோர் - இவர்களில் இப்புற்றுநோய் அதிகரிப்புக்கு மேற்கூறிய காரணிகள் அதிக அளவில் இருத்தலும் இப்புற்றுநோயை முன்னிலைகளிலேயே இனம்கண்டு சிகிச்சை பெறாமல் இருத்தலும் காரணமாகின்றது.

### கருப்பைக் கழுத்து புற்றுநோய்க்கான அறிகுறிகள்

இந்தப் புற்றுநோயின் முன்னிலைகளில் அல்லது மிகவும் ஆரம்பநிலைகளில் எச்சரிக்கை அறிகுறிகள் தென்படுவதில்லை.

### ஆரம்ப நிலையில் ஏற்படும் எச்சரிக்கை அறிகுறிகள்

* அசாதாரண முறையில் யோனி மடல் வழியான இரத்தப்போக்கு இருத்தல்.

உடலுறவின் பின்னரான இரத்தப்போக்கு, மாதவிடாய்க்கிடையிலான இரத்தப் போக்கு, மாதவிடாய் நின்ற பின்பு ஏற்படும் இரத்தப்போக்கு, கர்ப்பத்தில் ஏற்படும் அசாதாரண இரத்தப் போக்கு என்பன கருப்பைக் கழுத்து புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.

* அதிகளவான துர்நாற்றத்துடன் கூடிய வெள்ளை படல்.

இவை புற்றுநோய் அல்லாத சந்தர்ப்பங்களிலும் ஏற்படலாம் என்பதால் நீங்கள் புற்று நோயா என்பதை அறிந்து கொள்ள வைத்தியரை நாடி மேலும் பரிசோதனை செய்தல் நல்லது.

### நோய் முற்றிய நிலையில் ஏற்படும் எச்சரிக்கை அறிகுறிகள்

அடி வயிறு நோவு ஏற்படல், கால் வீக்கம் ஏற்படல், கால், இடுப்பு வலி ஏற்படல், சிறுநீருடனான இரத்தப்போக்கு குறிப்பாக சிறுநீர்ப்பையை இப்புற்று நோயானது ஊடுருவுவதாலும் மற்றும் மலத்துடனான இரத்தப்போக்கு, குதப்பகுதியின் சுவரை இப்புற்றுநோய் ஊடுருவுவதாலும் ஏற்படுகின்றது.

இப்புற்றுநோயானது சிறுநீரகங்களில் இருந்து வரும் சிறுநீர் கான்களை (Ureters) அழுத்துவதனால் சிறுநீரகம் செயலிழந்து ஏற்படும் உபாதையின் அறிகுறிகளான நாரி நோவு, உடல் வீக்கம் அடைதல் மற்றும் விக்கல் ஏற்படுதல் போன்றவற்றையும் கொண்டதாயிருக்கும்.

**புற்றுநோய் வைத்திய நிபுணர்**
**என்.ஜெயக்குமாரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
விளையாட்டாகச் செய்த காரியங்கள் விபரீதமாக முடியலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். சிலர் பேசும் பேச்சுக்களால் கோபம், எரிச்சல் அடையலாம். உங்களிடம் உதவிகள் பெற்ற சிலரே உதாசீனம் செய்யலாம். கடமையில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டிய நாள்.



**இடபம்:**
வெறுப்பு, விரக்தி விலகி மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும் நாள். பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். வெளியிடங்களுக்குச் சென்று விரும்பிய உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். தாய் வழி உறவுகள் வழியில் உருவான சிரமங்கள் முடிவிற்கு வரும். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.



**மிதுனம்:**
தெளிவான சிந்தனை, புத்தி ஞானத்துடன் செயற்படும் நாள். ஆன்மீக விடயங்களில் நாட்டம் செல்லும். மோதிக் கொண்டிருந்த சிலருடன் சமாதானமாகச் செல்வீர்கள். உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டிற்கு வரலாம். நண்பர்கள் வட்டம் விரிவடையும். நடக்குமோ, நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று நல்ல விதமாக நடந்து விடலாம்.



**கடகம்:**
செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிப்பை அதிகரிக்க வேண்டிய நாள். கணவன், மனைவியர் ஆலோசித்து சில முக்கிய விடயங்களில் முடிவு எடுக்கலாம். விரும்பிய பொருள் ஒன்றை வாங்க ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலையலாம். குறுகிய தூர பயணங்கள் செல்லலாம். சில வேலைகளைச் செய்ய மறந்து அதனால், அவதிப்படலாம்.



**சிங்கம்:**
கடின வேலைகளால் போராட்டமான நிலைமைக்கு ஆளாகலாம். அதிக எதிர்பார்ப்புடன் இருந்த ஒரு விடயம் ஏமாற்றத்தை தரலாம். மாமன், மைத்துனர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல், கோபத்தை உண்டாக்கலாம். எந்த வேலையையும் பிற்போட்டு வைக்காமல் இன்றே செய்து முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.



**கன்னி:**
சில காரியங்களுக்காக அலைந்தாலும் அதனால் ஆதாயம் பெறுவீர்கள். தேக ஆரோக்கியக் குறைபாடுகள் நீங்கி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். அயலாருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். பல நாள்களாக சந்திக்க நினைத்த ஒருவரை இன்று திடீரென சந்திக்கும் சூழ்நிலை உருவாகும். உங்களுக்கு பிடித்தமான பொருளை சிலர் கொடுக்கலாம்.



**துலாம்:**
சிலர் கேட்ட பண உதவிகளைச் செய்ய முடியாமல் அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். உங்களை நம்பி முக்கிய வேலை ஒன்றை ஒருவர் ஒப்படைக்கலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். அடுத்த சில நாள்களுக்குப் பின் நடைபெற உள்ள காரியங்களுக்காக முன்னேற்பாடு செய்வீர்கள். கடன் மிகுதிகளைச் செலுத்தலாம்.



**விருச்சிகம்:**
விலை மதிப்பு மிக்க பொருள்கள் வாங்கலாம். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் ஒருவர் வரலாம். நாளை செல்ல நினைத்த ஒரு இடத்திற்கு இன்றே செல்ல நேரிடலாம். உடன் பிறந்தவர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். தொழிலில் மற்றவர்கள் மதிக்கும் வகையில் பொறுப்பாக நடந்து கொள்வீர்கள்.



**தனுசு:**
மறதியால் தேவையற்ற பொருள் செலவுகளைச் சந்திக்கலாம். உடல் நலத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள். பெண்கள் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளலாம். விருந்தினர்கள் வருகையால் வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். வேலைப்பளு கூடும்.



**மகரம்:**
ஆடம்பர விடயங்களில் நாட்டம் செல்லும். மனம் சந்தோஷம் அடையும் வகையிலான சில நிகழ்ச்சிகள் நடக்கலாம். நீண்ட நாள்களாக செல்லாத உறவினர் ஒருவரின் வீட்டிற்குச் செல்லலாம். தேவையான பணத்தை புரட்டிக் கொள்ள சந்தர்ப்பம் சாதகமாக அமையும். நீங்கள் நம்பிய ஒருவர் சரியான நேரத்தில் கை கொடுத்து உதவலாம்.



**கும்பம்:**
பெண்கள் வழியில் எதிர்பாராத உதவி கிடைக்கலாம். பல நாள்களாக போட்டிருந்த திட்டம் இன்று நிறைவுக்கு வரும். தம்பதியர் இடையே ஏற்பட்ட பிணக்குகள் நீங்கி பாசம் அதிகரிக்கும். சிலரின் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.



**மீனம்:**
பண விடயங்களில் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற கடும் பிரயத்தனம் மேற்கொள்வீர்கள். சிலர் உங்களை தொழில் ரீதியாக விமர்சிக்கலாம். மற்றவர்கள் செய்த தவறுகளுக்கு நீங்கள் பொறுப்பேற்கலாம். குடும்ப உறுப்பினர்களுக்கே தெரியாமல் ரகசியமாக சில வேலைகளைச் செய்வீர்கள். திட்டமிட்ட வேலைகளில் மாற்றம் நிகழும்.

# ஜெயலலிதாவின்

# இலங்கை மீத

# இந்தியக் கொ

# பிரகாசம் தெ



தமிழ்நாடு சட்டசபையின் தீர்மானத்தை எதிர்ப்பதற்குப் பதிலாக, அதிகாரப் பகிர்வு பொறிமுறையை ஏற்றுக்கொள்வதற்கு ராஜபக்ஷ தயாராக இருந்தால், அவர் புத்திசாலியாகவும் இலங்கை சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை சமூகங்கள் வாழ்வதற்குச் சிறந்த இடமாகவும் அமையும்.

இவ்வாறு இந்திய ஊடகமான expressbuzz இணையத்தளத்தில் Anuradha M Chenoy எழுதிய ஆய்வில் தெரிவித்துள்ளார்.

போருக்குப் பின்னான இலங்கையில் முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் என்ன என்ற கோரிக்கைப் பட்டியல் அடங்கிய அறிக்கையொன்றை தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கையளித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளுடனான இறுதிப்போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களுக்கான பொறுப்புச்சொல்லும் நடைமுறையை இலங்கை அரசு முன்னெடுக்கவேண்டும் என முதல்வர் ஜெயலலிதா கூறியிருக்கிறார்.

இந்தப் போரின்போது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு நாட்டின் வடபகுதியில் வாழ்ந்துவந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர்.

இடைவிடாது தொடர்ந்த எறிகணை மற்றும் வான்வழித் தாக்குதல்களால் வட பகுதி வெறும் கற்குவியல்களாகியது. அடிப்படை மனிதாபிமான உதவிகள் கூட இந்த மக்களுக்கு மறுக்கப்பட்டது.

குறித்த இந்தக் கோரிக்கைகளை இலங்கை அரசு செவிமடுக்கத் தவறுமிடத்து இலங்கைக்கு எதிராக பொருளாதாரத்தடை கொண்டுவரப்படவேண்டும் எனவும் ஜெயலலிதா இந்திய மத்திய அரசை வலியுறுத்தியிருக்கிறார்.

இதனை நடைமுறைப்படுத்தவேண்டுமெனில் இலங்கை தொடர்பான தனது வெளியுறவுக் கொள்கையை இந்தியா மாற்றியாகவேண்டும்.

இதுவிடயம் தொடர்பில் தமிழ்நாடு சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கும் நிலையில் ஜெயலலிதாவின் இந்த நிலைப்பாடு மஹிந்த அரசை நிச்சயம் உலுக்கியிருக்கும்.

எவ்வாறிருந்தும், பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை ஐ.நா. சபையால் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில்கூட, மஹிந்த தனது இராணுவம் போரின் இறுதி நாள்களில் மேற்கொண்ட கொடூர நடவடிக்கைகளை மறுத்துவருகிறார்.

ஐ.நா. வெளியிட்ட அறிக்கைகளையும் தீர்மானத்தையும் அவர் எதிர்த்து வருகிறார். தமிழ் மக்களுக்கான புனர்வாழ்வுப் பணிகள் திருப்திகரமாக அமையாதது மட்டுமன்றி அவர்களின் வீடுகளும் வாழ்வாதாரங்களும்கூட அவர்களிடம் மீளளிக்கப்படவில்லை.

போருக்குப் பின்னரான ஒழுங்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பிலான பேச்சுக்களுக்கான வாய்ப்புக்களை இல்லாமல் செய்து ராஜபக்ஷ அரசு பெரும்பான்மை சிங்கள தேசத்தைத் தனக்கு ஆதரவாக்கியுள்ளது.

கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்து இராணுவ கட்டுப்பாட்டையும் அதிகரித்த ராஜபக்ஷ ''இந்த நாட்டில் சிறுபான்மையினர் என எவரும் இல்லை. போர் முடிவடைந்த பின்னர் இலங்கை மக்களில் இரண்டு பிரிவினரே உள்ளனர். அதாவது தேசப்பற்றாளர்களும் துரோகிகளுமே அவர்கள்'' என மே 2009 இல் அறிவித்தார்.

சிறுபான்மையினத்தவர்கள் மற்றும் சுதந்திரக் குரல்கள் மீதான அடக்குமுறையினால் மட்டும் இலங்கையில் அமைதியைக் கொண்டுவர முடியாது. இது புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதுடன் ஜனநாயகத்தையும் பல்லினத்துவத்தையும் பாதிக்கிறது. இதனால் நீண்டகால பின்விளைவுகள் ஏற்படக்கூடும்.

ஜெயலலிதாவின் வார்த்தைகள் இந்தியாவின் வெளியுறவுக் கட்டமைப்புத் தொடர்பாக திருப்தியுற்றிருக்கும் ஜாம்பவான்களுக்கெல்லாம் குழப்பத்தைத் தரும்.



இந்தியா மற்றும் இலங்கை தொடர்பில் அனைத்துலக நெருக்கடிகளுக்கான குழு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டதைப்போல, இலங்கையில் அதிகம் செல்வாக்குச் செலுத்தும் ஒரு நாடு இந்தியாவாகும். ஆனால் நிலையான அமைதியை நோக்கிச் செல்வதில் இலங்கை அரசுக்கு ஊக்கமளிப்பதில் அதன் கொள்கைகள் பயனளிக்கவில்லை.

ஏனெனில், இந்தியா கணிசமானளவு உதவியை வழங்கியபோதும், வடக்கு இராணுவமயப்படுத்தப்படுவது நிறுத்தப்படவேண்டும் எனப் போதியளவு அழுத்தம் கொடுக்கவில்லை.

சிறுபான்மை மக்களுக்கு அவர்களுக்கான உரிமைகள் வழங்கப்படவேண்டும், முழுமையாக புனர்வாழ்வளிக்கப்படவேண்டும், மறுக்கப்பட்ட ஜனநாயக, சுதந்திர உரிமைகள் மறுக்கப்பட்ட நிறுவனங்களுக்கு அவை மீண்டும் வழங்கப்படவேண்டும் என இந்தியா உரத்துக் கூறவில்லை. மாறாக, இந்தியா பிராந்திய பூகோள அரசியலில் அதிகம் ஆர்வம் காட்டியதுடன் இலங்கை ஆட்சியாளரிடமிருந்து அந்நியப்படுவதற்கு விரும்பவில்லை.

ராஜபக்ஷ அரசு மீது அதிகரித்துவரும் சீனாவின் செல்வாக்கு இந்தியா-இலங்கை உறவில் கணிசமான விரிசலை ஏற்படுத்தலாம் என்று கருதப்படுகிறது.

இரண்டாவது, ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்புரிமையைப் பெறும் புதுடில்லியின் ஆசைக்குக் கொழும்பின் ஆதரவு அவசியமானது. மூன்றாவது, இந்தியாவின் தடையற்ற வணிகத்துக்கு இலங்கை திறந்திருக்கவேண்டும் என அது விரும்புகிறது.

நான்காவது, கடந்த காலங்களில் இலங்கையில் இந்தியாவின் தலையீடு தந்த கசப்பான பாடங்களினால் மீண்டும் தேசிய ரீதியில் எதிர்ப்புத் தோன்றுமோ என அஞ்சுகிறது.

இலங்கை போன்ற அயல்நாட்டுடனான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையானது இந்தியாவின் நலன்கள் தொடர்பான இத்தகைய தேவையற்ற அச்சத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டுமா?


தற்போதைய ஆட்சியாளர்களை மகிழ்விப்பதற்கு எல்லாவற்றையும் இந்தியா செய்தாலும் ஏன் சிறிலங்கா சீனாவுடன் நல்லுறவை ஏற்படுத்தாமல் விட வேண்டும்?

பூகோள அரசியல் நலன்களுக்காக சிறுபான்மையினரின் உரிமைகள் போன்ற இந்தியா கடைப்பிடிக்கும் கருதுகோள்களையும் விழுமியங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ன் நிலைப்பாட்டில்
# ீதான
# காள்கையில்
# தன்படுகிறது

சிறுபான்மையினரது
உரிமைகளை வழங்குவதால்
தான் சார்ந்த பெரும்பான்
மைச் சமூகம்
அச்சம்கொள்ளும் எந்தத்
தேவையும் இல்லை
என்பதை உணர்த்தும்
வகையில் அதிபர் ராஜபக்ஷ
செயலாற்றுவ ரானால் அது
அவர் இலங்கையின் தேசிய
வாதப் போக்குக்காக மேலும்
செயலாற்று வதாகவே
இருக்கும்.



கைவிட வேண்டுமா?

இராணுவமயப்படுத்தப்பட்ட, சர்வாதிகார ஆட்சி முறைமைகொண்ட இலங்கையா அல்லது உறுதிப்பாடுடைய ஜனநாயக முறைமைகொண்ட இலங்கையா இந்தியாவுக்கு நல்லது?

மேலும், இந்தியாவின் தமிழ் மக்களே கவலையுடனும் இலங்கையில் தமிழ் மக்களின் நிலைமை தொடர்பாகப் பொறுமையிழந்தும் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். நிச்சயமாக, இந்தியாவின் கணிப்பீடுகளில் இவை யதார்த்தமாக இடம்பெறவேண்டும்.

ஜெயலலிதாவின் வெற்றி மற்றும் அறிக்கைகளுக்குப் பின்னர், இலங்கையின் சிறுபான்மை சமூகம் தொடர்பான இந்தியாவின் கொள்கை செயற்படு நிலைக்கு மாறியுள்ளமை ஒரு சாதகமான விடயமே.

வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன் ஆகியோர் அவசர அவசரமாக ஜூனில் இலங்கைக்கு மேற்கொண்ட பொருத்தமான தருணத்தில் பயணத்தை மேற்கொண்டதுடன் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் அதிகாரப்பகிர்வு, உண்மையான நல்லிணக்க முயற்சி, வேகமான நேர்மையான முறையில் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துதல், மனிதஉரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணை மற்றும் இயல்புநிலையைத் தோற்றுவித்தல் ஆகியன பற்றி விவாதித்துள்ளனர்.

ஆனால் இந்திய வெளியுறவுச் செயலரின் அழுத்தங்களுக்குப் பின்னரும் கொழும்பு மனம் மாறுவதுபோல தெரியவில்லை. ஒரு பயணம் மற்றும் சில அறிக்கைகளைவிட மேலும் சில விடயங்களை இந்தியா செய்யவேண்டியுள்ளது.

இலங்கை அரசு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கிடையில் ஜனவரி 2011 இல் ஆரம்பித்த பேச்சுக்களுக்கான அதன் ஆதரவு திட்டமிட்ட நேர அட்டவணைக்குள் நடத்தப்படுவதற்கு அழுத்தம் கொடுக்கப்படவேண்டியுள்ளது.

இந்தப் பேச்சுக்களில் முக்கிய விடயமாக அதிகாரப் பகிர்வு மற்றும் இராணுவமயப் படுத்துதலை இல்லாது செய்தல் ஆகியன அமையவேண்டும்.

இந்தியா தனது உதவிகளையும் புனர்வாழ்வுத் திட்டங்களையும் கண்காணிப்பதுடன் வெளிப்படையான கண்காணிப்புப் பொறிமுறையொன்று இந்தத் திட்டங் களுக்கு ஏற்படுத்தப்படவேண்டும்.

உதவி எங்கு தேவையோ அங்கு கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு தனது உதவிகளை வடக்கு, கிழக்கு உள்ளூர் அரசினூடாகச் சென்றடைய வேண்டும் என்பதை இந்தியா வலியுறுத்தவேண்டும்.

இந்தியாவின் மாநிலங்கள் அதாவது தமிழ்நாட்டுடன் தான் தொடர்புகளை வைத்திருக்கமாட்டேன். மாறாக இந்தியாவுடன் மட்டுமே தனது உறவுகள் என்பதே ராஜபக்ஷ அரசின் பதிலாக இருந்தது.

ஆனால் இலங்கையைப் போலன்றி மாநிலங்களால் ஆனதே இந்தியா என்பதை ராஜபக்ஷ விளங்கிக் கொள்ளவேண்டும்.

எவ்வளவு குறைபாடுகள் இருந்தபோதும் இந்தியாவின் சமஷ்டி முறைமை அதே போல இந்தியாவின் மதச்சார்பின்மை மற்றும் பல்லினத்துவம் ஆகியனவே இந்திய ஜனநாயகத்தின் முதுகெலும்பாகும்.

எனவே, தமிழ்நாடு சட்டசபையின் தீர்மானத்தை எதிர்ப்பதற்குப் பதிலாக, அதிகாரப் பகிர்வு பொறி முறையை ஏற்றுக்கொள்வதற்கு ராஜபக்ஷ தயாராக இருந்தால், அவர் புத்திசாலியாகவும் இலங்கை சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை சமூகங்கள் வாழ்வதற்குச் சிறந்த இடமாகவும் அமையும்.

அத்துடன் மிகப் பெரிய வெற்றிக்குப் பின்னர் இதனை முன்னெடுப்பதைவிட இதனை முன்னெடுப் பதற்குச் சிறந்த நேரம் வேறெதுவாக இருக்க முடியும்?

இலங்கையின் கவலைகளை அது நீக்குவதுடன் நாட்டினது அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த மக்களுடனான இடைத்தொடர்பைப் புதுப்பித்துக்கொள்வதற்கு ஒரு வாய்ப்பையும் வழங்கவேண்டும்.

"போரில், தீர்வு: தோல்வியில் எதிர்ப்பு: வெற்றியில் எதிரிமீது கருணை", என வின்சன்சேர்ச்சில் ஒரு தடவை கூறியிருந்தார். இவை வரலாற்றில் நன்றாக உணரப்பட்டிருப்பதால், அவ்வாறான அறிவுரைகளைப் பின்பற்றுவது பயனுடையதாகும்.

சிறுபான்மையினரது உரிமைகளை வழங்குவதால் தான் சார்ந்த பெரும்பான்மைச் சமூகம் அச்சம்கொள்ளும் எந்தத் தேவையும் இல்லை என்பதை உணர்த்தும் வகையில் அதிபர் ராஜபக்ஷ செயலாற்றுவாரானால் அது அவர் இலங்கையின் தேசிய வாதப் போக்குக்காக மேலும் செயலாற்றுவதாகவே இருக்கும்.

நாட்டினது கொள்கைகள் மற்றும் அரச நிறுவனங்களையும் உள்வாங்கப்படுவதோடு அவை இந்த உண்மையை விளங்கிக்கொண்டு செயலாற்றுமிடத்து வேகமான முன்னேற்றத்தைக் காணமுடியும்.

தேரிய ரீதியிலான முட்டி மோதும் முனைப்புக்களிலும் இலங்கையினது எதிர்க்கட்சியினர் ஈடுபடலாகாது. இது போன்ற சண்டைகள் இலங்கைக்கு ஏலவே பல துயரங்களைப் பெற்றுத்தந்து விட்டது.

இலங்கை தொடர்பான இந்தியாவினது கொள்கையாக, தென்னாசியப் பிராந்தியத்தில் மட்டுமல்ல அனைத்துலக ரீதியில் இந்தியாவின் சட்டபூர்வ தன்மையை மீள்நினைவுபடுத்தியமைக்காகப் புதுடில்லி நிச்சயம் ஜெயலலிதாவுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

அதாவது, இந்தியாவினது சட்டபூர்வ தன்மை பூகோள அரசியல் தந்திரோபாயங்களின்பால் அமைந்ததாக மட்டுமல்லாமல் உலகின் மிகப்பெரும் சக்திகள் வெளிப்படுத்தும் மதிப்புகள் மற்றும் விதிமுறைகளின் பால் அமையவேண்டும்.

(நன்றி: புதினப்பலகை)

## வேண்டாம் இந்த அகங்காரம்



சமயக்கட்டுப்பாடுகளை மிக நுணுக்கமாகக் கடைப்பிடித்து வாழும் ஒரு பகுதியினர் இந்த உலகில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். சமயம் தான் உலகம் என்று வாழ்பவரிடையே ஒரு விதமான முரண்பாடு காணப்படுவதை நாம் அறிந்துகொள்கிறோம்.

அதாவது கொள்கையும் நடைமுறையும் வேறுபட்டனவாக இருக்கின்ற கொடுமைதான் அது. ஆணவம், அகங்காரம் கூடாது. அகங்காரம் ஆவணம்தான் இறைவனிடம் இருந்து எம்மை பிரித்து நரகத்தில் சேர்க்கிறது! என்று ஓயாமல் உபதேசிக்கும் சமயத்தலைவர்கள் பலர் அகங்காரத்தின் உச்சியில் இருப்பார்கள்.

ஆணவத்தை விட்டு விடுங்கள் என்று எமக்கு உபதேசம் செய்யும் சுவாமிமார் நாம் விலக்கிவிட்ட ஆணவத்தை எல்லாம் ஒட்டுமொத்தமாகச் சேர்த்து மூட்டை கட்டி தாம் வைத்திருக்கும் கொடுமை மிகவும் துன்பமானதாகும்.

பொதுவாக மதத்தலைவர்களை சந்திக்கச் சென்றோமானால் அவர்களது இடத்தில் ஒரு நாற்காலி மட்டுமே இருக்கும். அதாவது அவர் மட்டுமே உயர்வானவர் ஏனையோர் தாழ்ந்தவர்கள் என்று அவரே முடிவு செய்துவிடுவார். துறவிகள், சுவாமிகள், சமயப் பெரியோர்கள் போன்றோருக்கு இந்த மனநிலை இருப்பது சிறந்ததாகக் கூறமுடியாது. அதாவது அவர்களின் துறவறத்துக்கே மிக இழுக்கான செயற்பாடாக அமைகிறது.

"காட்டுயர் அணைமேல் இருக்கவும் பயந்தேன். காலின் மேல் கால் வைக்கப் பயந்தேன். காலினைக் களித்து நன்கு நீட்டவும் பயந்தேன். நீட்டிப் பேசுதலை நினைக்கவும் பயந்தேன்" என்று அடக்கத்துடன் பாடினார் வள்ளுவர். அவர்தான் போற்றத்தக்க சமயத் தலைவர்.

சில சாமியர்களைப் பார்த்தால் "நான் மிகப்பெரிய ஆளாக்கும் நீங்களெல்லாம் அற்பத்தனம் நிறைந்த பூச்சிகள்" என்கின்ற பாவனையில் ஊருக்குள் நடமாடும் போது "ஐயோ துறவின் வழி இவர்கள் செல்ல வேண்டிய முத்திக்கு இது தடையல்லவா" என்று அறிவாளிகள் சிலர் கவலைப்பட்டதுண்டு.

மிக உன்னதமான துறவிகள் என்று பலராலும் போற்றப் பட்டவர் காஞ்சி பீடத்தில் இருந்து நூறாண்டு வாழ்ந்த மகா பெரி யவர். அவர் தான் துறவிக்கான இலக்கணத்துக்கு எடுத்துக்காட் டாக விளங்கியவர். மாட்டுத் தொழுவத்தில் தங்குவார். எளிமையான மகான் கர்வம் சிறிதும் இல்லாத கல்விக்கடல்.

வாழ்க்கையில் நீங்கள் இழந்த பாக்கியம் எதுவும் உண்டா? துறவு பெற்றால் இந்தப்பேறு எமக்கு அமையவில்லையே என்று எதைக் குறித்தாவது நீங்கள் வருந்தியது உண்டா? என்று அறிஞர்கள் சிலர் கேட்டனர்.

சுவாமிகள் பளிச்சென்று " இந்தப்பீடத்துக்கு என்று ஒரு மரபு உண்டு. பீடாதிபதியாக இருக்கின்றவனை எல்லோரும் விழுந்து நமஸ்காரம் பண்ணுவார்கள்.... ஆனால் அவன் யாரையும் விழுந்து நமஸ்காரம் பண்ணுவதில்லை. பீடத்துக்கு அது பொருத்தமற்ற விடயமும் ஆகும். நான் சிறுவயதிலேயே பட்டத்துக்கு வந்து விட்டேன். பல பெரியவர்களைச் சந்திக்கும் போது எல்லாம் விழுந்து நமஸ்காரம் பண்ணி ஆனந்தப்படணும் என்று நினைப்பேன். ஆனால் முடியாது. நான் மதிக்கும் புலவரை விழுந்து நமஸ்காரம் செய்யும் பாக்கியத்தை இழந்து விட்டேன். இது எனக்கு மிகவும் கவலை" என்றார்.

ஆஹா..... அவரல்லவா பெரியவர். தன்னைவிடப் பெரி யவர்களை நமஸ்கரிக்கும் எண்ணமல்லவா அகங்காரம் அற்ற நிலை. இன்றைக்கும் பல சாமியர் தங்களை விடப் பெரியவர்கள் யாரும் இருக்கவே முடியாது என்று செல்கிறவர்களை என்ன செய்வது? விஸ்வாமித்திரரும் வசிட்டரும் தேவலோகம் போனார்கள். அங்கு வசிட்டருக்கும் நாற்காலி போட்டார்கள். விஸ்வாமித்திரருக்கு நாற்காலி இல்லை. அவர் கோபித்துக் கொண்டார். பிரமன் அவரை சமாதானம் செய்து "உங்களை விட அறிவில் குறைந்த ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்து மேலே வந்தால் ஆசனம் கிடைக்கும்" என்றார்.

வரும் வழியில் ஏழை விவசாயி ஒருவரைப்பார்த்து அறிவற்றவன் என்று விஸ்வாமித்திரர் முடிவு செய்து அவனை அன்னதானத்துக்கு அழைக்க நினைத்தார். அவன் தனது மனைவியுடன் ஏதோ சண்டையிட்டுக் கொண்டு இருந்தான் அதைக்கவனிக்கச் சொன்னார் வசிட்டர். விவசாயியின் மனைவி உணவு கொண்டு வந்திருந்தாள். சாப்பிடப்போன விவசாயி "அப்பாவும் அம்மாவும் சாப்பிட்டாச்சா?" என்றான்.

"அவர்களுக்கு என்ன அவசரம்? உழைக்கிற நீங்கள் முதலில் சாப்பிடுங்கோ அதற்குப்பின்னர் அவர்கள் சாப்பிடட்டும் என்றாள் மனைவி. உடனடியாக எழுந்த விவசாயி "பெற்றவர்கள் உண்ணாமல் நான் சாப்பிடவா? உருப்படுவேனா. இந்த வேலை இங்கு சரிவராது. முதலில் அவர்கள் சாப்பிடட்டும்". அந்தத்தகவலை எனக்குச் சொல்லு.... அதன் பின்னர் நான் சாப்பிடுகிறேன்." என்று வயலுக்குபோய்விட்டான்.

"இவனா அறிவற்றவன்?" என்று வசிட்டர் கேட்டார்.

"எனக்கு ஏன் சொர்க்கத்தில் நாற்காலி கிடைக்கவில்லை என்று இப்போது புரிகிறது" என்றார் விஸ்வாமித்திரர்

எவரையும் எம்மைவிட குறைவாக நினைப்பது நல்லதல்ல! சமயத்தலைவர்கள் அப்படி நினைப்பது எமது சமயத்துக்கே நல்லதே அல்ல!

சுகி.சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊர்காவற்றுறை கரம்பொன் சிறிய புஸ்பமகளிர் வித்தியாலய மாணவிகள் அண்மையில் தென்னிலங்கைக்கு கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டிருந்தபோது பேராதனைப் பூங்காவை பார்வையிடுகின்றனர் (127)

# யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களை மீளக்குடியமர்ந்து மீண்டும் ஒன்றிணைந்து வாழ விடுங்கள்

## மேல் மாகாணசபை உறுப்பினர் ஹுசைன் முஹம்மத்

யாழ்ப்பாணம், ஜூலை12

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் குடியமர்ந்து இங்குள்ள மக்களுடன் சகோதரர்களாக வாழவிடுங் கள். தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் இணைந்து பலவேலைத் திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் பொருளாதார விருத்திக்கு உதவுகின்றார்கள் என்று கொழும்பு முன்னாள் மேயரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான ஹுசைன் முஹம்மத் தெரிவித்துள்ளார்.

மீளக்குடியேறும் முஸ்லிம் மாணவர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் அதிபர் எம்.ஏ. முபாறக் தலைமையில் நடைபெற்றது.

இலங்கை இஸ்லாமிய நிலையம், இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி, உலக இஸ்லாமிய அமைப்பு, முஸ்லிம் எய்ட் தகவல் வழிகாட்டல் அமைப்பு என்பன இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தன.

ஹுசைன் முஹம்மத் மேலும் பேசுகையில்:

சுகாதாரம் கல்வி போன்ற முக்கிய தேவைகளில் எமது மக்கள் உரிய பயனைப்பெற வேண்டும் என்பதால் இந்தத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளோம்.

ஏனைய தேவைகள் குறித்தும் திட்டங்கள் குறித்த ஆலோசனைகளை எடுத்துள்ளோம்.

சேதமடைந்த வீதிகளைப் புனரமைக்கவும் புதிய வீடுகளைக் கட்டிக்கொள்ளவும் காணி இல்லாதவர்களுக்கு அதனைப் பெற்றுக் கொடுப்பதிலும் கூடிய தான பல்வேறு வேலைத்திட்டங்களையும் உள்ளடக்கவுள்ளோம்.

தற்போது மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே அவர்களுக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. எனினும் அவர்கள் தமது சொந்த நிலத்தில் குடியேறுவதில் ஆர்வம் கொண்டுள்ளனர்.

இந்த மக்களுக்கு இஸ்லாமிய அமைப்புக்கள் எல்லா உதவிகளையும் வழங்கத் தயாராகவே உள்ளன. இங்குள்ள குறைபாடுகளை அறிந்து கொள்ளவிரும்புகின்றனர்.

இதற்கான தேவைகளை அறிந்து திட்டங்களைச் சமர்ப்பிக்க நாம் தயாராக உள்ளோம்.

இஸ்லாமிய நிலையம் அரசியல் அல்லது கட்சி சார்பான அமைப்பு அல்ல. யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லாப் பள்ளிகளும் எமது நிதி உதவியைப் பெற்றுள்ளன. தொடர்ந்தும் நற்பணி செய்யவேண்டும். அதுவே எமது குறிக்கோள் எனவும் ஹுசைன் முஹம்மத் தெரிவித்தார்.

இஸ்லாமிய நிலையப் பணிப்பாளர் றஹீத் தலைமையிலான யாழ்ப்பாணம், கிளிநொச்சி இஸ்லாமிய சம்மேளனத் தலைவர் அல்ஹாஜ் ஏ.எச்.ஜமால் மொஹைதீன் உட்படப் பலர் நிகழ்வில் உரை நிகழ்த்தினர்.

பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், ஒஸ்மானியக் கல்லூரி நூலகத்துக்கென நூல்கள் என்பனவும் வழங்கப்பட்டன. (வ-7)

# கலாசார நிகழ்வுகளால் தான் இளம் சமுதாயத்திடம் மரபு ரீதியான பண்பாடுகளை வளர்க்க முடியும்

## ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திருநாவுக்கரசு

யாழ்ப்பாணம், ஜூலை 12

இளம் சமுதாயத்தினர் மத்தியில் கலை ஆர்வத்தையும், தமிழ் மொழிப்பற்றையும் ஏற்படுத்துவதற்கு கலாசார நிகழ்வுகள் நடத்தப்படவேண்டும்.

இதன்மூலம்தான் மரபு ரீதியான கலை, பண்பாடுகள் பேணுவதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்த முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு.

துன்னாலை, அல்லையம்பதி வடிவேல் மண்டபத்தில் அகில இலங்கை கலை இலக்கியச் சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்ற கலை இலக்கியப் பெருவிழாவில் உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:

இன்றைய இளைய சமுதாயத்தின் போக்குகள் திசைமாறிக் கொண்டு செல்கின்றன. இதற்குக் காரணம் சிறந்த வழிகாட்டல்கள் இல்லாமையே ஆகும்.

தற்போது கலாசார விழாக்கள் இடம்பெறும் இடங்களில் இளைய சமுதாயம் தம்மை ஈடுபடுத்துவது கிடையாது.

தமிழ்க் கலைகள் தவிர்ந்த ஏனைய இன்னிசை சார்ந்த குதூகலிப்பான நிகழ்வுகளில் தம்மை ஈடுபடுத்தி தமது நேரத்தையும் வீணடித்துக்கொண்டு இருக்கின்றனர்.

இந்தப் போக்கினை மாற்ற வேண்டும். தமிழ்க் கலையுடன் சார்ந்த நிகழ்வுகளை நடத்தி அதிக எண்ணிக்கையான இளையோரை அதில் ஈடுபடுத்தி அதன் தார்ப்பரியத்தை விளங்கக்கூடிய முறையில் எடுத்துக் காட்டவேண்டும்.

இதற்குக் கால தாமதங்கள் ஏற்படுத்த பாடசாலை, கல்லூரிகள் போன்ற இடங்களில் கலை சார்ந்த நிகழ்வுகளை நடத்த வேண்டும். இவ்வாறான ஒரு வழிகாட்டல் இருந்தால்மட்டுமே இளைய சமுதாயத்தை நல்வழிப் படுத்த முடியும் - என்றார். (வ-313-160)

# உடுவில் பிரதேச செயலர் பிரிவின் இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்ற தேசிய கலை இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

அவற்றின் விவரம் வருமாறு:

**கட்டுரை**

*கனிஷ்டபிரிவு*

ச.யதுஷா (இணுவில் கந்தசாமி கோயில் இளம் தொண்டர் அறநெறிப் பாடசாலை) க.மோகன ஜெனனி (இணுவில் இந்துக் கல்லூரி), வி.ரகன்யா (இணுவில் இந்துக்கல்லூரி).

*சிரேஷ்ட பிரிவு*

வ.துவாரகள் (இணுவில் இந்துக்கல்லூரி), அ.றணுசியா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), ம.மஞ்சுகா (இணுவில் இந்துக் கல்லூரி).

**சிறுகதை**

*கனிஷ்டபிரிவு*

வ.சொரூபிகா (இணுவில் இந்துக் கல்லூரி), பா.டிலாயினி (ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்), யோ.டோஜிகா (இணுவில் இந்துக் கல்லூரி).

**கவிதை**

*கனிஷ்டபிரிவு*

சி.கம்ஷாயினி (இணுவில் இந்துக்கல்லூரி), ம.மதுஷா (இணுவில் இந்துக்கல்லூரி), இ.கீர்த்தனி ( கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை).

*சிரேஷ்ட பிரிவு*

ச.யதுஷா (இணுவில் கந்தசாமிகோயில் இளந்தொண்டர் அறநெறிப் பாடசாலை), இ.டெனா ( ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்), சு.நிதேஜினி( உடுவில் மான்ஸ் மகளிர் வித்தியாலயம்).

**கைப்பொருத்து**

*கனிஷ்ட பிரிவு*

இ.கீர்த்தனி( கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), அ.கோபிதா (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), வி.திவாஹரி( இணுவில் கந்தசாமிகோயில் இளம் தொண்டர் அறநெறிப் பாடசாலை).

**கவிதை**

*கனிஷ்ட பிரிவு*

க.மதிவதனி ( இணுவில் கந்தசாமிகோயில் இளம் தொண்டர் அறநெறிப் பாடசாலை), ப.கௌரீசன் (இணுவில் கந்தசாமிகோயில் இளம் தொண்டர் அறநெறிப் பாடசாலை), ஜெ.பிரணவன் (இணுவில் கந்தசாமிகோயில் இளம் தொண்டர் அறநெறிப் பாடசாலை)

*சிரேஷ்ட பிரிவு*

ச.யதுஷன் ( இணுவில் கந்தசாமி கோயில் இளம் தொண்டர் அறநெறிப் பாடசாலை), பா.ஸ்ரீ கோபிகிருஸ்ணா (இணுவில் கந்தசாமிகோயில் இளம் தொண்டர் அறநெறிப் பாடசாலை), சு.பிரஜீவன்ராம் ( இணுவில் கந்தசாமிகோயில் இளம் தொண்டர் அறநெறிப் பாடசாலை) (வ)

(வளரும்.)

# தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையால் தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சிநெறிக்கு ஜீ.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சையில் இருதடவைக்கு மேற்படாமல் கணிதம், ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் திறமைச்சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது ஏதாவது நான்கு பாடங்களில் திறமைச்சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் ஜிசீஈ. உயர்தரப் பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் 16 முதல் 25 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். தகுதியுடைய விண்ணப்பதாரிகள் தமது சுயவிவரத்துடன் கல்வித் தகைமைகள் பயிலவிருக்கும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டு மாவட்ட முகாமையாளர் (NAITA) இல.07, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு மாவட்ட முகாமையாளர் இ.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். (வ-313)

# நியமனம்

காரைநகர், ஜூலை 12

தீவக வலய கணினி வள நிலையப் போதனாசிரியராக நல்லதம்பி வில்லியம் சாந்தகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் கணினிப் பாட ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் பதவி உயர்வுடன்தீவகவலயகணினி வள நிலை போதனாசிரியராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். (ம-250)

# இடமாற்றங்கள்

கொடிகாமம், ஜூலை 12

கொடிகாமம் அஞ்சலகத்தில் அஞ்சல் அதிபராகக் கடமையாற்றிய திருமதிவ.யோகராணி பருத்தித்துறை அஞ்சலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

இதேசமயம் பருத்தித்துறை அஞ்சலகத்தில் கடமையாற்றிய ரி.ரசீகரன் கொடிகாமம் அஞ்சலகத்துக்கு மாற்றம் பெற்றுக் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். அஞ்சல் திணைக்கள இடமாற்றச் சபையின் தீர்மானத்துக்கு ஏற்ப இந்த இடமாற்றங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ்
# இளைய சமுதாயத்தின் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள்

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழான மாணவர் மெய்யறிவு நற்பண்பு விருத்தித் திட்டம் இந்த மாதம் 15 ஆம் திகதியுடன் ஐந்தாண்டுகளை நிறைவு செய்வதையொட்டிய கட்டுரை இது -தொகுத்து வழங்கியுள்ளவர்

**நந்தன விஜேசிங்க**
(பணிப்பாளர், சமூக அபிவிருத்தி அலுவல்கள், ஜனாதிபதி செயலகம்)



''வடக்கின் வசந்தம்'' அபிவிருத்தித்திட்டத்தின் கீழான மாணவர் மெய்யறிவு நற்பண்பு விருத்தி தேசிய நிகழ்ச்சித் திட்டம் ஐந்தாண்டுகளை நிறைவு செய்கிறது.

இது தொடர்பான விசேட நிகழ்ச்சித் திட்டம் 2006-06-15 முதல் 2011-07-15 திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தத் திட்டமானது எதிர்வரும் பொஸன் பௌர்ணமி தினத்தில் ஐந்தாண்டுகளை நிறைவு செய்கிறது.

கடந்த மூன்று தசாப்தங்களாக வன்முறைப் புறச்சூழல் காரணமாக நாட்டின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் இருள் சூழ்ந்த பிரதேசங்களாகப் பெரும் அவலங்களுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாகியிருந்துள்ளன. அந்தப் பயங்கரவாதம் ஜனாதிபதியால் முற்றாக ஒழிக்கப்பட்டு அவரது வழிகாட்டலின் கீழ் ''வடக்கின் வசந்தம்'' நென குண வெடும; சிசுதிரிய என்ற மாணவர் மெய்யறிவு நற்பண்பு விருத்தி தேசியத் திட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. இந்தத் திட்டத்தின் பல்வேறு கருத்திட்டங்களின் ஊடாக மோதல் இடம்பெற்ற மற்றும் கஷ்டப் பிரதேசங்களின் பாடசாலைகளில் உயர்தரங்களில் கல்வி பயிலும் பல்வேறு இனப்பிரிவுகளைச் சேர்ந்த மாணவ மாணவிகள் மத்தியில் பயங்கரவாதம் காரணமாக ஏற்பட்ட மனத்தாக்கங்களைத் தணிப்பதில் உதவுவதுடன் சீர்குலைந்து போயுள்ள அவர்களின் கல்வி நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு அவர்கள் வலுவூட்டப்படுகின்றனர். இந்தத் திட்டத்தின் மூலம் அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மாணாக்கருக்கு ஏற்கனவே பல நன்மைகள் கிட்டியுள்ளன. அந்தப்பிரதேசங்களுக்குப் புறம்பாக நகர்ப்புற, குறைந்த வருமானம் பெறும் இளைஞர், யுவதிகள் மத்தியிலும் இத் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் பல்வேறு செயற்பாடுகள் விஸ்தரிக்கப்படவுள்ளன. இனங்களுக்கும் மதங்களுக்குமிடையான நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், இளைய சமுதாயத்தைப் பலப்படுத்துதல், தலைமைத்துவ திறன் விருத்தி என்பன இத்தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் விசேட செயற்பாடுகளாக ஒழுங்கமைந்துள்ளன.

### நிறைவேறிய திட்டங்கள்

கடந்த ஐந்தாண்டு காலத்துள் இந்தத் திட்டத்தின் கீழ் உளப்பாங்கு விருத்திக்கும் சமூக அபிவிருத்திக்குமான செயலமர்வுகள், மாணவர்விருத்தி சமூக கழகங்களை நிறுவுதல், மாணவர் விருத்திப் புலமைப்பரிசில் வழங்கல், மாணவருக்கான கண்காட்சிகள், மாணவர் விருத்தி அரங்காற்றுகை மற்றும் உளவளத் துணை ஆலோசனை, பாசறைகள் போன்ற பல்வேறு விசேட செயற்பாடுகள் இந்த நாட்டின் பல்லின இளைஞர் யுவதிகளின் பங்களிப்புடனும் நல்லிணக்கத்துடனும் நடத்தப்பட்டன. இலங்கையின் தனித்துவத்தைக் கட்டிக்காக்கின்றவாறும் இந்த நாட்டுச் சம்பிரதாயங்களுக்கு மதிப்பளிக்கப்படும் விதமாகவும் உரிய வரவேற்பு கிட்டுகின்றவாறும் அவை முன்னெடுக்கப்பட்டன. அவற்றின் மூலம் நல்லிணக்கம் நிலவும் பசுமையான காலப்பிரிவொன்றை ஏற்படுத்துவதற்கும் ஆசியாவின் அறிவு மையமொன்றாக இலங்கையை உருவாக்கி விடுவதற்குமே வடமாகாணத்திலும் வடமத்திய மாகாணத்திலும் மாணவர் மெய்யறிவு நற்பண்பு விருத்திக் கழகங்கள் அமைக்கப்பட்டன.

விசேடமாக சித்திரைப் புத்தாண்டுப் பெருவிழா, உலக சிறுவர் தினம் என்பவற்றுடன் வேறுபல நிகழ்ச்சித் திட்டங்களும் இதன்கீழ் ஒழுங்கு செய்யப்பட்டன.

### ''பல்லினத்தன்மையில் ஒருமைப் பாடு -2011''

''சமாதானச் சகவாழ்வும் பல்லினத் தன்மையும் -2011'' போன்ற சிறப்பான நிகழ்ச்சித் திட்டங்கள் இளையோர் சமுதாயத்தின் மத்தியில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதில் சிறப்பாகப் பங்களிப்பாற்றின.

### திட்டத்தின் குறிக்கோள்

பயங்கரவாதம் காரணமாகக் கடந்த சில தசாப்பதங்களாக நாட்டின் சமூக கலாசாரம், புறச்சூழல் முழுவதிலும் நிறைந்துள்ள பகைமை, நம்பிக்கையீனம், சந்தேகம், பீதி என்பவற்றை நீக்கி எல்லா இனங்களுக்கிடையிலும் மதிப்பையும் கௌரவத்தையும் நிலைப்படுத்திவிடுவதற்கும் ஒவ்வொருவரினதும் அடையாளபடுத்தலைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கும் மாணவர் மெய்யறிவு, நற்பண்பு, சமூக உளப்பாங்கை அபிவிருத்தி செய்வதே இந்தத் திட்டத்தின் குறிக்கோளாகக் கொள்ளப்படுகிறது. அந்நியோன்யமான புரிந்துணர்வை மேலும் மேம்படச் செய்வதன் மூலம் சில தசாப்தங்களாக இலங்கைச் சமுதாய கட்டமைப்பில் அதிக பலத்தினால் நிலைப்படுத்தப்பட்டுள்ள சமுதாயப் பிறழ்வை யதார்த்த நிலைக்கு மாற்றமுறச் செய்வதும் இந்தத் திட்டத்தின் இன்னுமொரு முக்கிய குறிக்கோளாகிறது. இனம், மதம், குல வித்தியாசங்கள் ஊடாகக் கட்டமைந்துள்ள விரும்பத்தகாத சமுதாய இணைவுகளை இனங்கண்டு கொள்வதும் அதன்மூலம் சமுதாய அபிவிருத்திக்கு எதிர்கொள்ள நேரும் தடைகள் பற்றி இளைய சமுதாயத்தினர் மத்தியில் தெளிவை ஏற்படுத்துவதும் மாணவர் மெய்யறிவு நற்பண்பு விருத்தித் திட்டத்தின் எதிர்பார்ப்பாகும். பல்வேறு தரப்புக்களாகப் பிரிந்து வேறு பட்டு அடையாளப்படுத்தலொன்று கட்டியெழுப்பப்பட்டிருந்தாலும் கூட அவை அனைத்தும் மனிதகுலத் தொடர்புகள் என்ற அடித்தளத்தின் மீதே கட்டமைகின்றன என்பதைத் தெளிவுபடுத்துவதே மாணவர் மெய்யறிவு நற்பண்பு விருத்தித் திட்டத்தின் அபிலாசையாகும். இன்றைய அளவில் இந்தத் திட்டத்தில் மோதல்கள் இடம்பெற்ற மற்றும் கஷ்டப் பிரதேசங்கள் பலவற்றின் பாடசாலைகளின் மாணவ, மாணவியரின் பங்களிப்பு பெறப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தின் பல்வேறு பாடசாலைகள் இந்த சகோதரப் பாடசாலைகளுடன் நல்லுறவை வலுப்படுத்தும் முகமாகத் துறைசார்ந்த அறிவுரைகள் மற்றும் இணைப்புப் பயணங்கள் மூலம் பங்களிப்பு நல்கியுள்ளன.

எமது இந்தத் தேசியத் திட்டத்தின் ஊடாக இதுவரையில் இணைந்து செயலாற்றியுள்ள இளையோரிடையே கட்டமைந்துள்ள சகோதர வாஞ்சையை விரிவுபடுத்தி முன்னெடுத்துச் செல்வதும் அதன் மூலம் தொடர்பாடல் வலையமைப்பொன்றை உருவாக்குவதும் மாணவர் மெய்யறவு, நற்பண்பு, சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்புவதும் இதன் அடிப்படைக் குறிக்கோளாகும்.

. சமாதானம், சமுதாய அபிவிருத்திக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளும் சிறப்பான இளைஞர், யுவதிகள் தரப்பொன்றை உருவாக்கி அவர்களை மாவட்டங்கள் ரீதியில் செயற்படத்தக்க சமாதான தூதுவர்களாக மாற்றுவதும் இந்தத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க் கப்படுகிறது.

அரச நிர்வாகம், கொள்கை ஆக்கம் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வதில் இளையோரின் பங்களிப்பை ஏற்படுத்துவதற்கும் மெய்யறிவு, நற்பண்பு விருத்தி தேசிய திட்டம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. புதியதொரு இலங்கை என்ற கனவை நனவாக்குவதற்கு அனைவரும் கைகோர்த்துச் செயற்படுவோமாக. ✱

## விண்ணக வாழ்வின் முதலாம், மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் இராசா கந்தவனம்**
தோற்றம்: 01.07.1927
மறைவு : 31.05.2008



**அமரர் கந்தவனம் பாக்கியம்**
தோற்றம் :15.03.1928
மறைவு: 12.07.2010

''உயிர்த் தெழுதலும் வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வர்'' (யோவா:11-25)

ஆயிரம் உறவுகள் அவனியில் இருந்தாலும் அப்பா, அம்மா
உங்கள் இருவரினதும் பசுமையான நினைவுகளை
எங்களால் மறக்க முடியவில்லையே!
தரணி போற்ற நாம் உயர்ந்திடத் தளராது உழைத்திட்ட அப்பா அம்மாவே
உங்கள் இன்முகம் காணாமல் இன்சொல் கேளாமல்
பாரினிலே பரிதவிக்கின்றோம் பரமனிடம் சென்றீர்களோ ?
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் ஆறாது நம் துயரம் மாறாது நம் கவலை

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக (13.07.2011) புதன்கிழமை மல்லாகம் சதாசகாய அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

ஏழாலை தெற்கு. தகவல்: ஜோ...

## இரண்டாவது அணியினருக்கான தையற் பயிற்சி அடுத்த மாதம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

காரைநகர் மணற்காட்டில் இடம்பெற்று வரும் தையற் பயிற்சி நெறியின் இரண்டாவது அணியினருக்கான பயிற்சி அடுத்த மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளது.

காரைநகர் மணற்காட்டில் அமைந்துள்ள மகேஸ்வரன் தர்மசுரபி மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் அனுசரணையுடன் இந்தத் தையற் மனையியல் பயிற்சி வகுப்பு இடம்பெற்று வருகின்றது.

இங்குவறுமைக் கோட்டுக்குட்பட்ட 40 மாணவிகள் இரு பிரிவுகளாகப் பயிற்சியைப் பெற்று வருகின்றனர். இவர்களுக்கானபயிற்சி அடுத்த மாதம் நிறைவு பெற்றதும் இம் மாணவிகளின் சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாகத் தையல் நிலையம் ஒன்றை அமைத்துக் கொடுப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

(எ-60)

**மலிவு விற்பனை**
T.V, DVD பிளேயர், Box Quitar, Base Quitar, Camara, நுளம்பு வலை.
இடம்: 74/12 இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். தொ.பே: 0777110535
தொடர்பு: S.N இராமநாதன், சர்மிளா போட்டோ, நல்லூர், யாழ்ப்பாணம்.

**ஜனஜய** லொத்தர்
உத்தியோகப்பூர்வ முடிவுகள்
வாரம் 243 | சீட்டிழுப்புத் திகதி 10.07.2011

வெற்றி இலக்கங்கள்: 02 31 41 55
சுப்பர் இலக்கம்: 06

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 5,782,820/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 113825 | ரூ. 20/= | ரூ. 2,276,500 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 10380 | ரூ. 40/= | ரூ. 415,200 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 8839 | ரூ. 100/= | ரூ. 883,900 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 757 | ரூ. 200/= | ரூ. 151,400 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 200 | ரூ. 1,500/= | ரூ. 300,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 18 | ரூ. 3,000/= | ரூ. 54,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 57,82,820/= | |
| மொத்த எண்ணிக்கை | 134020 | | ரூ. 5,081,000/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 6,128,450/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி லொத்தர்
**அபிவிருத்தி லொத்தர் சபை**
Website: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் ஓர் ஆலயம்!

(28.06.2011 திகதி சென்றவாரத் தொடர்ச்சி)



வடமராட்சி மண்ணில் சிறந்த சேவையாற்றிவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பல குழுக்களாக இயங்கும் அலகுகள் அந்த வைத்தியசாலையின் வெற்றிக்கு அடித்தளமிடுகின்றன.

இவற்றில் தலம், தீர்த்தம் என்று எடுத்துக் கொண்டால் இலக்கம் 10 வரையான விடுதிகள் சிறப்பாகப் பேணப்படுகின்றன. இவற்றில் புராதன கட்டடங்களும் அடக்கம் என்றாலும் அவை பேணப்படும் முறையில் பழமை கண்ணுக்குப் புலனாகவில்லை. பெண்கள், ஆண் களுக்கான தனியான வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை விடுதிகள், உளநல சிகிச்சை விடுதிகள், சிறுவர் மற்றும் மகப்பேற்று விடுதிகள் சிறப்பாக அமையப் பெற்றுள்ளன.

பெண்களின் விடுதிகளில் உடைமாற்றும் அறை, மகப்பேற்று விடுதியில் தாய்ப்பாலூட்டல் பயிற்சி அறை என்பன பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகிறது.

விடுதிகளில் உணவு அருந்த வசதியாக சுத்தமான சாப்பாட்டு இடம் தளபாட வசதிகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளமை மேலும் சிறப்பைப் பெற்றுக் கொடுக்கிறது.

உளநல சிகிச்சை வேண்டுவோர் வைத்தியசாலையில் இருப்பதான உணர்வைத் தவிர்க்க வீட்டுச்சூழல் அமைப்புடன் வைத்தியசாலைக்கு வெளியே 'வாழ் குடில்' என்ற பெயரில் இல்லம் ஒன்று வைத்தியசாலையில் சுமார் இருநூறு மீற்றார் தொலைவில் பேணப்படுகின்றது.

தவிர அவசர சிகிச்சைப் பிரிவு, சத்திரசிகிச்சைக் கூடம், இரத்த வங்கி, பௌதீக சிகிச்சைப் பிரிவு Physiotheraphy Unit, எக்ஸ்றே பிரிவு Ultra Sound Unit, ஆய்வுகூட வசதிகள் என்பன தரமான சேவைகளை வழங்கி வருகின்றன.

வாசலில் பொலிஸாரின் அலுவலகம், பார்வையாளர் காத்திருப்பு மண்டபம், வைத்தியர்கள், தாதியர்களுக்கான விடுதிகள், மருந்துக் களஞ்சியம், சமையற்கூடம், சாரதிகளுக்கான வதிவிட வசதிகளுடன் கூடிய இரண்டு அம்புலன்ஸ் தரிப்பிடங்கள் காணப்படுகின்றன. இயக்குநர்களுக்கான விடுதி வசதிகளுடனான மின்பிறப்பாக்கி அலகு, ஆங்காங்கே அமையப்பெற்ற நீர்த்தாங்கிகள், சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள கழிவகற்றும் தொகுதியும் திட்டமும், புராகன பிரேத அறை அவற்றுக்கிடையே [illegible] நடைபாதைகள் என்பனவும் நன்றே அமைக்கப்பட்டு பேணப்படுகின்றன.

வைத்தியசாலையில் நடமாடும் போது பூங்கா ஒன்றில் நடமாடும் உணர்வே ஏற்படுகிறது. பணியாளர்களுக்கும் நோயாளர்களுக்குமான அறிவிப்புக்களுக்கு சகல பகுதிகளுக்கும் ஒலி அமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. காலையில் இவை பக்தி இன்னிசை கீதங்களை ஒலிபரப்பும். தேவையான அறி வித்தல்களும் அறிவுறுத்தல்களும் சம்பந்தப்பட்ட அனைவரையும் சென்றடைய இவை உதகின்றன.

> பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் சிறந்த சேவைக்காக வெள்ளி விருது கிடைத்தமையை ஒட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

இந்துக் கோயில் ஒன்றும் தென்னிந்திய மற்றும் றோமன் கத்தோலிக்க தேவாலயமும், வைத்தியசாலை வளவினுள் அமைந்துள்ளமை நோயாளர்களின் மனநிலையில் தெம்பைத் தருகின்றன. அங்குள்ள நூலகம் செய்திகளை வாசிக்கவும் அறிவுத் தேடலுக்கும் வழி வகுக்கின்றது. பூங்கா இருக்கைகள் அமைப்பதன் மூலமும் நோயாளர்களின் மனநிலையில் தெம்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளமை மேலும் வரவேற்கத்தக்க அம்சமாகும்.

வைத்தியசாலையின் வெற்றிக்கு ஜப்பானிய 5S முறைமை பேணப்படுவது காரணமாக அமைந்துள்ளது. அவையாவன:

Seiri - Classify வகைப்படுத்தல், இனங்காணல்

Seiton-organize - திட்டமிடல்

Seiso- Clean- தூய்மை

Seiketsu-Standardise - தரமாக்கல்

Shitsukie-Self discipline- சுய கட்டுப்பாடு பேணல் என்பனவாகும்.

இந்த முறைமை பற்றிய விளக்கங்களும் அதற்கு முந்திய பிந்திய நிலைமைகளும் காட்டூன் வடிவமாகப் படங்களாகத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. இங்கு வருபவர்கள் தமது நோயை மாற்றிச் செல்வது மட்டுமன்றி சிறந்த நடைமுறைகளையும் ஒழுக்கத் தையும் கற்றுச் செல்ல வாய்ப்பாகிறது என நோயாளி ஒருவர் தெரிவித்தார். அவர் அதனைத் தனது அலுவலகத்தில் நடைமுறைப்படுத்தவும் திட்டமிட்டுள்ளார்.

வைத்தியசாலைப் பணியாளர்களின் மனப்பாங்கில் பாரிய மாற்றங்களை அவதானிக்கத்தக்க நிலைமை காணப்படுகிறது. தாதியர் என்றால் மிகக் கோபமாக ஏசுபவர்கள் என்றும் சிற்றூழியர் என்றால் பணம் பிடுங்குபவர்கள், போதையில் இருப்பவர்கள் என்றும் நோயாளிகளால் கணிக்கப்பட்ட காலம் மலையேறிவிட்டது.

ஒரு நோயாளி அடுத்த படுக்கையில் இருக்கும் நோயாளியின் துப்புரவின்மையால் அவஸ்தைப்படும் நிலைமையும் வெகுவாகக் குறைந்துவிட்டது.

துப்புரவும், மனித நேயமும், சேவை மனப்பாங்கும், நோயாளியைத் தந்திரமாகத் திருத்தும் பாங்கும் ஊழியர்களிடம் கணிசமாக வளர்ச்சி கண்டுள்ளன. தீவிரமான பயிற்சிகள் பாடங்களின் விளைவுகளே இதற்கு காரணம். நாங்களும் ஒரு நாள் நோயாளியாக இங்கே வருவோம் என்கின்ற எண்ணம் பணியாளர்களிடம் மேலோங்க வைக்கப்பட்டுள்ளது. அப்போது தாங்கள் எவ்வாறு நடத்தப்படல் வேண்டும் என்பதை இப்போது இவர்கள் நடைமுறையில் காட்டுகிறார்கள் போலும்.

இவர்களுக்கான பயிற்சிகளையும் வழிகாட்டல்களையும் வைத்தியசாலையிலும் கொழும்பிலும் வைத்து வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரனின் நெறிப்படுத்தலின் கீழ் SLIDA நிறுவனம் நடத்தியிருக்கிறது. பணிப் புறக்கணிப்பு பற்றி செய்திகள் வருகின்ற காலப் பகுதியில் இந்த வெற்றிக்கான சிறப்பான மாற்றங்களை ஏற்படுத்த பல அர்ப்பணிப்புள்ள பணியாளர்கள் கைம்மாறு எதிர்பார்க்காமல் கடமை நேரம் முடிந்த பின்னும் இரவு, பகல் பாராமல் பாடுபட்டு இருக்கிறார்கள்.

**மு.சிவநேசன்**

உடலுழைப்பு மட்டுமல்ல நிதித் தேவைகளும் பெருமளவில் இருந்துள்ளமை தெரியவருகிறது. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அபிவிருத்திச் சபை முயற்சியில் வெளியாளரின் பங்களிப்புத் மட்டுமன்றி பணியாளும் பணம் சேர்க்க பல முயற்சிகளை மேற்கொண்டமை மெய்சிலிர்க்க வைக்கிறது. (தொடரும்)

# அன்னப் பணியுடன் கலைப்பணியுமாற்றும் தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமம்

(28.06.2011 திகதி சென்றவாரத் தொடர்ச்சி)

போர்க்காலத்தில் உணவின்றிக் கஷ்டப்பட்டு இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு உடனடி நிவாரணமாக சமைத்த உணவுகளை சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கி வந்தது. அதுமட்டுமல்லாது யாழ்.செயலகத்தாலும், பிற வர்த்தகர்களாலும் சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு வழங்கப்பட்ட அரிசி இடம் பெயர்ந்தோருக்கும் கஷ்டப்பட்டோர்களுக்கும் பகிர்ந்து அழிக்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரமத்தின் அன்றைய இந்தப் பேருதவி பலநூற்றுக்கணக்கான மக்களின் பசியைப் போக்கப் பெரிதும் உதவின.

இத்தகைய உதவிகளை மக்களுக்கு வழங்கியதன் மூலம் சந்நிதியான் ஆச்சிரமம் அன்னதானப்பணி, கலை, கலாசார தெய்வீகப்பணிகளுடன் மக்களின் வாழ்வாதார உதவித்திட்டத்துக்குள்ளும் பிரவேசித்தது.

**மாலவன்**

இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் சந்நிதியான் ஆச்சிரமம் தொடர்பாக இரு முக்கிய அம்சங்கள் இடம்பெற்றன. முதலாவதாக மறைந்த தும்பளை முருகேசு சுவாமிகளும், ஆ.அருணாசலமும் இன்னும் சிலரும் ஆச்சிரமத்தின் பணி களுக்கு ஆச்சிரமப் பொறுப்பாளர் மோகன தாஸ் சுவாமிகளுக்குத் தோள் கொடுக்க முனைந்தமை. இரண்டாவதாக உடுப்பிட்டியூர் பெருந்தகை அமரர் சபாபதிப்பிள்ளை தங்கராசா தற்போது சந்நிதியான் ஆச்சிரமம் இயங்கிவரும் காணியினை தனது சொந்தச் செலவில் வாங்கி ஆச்சிரமத்துக்கு அன்ப ளிப்பாக வழங்கினார். அவருடைய இந்தப் பேருதவி என்றென்றும் ஆச்சிர மத்தால் நன்றியோடு நினைவு கூறப்பட்டு வருகின்றது.

அவர் வழங்கிய காணியில் மறைந்த தும்பளை முருகேசு சுவாமிகள், குகன் ஸ்ரூடியோ உரிமையாளர் அமரர் ஆ.நாகரெத்தினம் மற்றும் அக்கறையுள்ள அடியார்கள் பலரது அயராத முயற்சியின் பயனாக சந்நிதியான் ஆச்சிரமத்துக்கெனப் புதிய கட்டடம் கட்டப்பட்டது. அந்தக் கட்டடம் கடந்த 1995 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி செல்வச்சந்நிதி முருகன் துணை நிற்க நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளால் திறந்து வைக்கப்பட்டது. அன்றைய திறப்பு விழா" சுவாமி சித்ருபானந்தாவின் ஆசியுரையுடன் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனின் சிறப்புச் சொற்பொழிவுடன் நிறைவுற்றது.

இந்தப் புதிய கட்டடத்தில் வடக்குத் தெற்காக 90 அடி நீளமான மண்டபம் ஒன்று உள்ளது. வடக்குத் திசை நோக்கியவாறு இரண்டு அறைகள். அதில் மேற்காக இருப்பது சுவாமி அறை. அந்த அறையில் நடுநாயகமாக முருகப் பெருமானும், மற்றும் நடராஜர் பின்னாளில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பாரியார் சுவாமிகளின் விக்கிரகம், மோகனதாஸ் சுவாமிகளின் குருநாதரான மயில்வாகனம் சுவாமிகளின் உருவப்படம் போன்றவையும் காணப்படுகின்றன. இத்தோடு மேற்குத் திசை நோக்கியவாறு உணவுப் பண்டகசாலையான இரு அறைகள் என்பன அமைந்திருந்தன.

ஆச்சிரமத்துக்கென சொந்தக் கட்டடம் அமைக்கப்பட்டு, அதில் ஆச்சி ரமம் இயங்கிவந்த சுமார் இரண்டு ஆண்டுகளில் அதாவது கடந்த 1997 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி தும்பளையிலே முருகேசு சுவாமிகள் சிவபதம் அடைந்தார். அவரது மறைவு ஆச்சிரமப் பொறுப்பாளருக்கு வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத பேரிழப்பாக அமைந்தது.

முருகேசு சுவாமிகள் மறைந்த போதிலும், அவராலும் அவரது தொண்டர்களின் முயற்சியினாலும் ஏற்கனவே சேகரிக்கப்பட்ட நிதியை வைத்துக் கொண்டு, மற்றும் பலரது நிதி உதவிகளினாலும் சுவாமி அறையின் நேர் பின்புறமாக வடக்குத் தெற்காக விஸ்தீரணமான மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது. 1998 ஆம் ஆண்டு மறைந்த முருகேசு சுவாமிகளின் முதலாவது குருபூசை தினத்தன்று மேற்படி மண்டபம் அமரத்துவம் அடைந்த அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியினால் திறந்து வைக்கப்பட்டது. இந்த மண்டபத்தின் மேல் விதானம் முழுவதும் திருக் கோயில்கள் பலவற்றினதும் முகப்புத் தோற்றங்கள் அழகு வர்ணத்தில் சித்திரமாக வரையப்பட்டுள்ளன. அவற்றின் மத்தியில் தவத்திரு வே.முருகேசு சுவாமிகள் நினைவு மண்டபம் என வெள்ளித் தகட்டினால் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த மண்டபத்தில் வரையப்பட்டுள்ள சித்திர அலங்கார வேலைப்பாடுகளும் வர்ணப் பூச்சுக்களும் ஏனைய மண்டபங்களின் மேல் விதானங்கள் முழுவதும் அண்மையில் நடைபெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

தவத்திரு முருகேசு சுவாமிகளின் நினைவு மண்டபத்துடன் வடக்குத் தெற்காக உள்ள நீண்ட மண்டபத்தின் தென் பகுதியில் தெய்வீகத்தை ஏற்படுத்தும் பின்னணியுடன் கூடிய கலையரங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. இந்தக் கலையரங்கில் அழகிய முருகப் பெருமானின் திருவுருவப்படம் மிகப் பெரிதாக வரையப்பட்டு ஒரு பகுதியில் மயில்வாகனம் சுவாமிகளின் திருவுருவப்படமும் வைக்கப்பட்டுச் சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவை எனப் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தக் கலை அரங்கில் இடம்பெறும் நிகழ்வுகளை நீண்ட மண்டபத்தில் வடக்குப் பக்கமாகப் அமர்ந்திருந்து பொது மக்கள் பார்க்க கூடியதாகவுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரமத்தால் நடத்தப்படும் கலை, கலாசார பண்பாட்டு, தெய்வீக நிகழ்வுகளை ஒழுங்கமைத்து நடத்துவதற்கென ஆரம்பிக்கப்பட்ட அதன் இணையமைப்பான சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் நிகழ்வுகள் யாவும் தற்போது இந்தக் கலை அரங்கிலேயே நடத்தப்பட்டு வருகின்றன.

ஆச்சிரமத்தின் முன் மண்டபத்தை அலங்கரிக்கும் அமரர்களான சுவாமிகள், ஞானிகள் பலரது பெரிய புகைப் படங்கள் பார்ப்போரைப் பரவசப்படுத்துகின்றன. கலை அரங்குடனான கேட்போர் கூடம் (வடக்கு-தெற்கு மண்டபம்) காலத்துக்குக் காலம் எடுக்கப்பட்ட பெறுமதியான, கனதியான, காத்திரமான நிகழ்வுகளின் புகைப்படங்கள், ஆச்சிரம சுவாமிகளுக்கும் இன்னும் பலருக்கு வழங்கப்பட்ட வாழ்த்து மடல்கள் யாவும் கண்ணாடியில் பிறேமிட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன. (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கருணாநிதியின் படுதோல்வியும் வடக்கின் உள்ளூராட்சித் தேர்தலும்


இவ்வாண்டு தமிழகத்தின் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. நடைபெற்ற தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் கூட்டணிக் கட்சிகளும் அமோக வெற்றி ஈட்டியது அனைவரும் அறிந்ததே. ஆனால் இது எப்படி சாத்தியமாகியது என்பது பல பேருக்குத் தெரியாத விடயமாகக் கூட இருக்கலாம்.

ஏனெனில் இந்தக் கூட்டணியை எதிர்த்து நின்ற கூட்டணி சாதாரண கூட்டணி அல்ல. மத்தியிலும்- மாநிலத்திலும் அதிகாரம் செலுத்திய காங்கிரஸ்- தி.மு.க கூட்டணி. அதிகாரபலம், மத்திய-மாநில அமைச்சர்களின் செல்வாக்கு, அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் அரச விழாக்கள், எல்லாவற்றுக்கும் மேலாக தி.மு.க அரசில் இலவசங்களுக்கும் குறைவில்லை. ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, இலவச தொலைக்காட்சி, கலைஞர் மருத்துவக் காப்பீடு, கொங்கிறீற் வீட்டுத் திட்டம் என்று நீண்டு கொண்டே செல்லும்.

அத்துடன் தமிழ்மொழி அந்தஸ்து, செம்மொழி மாநாடு என்ற மாயை என்று அடுக்கிக்கொண்டே போகலாம். இவ்வளவு இருந்தும் பெருமளவான வறுமைக் கோட்டுக்கு கீழ் வாடும் ஏழைத் தமிழக மக்களிடம் அதிகாரபலம், அடாவடித்தனம், வாரி வழங்கிய கோடிக்கணக்கான பணம், செல்வாக்கு, இலவசங்களைப் பறைசாற்றி நின்ற தேர்தல் வாக்குறுதிகள், பிரதமர் மற்றும் காங்கிரஸ் தலைவர்களின் தமிழகத் தேர்தல் பிரசாரங்கள் எதுவுமே எடுப்படாமல் போனதற்கான காரணம் என்ன?

ஈழத் தமிழர்களால் மட்டுமல்ல உலகில் வாழும் அனைத்துத் தமிழர்களாலும் தேடிக்கண்டு பிடிக்க வேண்டிய காரணம் அது. திராவிட முன் னேற்றக் கழகத்தின் ஆதரவு அலை என் பது அக்கட்சியின் ஆத ரவு வாக்குகள் என்பதையும் தாண்டித் தமிழ் மக்களின் காங்கிரஸ் தி. மு.க. மீதான கோபாவேசமுமே இதற்குக் காரணம்என்று அனைத்து அரசியல் விமர்சகர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இலவசங்களையும் சலுகைகளையும் கோடி கோடியாக இறைக்கப்பட்ட பணத்தையும் மத்திய மாநில அதிகார பலத்தையும் மீறி எழுந்த எழுச்சியும் கோபமும் என்ன? இதற்கு அரசியல் விமர்சகர்கள் தேவையில்லை. சாதாரண தமிழகப் பள்ளிக் குழந்தைகளே சொல்லுகின்றார். ஈழத்தமிழர்களுக்கு நடந்த கொடுமையும் அதற்குத் துணை போன காங்கிரஸ் - தி.மு.க கூட்டணியும் அதனால் எழுந்த கோபாவேசமுமே தமிழகத் தேர்தல் முடிவுகள் என்று.




2009 ஆம் ஆண்டு ஈழத்தில் இறுதிக்கட்ட யுத்தம் நடைபெற்றபோது இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அப்போதும் கணிசமான இடங்களை தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியே கைப்பற்றியிருந்தது. அந்த ஆண்டும் கடந்த ஆண்டும் நாடாளுமன்ற - சட்டமன்ற இடைத் தேர்தல்கள் நடைபெற்றன. அதில் எல்லாம் காங்கிரஸ், தி. மு.க கூட்டணியே அதிக பெரும்பான்மையினால் வெற்றி பெற்றிருந்தது. அப் போது ஈழத்தில் நடைபெற்ற கொடுமைகள் எல்லாம் தமிழக முதல்வராலும் அரச ஊடகங்களாலும் மூடி மறைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் மூத்த அரசியல் தலைவர் சொல்வதை நம்பினார்கள். எல்லாவற்றையும் நம்பினார்கள். மோசம் போய்விட்டோமென்று வெகுண்டெழுந்தார்கள். அதன் பயன்தான் தமிழகத்தின் தேர்தல் முடிவு.

தமது இன மானத்திற்காக அனைத்து வசதி, வாய்ப்புக்களையும் துறந்து தீர்ப்பு வழங்கிய தமிழக வாக்காளர்கள் அனைத்து உலகிலும் வாழும் தமிழர்களாலும் போற்றிப் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

* ஈழத் தமிழர்களுக்கு நிகழ்ந்த கொடுமைகள் ஐ.நா சபை நிபுணர் குழு அறிக்கை மூலம் வெளிவந்தமை.
* இவ்வளவு கொடுமைகள் நடந்தும் எதுவும் வெளிவராமல் தடுத்ததுடன் மத்திய அரசுடன் சேர்ந்து தமிழக முதல்வர் கருணாநிதி செய்த துரோகத்தனம்.
* போர்க் குற்றவாளிகள் சர்வதேச சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட வேண்டும்.

இதுதான் தமிழகத் தேர்தல் உலகுக்கு வழங்கிய செய்தி. தமிழகத்திற்கு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு மக்கள் பிரதிநிதிகளைச் சட்டசபைக்கு தெரியும் தேர்தல்தான் நடந்தது. இருந்தபோதும் அதையும் விட அந்தத் தேர்தல் மூலம் மக்கள் உரத்துச் சொல்லிய செய்திதான் முக்கியம் வாய்ந்தது. (வளரும்)

-மையூரான்-

# உலகத்தின் பார்வை ஈழத்தமிழர் மீது; நாம் விழித்தெழ வேண்டிய காலம் இது

## கலந்துரையாடலில் கருத்துரை

இன்று இலங்கைத் தமிழர் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்திருக்கும் காலம். உலகம் திரும்பிப் பார்த்து எம்மைப்பற்றிப் பேச ஆரம்பித்துள்ளது. இத்தருணத்தில் நாமும் விழித்தெழுந்து எம்மைப்பற்றியும் எமது இன்றைய நிலைபற்றியும் சிந்திக்க வேண்டிய காலம் இது. கரவெட்டியில் அண்மையில் நடைபெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்களுடன் நடத்திய கலந்துரையடல் ஒன்றின்போது வேட்பாளர் இ.சாந்தசொரூபன் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று எமது தன்மானத்தை விலைபேசும் காலமாக மாறியுள்ளது. எமக்குத் தேர்தல் காலங்களில் மட்டும் ஏதாவது கிள்ளித் தெளித்து எமது சிந்தனையை, கொள்கைகளை அழித்துவிடலாம்; அல்லது எமது பாதையை மாற்றி விடலாம் என அரசு திட்டமிடுகின்றது. ஆனால் மக்கள் இன்று மிகவும் தெளிவாகவுள்ளனர். முதலில் உரிமை, பின்னர்தான் சலுகை என்ற நிலைக்கு வந்துள்ளனர். தாம்பட்ட துன்பங்களை, வேதனைகளை எம் மக்கள் இலகுவில் மறந்துவிடத் தயாராக இல்லை.

நாம் இன்று எந்தவித அரசியல் உரிமையுமற்ற அரசியல் கைதிகளாகவே வாழ்கிறோம். எந்தவொரு காரியம் செய்வதாக இருந்தாலும் எமக்கு முன் அனுமதி பெறவேண்டும். எமது தேவைகளைச் செய்வதற்கு பயப்பட வேண்டியுள்ளது. எமக்கு உள்ள சாதாரண அன்றாட உரிமைகள் கூட இன்று முற்றாக மறுக்கப்படுகின்றன. உயிர்வாழ்வதற்கு உள்ள உரிமையை விட வேறென்ன உரிமை வேண்டும் என்றுகூடக் கேட்கப்படுகின்றது.

மக்களே, தமிழன் தன்மானத்துடன் வாழவேண்டும், தன்மானத் தமிழன் என்றும் கைகொடுப்பவனாக வாழவேண்டுமே தவிர மற்றவரிடம் கையேந்துபவனாக வாழ முயற்சிக்கக்கூடாது. நாம் எம் இனத்தை மறந்து, ஒற்றுமையை இழந்து, தன்மானத்தை விட்டுவிட்டு, பெறவேண்டிய அரசியல் உரிமைகளை மறந்து உயிர்வாழ்ந்தால் போதும் என்று எண்ணி வாழலாமா?

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பு சகல இடங்களையும் கைப்பற்றும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

ஆனால் முழு வாக்காளர்களும் வாக்களித்து நூறுவீத மக்கள் அமோக ஆதரவினை வழங்கியுள்ளார்கள் என்பதை உலகிற்குக் காட்ட வேண்டும். தமிழ்க்கூட்டமைப்பு வெல்வதல்ல முக்கியம். வாக்கு வீதம் முழுமையாக, நூறு வீதமாக இருக்கவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை தமிழ் மக்கள் நிரூபிக்க வேண்டிய நேரமிது.

இதை நிரூபிக்க உள்ளதோர் ஆயுதம் எமது வாக்குப் பலம் ஒன்று மட்டும் தான்.

எதிர்வரும் 23 ஆம் திகதி தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் கடமையுணர்வோடு தமது அமோக ஆதரவினை தமிழ்க் கூட்டமைப்புக்கு வழங்கித் தமிழரின் ஏகப்பிரதிநிதிகள் தமிழ்க் கூட்டமைப்பே என்பதை இலங்கை அரசுக்கும், உலகிற்கும் எடுத்துக் காட்ட முன்வர வேண்டும்- என்றார்.

# வேட்பாளர்கள் கோரும் பட்சத்தில் அவர்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள உள்ளூராட்சிச்சபை வேட்பாளர்கள், தமக்குப் பொலிஸ் பாதுகாப்பு தேவையெனின் அது பற்றிய கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் பாதுகாப்பு வழங்கத் தாம் தயாராக இருப்பதாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள உள்ளூராட்சிச் சபை வேட்பாளருக்கான கூட்டம் ஒன்று வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பொலிஸார் இதனைத் தெரிவித்தனர். இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது தேர்தல்களம் சூடுபிடித்துள்ளது. எனவே தேர்தல் சட்ட விதிகளை அனைவரும் பின்பற்றவேண்டும். தேர்தல் காலத்தில் சுவரொட்டிகள் ஒட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளதால் அதனை நீங்களும் தவிர்த்துக்கொள்ளுங்கள். அதனைவிடுத்து நேரடியாக நீங்கள் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுங்கள்.

பிரசாரக் கூட்டங்களை வைப்பதாக இருந்தால் அது பற்றி அறிவிக்கும் பட்சத்தில் அதற்கு பாதுகாப்புத்தர தாம் தயாராகவுள்ளனர். அதற்கும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை நாம் பெறவேண்டும். கட்சிபேதமின்றி பாதுகாப்புத்தர நாம் தயாராக இருக்கிறோம். இவ்வாறு பொலிஸார் வேட்பாளர்களுக்குக் கூறியுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த சுமார் 34 வேட்பாளர்கள் வரை கலந்துகொண்டனர். (த-4)

# வலி.தென்மேற்குப் பிரதேச மக்களுக்கு போதிய குடிதண்ணீர் வழங்க வேண்டும்

## ஈ.பி.டி.பி வேட்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை12

வலி.தென்மேற்குப் பிரதேசம் இரு மருங்கிலும் கடற்கரையை அண்டிய பிரதேசம் அங்கு 95 வீதமான நிலப்பகுதியில் நன்னீர் நிலை கள் இன்றியே உள்ளது. எனவே நீர் வழங்குவதற்கெனப் பொறுப் பான சபை பொறுப்புடன் நீர் வழங்க முன்வரவேண்டும்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் முன்னாள் தலைவரும் ஈ.பி.டி.பி பிரதேச சபை வேட்பாளருமான வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

தற்போது வலி. தென் மேற்குப் பிரதேச சபை தன்னிடமுள்ள வளத்தைப் பிரயோகித்து குடிதண்ணீர் வழங்குகிறது. என்னும் 10 வீதமான தேவையே மாதகல், சாந்தைப் பகுதிகளில் கிடைக்கின்றது.

மாதகல், சாந்தை, பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, காக்கை தீவு, ஆனைக்கோட்டை, நவாலி கிழக்கு ஆகிய பிரதேசங்கள் குடிதண்ணீருக்காக அவதியுறுகின்றன.

எனவே இரணைமடுக் குள அபிவிருத்திக்கு முன்னர் தற்காலிக ஏற்பாடுகளின் கீழ் பொக்கணையூடான குடிதண் ணீரை விஸ்தரிப்பதுடன், ஏனைய இடங்களுக்கு பவுசர் மற்றும் குடி தண்ணீர்த் தேவையைப் பூர்த்திசெய்யுங்கள் என்றார். (த-302)

# வலி.தெற்கில் பிரசாரத்தில் அமைச்சர் திஸ்ஸ ஹரலியத்த

வலி.வடக்கு, ஜூலை 12

யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர்களை ஆதரித்துப் பிரசாரம் செய்யும் நடவடிக்கைகளில் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் அமைச்சர்களும் கடுமையாக உழைத்து வருகின்றார்கள். வலி.தெற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் சிறுவர் விவகார பெண்கள் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ ஹரலியத்த தீவிர அரசியல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

இவர் வீடு வீடாகச் சென்று பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் சிறிய சிறிய பொதுக் கூட்டங்களையும் பகல்வேளைகளில் சனசமூக நிலையங்கள் மற்றும் பொது இடங்களிலும் நடத்தி வருகின்றார். தாவடிப் பிள்ளையார் சன சமூக நிலையத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் அமைச்சர் உரையாற்றினார். (த-86)

# வேட்பாளரின் பிரசார உத்தி

நாவற்குழி, ஜூலை12

உள்ளூராட்சித் தேர்தலில் பிரசாரம் செய்யும் ஒரு வேட்பாளர் சிறிய அளவிலான தனது படத்துடன் கூடிய மட்டையின் பின்புறம் அத்தியாவசிய தேவைக்குரிய தொலைபேசி இலக்கங்களை இணைத்துள்ளார்.

புதுவிதமான இப்பிரசார உத்தி தமக்கும் பயன்படுவதாக வாக்காளர்கள் கூறுகின்றனர். (த-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெலிக்கடை சிறைச்சாலையில்

## கைதிகளும் விளக்கமறியலில் உள்ளோரும் சந்திப்பதைத் தடுப்பதற்கு விசேட திட்டம்

கொழும்பு, ஜூலை 12

கொழும்பு, வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளும், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களும் சந்திப்பதைத் தடுப்பதற்கான விஷேட திட்டமொன்றை செயற்படுத்தவுள்ளது.

சிறைச்சாலையின் கைதிகளும் விளக்கமறியலில் உள்ளவர்களும் சந்தித்துக் கொள்வதால் நிர்வாகப்பிரச்சினை போன்றே முறைகேடுகளும் இடம்பெறுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலைமையை தடுப்பதற்காக சிறைக் கைதிகளை சந்திப்பதற்காக வருகை தருவோருக்கென தனியான நுழைவாயிலை அமைக்க திட்டமிட்டுள்ளது என திணைக்களத்தின் ஆணையாளர் மேஜர் ஜெனரல் வி.ஆர் சில்வா தெரிவித்துள்ளார். இந்த நடைமுறையை இந்த மாத இறுதிக்குள் செயற்படுத்த சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களை உறவினர்கள் தினந்தோறும் சந்திப்பதற்கான அனுமதி உள்ளதாகவும் சிறைக் கைதிகளை மாதத்தில் ஒரு தடவை மாத்திரமே உறவினர்கள் சந்திக்க முடியும் எனவும் மேஜர் ஜெனரல் வீ.ஆர். சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இந்த இரண்டு பிரிவினரும் ஒரே இடத்தில் உறவினர்களைச் சந்திக்கும் போது சிறைக்கைதிகளுக்கு உணவு உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் வழங்கப்படுவதால் முறைகேடுகள் இடம்பெற வாய்ப்புள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. புதிய நடைமுறை அமுலுக்கு வந்தவுடன் இந்தப் பிரச்சினைக்கான தீர்வைக் காணமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விளக்கமறியலில் வைக்கப்பட்ட சுமார் 700 பேர் தற்போது வெலிக்கடை சிறைச்சாலையில் இருக்கின்றனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (சி)

## மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க மஹிந்த அரசால் ஒருபோதும் முடியாது

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 12

மஹிந்த அரசு நாட்டை இருளுக்கு இட்டுச் செல்கின்றது. மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசால் ஒருபோதும் முடியாது.

- இப்படி ஜே.வி.பி. குற்றஞ்சாட்டுகிறது.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் காலை பத்தரமுல்ல, பெலவத்தையிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தொடர்ந்து கூறியதாவது:

வடக்கில் நிலைமை மிக மோசமாக உள்ளது. எதிர்க்கட்சிகள் சுதந்திரமாக பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள இடம் அளிக்கப்படுவதில்லை. அண்மையில் கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவரின் வீட்டுக்கு முன்னால் நாய் ஒன்றின் தலையைத் தொங்கவிட்டுச் சென்றுள்ளனர்.

**இராணுவம் அச்சுறுத்தல்**

ஜே.வி.பி. வேட்பாளர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களை அச்சுறுத்தியுள்ளனர். நேற்றுமுன்தினம் கிளிநொச்சி, தருமபுரம் பகுதியில் வாக்கு சேகரிக்கச் சென்ற ஜே.வி.பி. ஆதரவாளர்கள் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டனர்.

யுத்தம் நடந்துகொண்டிருக்கையில் யுத்தம் காரணமாக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதுள்ளதாக அரசு கூறியது. தொழில், சம்பளம், அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவு போன்ற மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாததற்கு யுத்தத்தைக் காரணமாகக் காட்டியது இந்த அரசு.

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்களாகின்றன. யுத்தத்துக்கு செலவிட்ட கோடிக்கணக்கான ரூபா பணம் எஞ்சியிருக்க வேண்டும். அப்படியிருந்தும் மக்களின் முக்கிய பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை.

இதன் பின்னர் அரசு பிரச்சினைகளைத் தீர்க்க அதிகாரம் வேண்டும் என்றது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரம் வேண்டும் என்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் என்றது. தேர்தலில் அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காவிட்டாலும் எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சலுகைகளை வழங்கி இழுத்தெடுத்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டது.

பிரச்சினைகளைத் தீர்க்க என்ன தேவையென அரசு கூறியதோ அவை அனைத்தும் இப்போது அரசுக்கு இருக்கின்றன. இருந்தும் இந்த அரசால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை. தேர்தல்களின்போது வழங்கிய வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை- என்றார் ஹேரத். (ஒ-சி)

## தமிழர்கள் 87பேர் இந்தோனேசியப் படையால் கைது

நியூஸிலாந்துக்குள் கப்பல் மூலம் சட்டவிரோதமான முறையில் உட்பிரவேசிக்க முயன்ற இலங்கைத் தமிழர்கள் 87 பேர் பற்றன் என்கிற இடத்துக்கு அருகில் நேற்று முன்தினம் இடைமறித்து கைது செய்யப்பட்டனர். இவர்கள் அலிசியா என்கிற கப்பலில் சில நாள்களுக்கு முன்னர் புறப்பட்டு இருந்தனர் எனத் தெரியவருகிறது.

கடலில் ரோந்துப் பணியில் ஈடுபட்டு இருந்த இந்தோனேசிய கடல் படையினர் இவர்களைப் பிடித்துள்ளனர். அத்துடன், இந்தக் கப்பலையும் மறித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களையும், கைப்பற்றப்பட்ட கப்பலையும் இந்தோனேசியக் கடற்படையினர் இந்தோனேசியாவுக்கு கொண்டு சென்றுள்ளனர். இந்தத் தமிழர்களில் சிறுவர்கள், பெண்கள் ஆகியோரும் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

**பஸ் விற்பனைக்கு**

மிகவும் நல்ல நிலையில் உள்ள
JJ-XXXX என்ற
இலக்கமுடைய அரை சொகுசு பஸ்
உடனடியாக விற்பனைக்குண்டு.
தரகர்கள் தேவையில்லை.
தொடர்பு: 0778865513

**காணி விற்பனைக்கு உண்டு**

தெல்லிப்பழை வீதியில் உள்ள சிறுவிளானில்
மெயின்றோட் அருகில் 34 பரப்புக் காணி
வெட்டுக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: மத்தேசு அருளப்பு
தொ.பே.இல.: 0779037518, 0779459186
பெரியவிளான், ஆத்தியோலை.

**ஆண்டு ஒன்றில் நீங்கா நினைவுகளுடன்**



செல்வன்
**விமலராசா எழுபருதி**

மலர்வு
25.08.1997

உதிர்வு
23.06.2010

நேற்றுப்போல் இருக்கிறது
நீ இருந்த நினைவுகள்.....
ஆண்டு ஒன்று சென்றதா.......?
ஆறாத விழிகளும்
மறையாத உன் நினைவுகளுமாய்- இனி
எம் வாழ்வு.



அம்மம்மா -
புவனேஸ்வரி
சிங்காரவேலு,
பெரியமாமா -
சி.குமரவேள்.

91/II, இந்து மகளிர்
கல்லூரி
ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(5723) (38)

**ஸ்ரீ வீரஆஞ்சநேயர் ஜோதிட நிலையம்**

"பண்டித் ஆஞ்சனப்பா"

இந்தியாவில் இருந்து வருகை தந்த பிரபல ஜோதிடர்
கைரேகை, நாமநட்சத்திரம், வெளிநாட்டுப் பயணம், கல்வி,
உத்தியோகம், வேறு என்ன பிரச்சினையாக இருந்தாலும்
ஒரு முறை இவரைச் சந்தித்து தீர்வு காணுங்கள்.

Room No:100,
GREEDY'S Hotel & Restaurant,
205, கஸ்தூரியார் வீதி,
ராஜா தியேட்டர் கட்டடம், யாழ்ப்பாணம்.
T.P: 0772723004
(5672)

**உடன் தேவை**

எமது ஸ்தாபனத்துக்கு சேல்ஸ் றெப்
(Sales Rep) உடன் தேவை.
தொடர்பு:
11 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
0212223857, 0772292436.

## 5வருடங்கள் சிறையிலிருந்து வந்தவர் மீண்டும் திருட்டுச் சம்பவத்தில் கைது

கொழும்பு, ஜூலை 12

பேலியகொட பகுதியில் வீடுகளுக்குள் புகுந்து பெறுமதியான பொருள்களைத் திருடினார் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட இளைஞரொருவர் ஏற்கனவே 5 வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவித்துவிட்டு வந்தவர் என மேல்மாகாண வடபிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போதே இவ்விடயம் தெரிய வந்துள்ளது.

ஒருசோடி காதணிகளை இவர் விற்க முயற்சித்தபோதே கைது செய்யப்பட்டுள்ளார். அதன் பின்மேற்கொண்ட தீவிர விசாரணைகளின் போது, இவர் விடுதலையாகி வந்தபிறகு சுமார் பத்து வீடுகளில் தங்க நகைகள், வெளிநாட்டு நாணயத்தாள்கள், கடிகாரங்கள் போன்றவற்றைத் திருடியுள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

ஹெரோயினுக்கு அடிமையான இவருக்கு ஹெரோயின் வாங்குவதற்கு நாளாந்தம் நான்காயிரம் ரூபா தேவைப்பட்டுள்ளது எனப் பொலிஸார் கூறினர்.

இவரால் திருடப்பட்ட நகைகள் அடகுவைக்கப்பட்டிருந்த நிலையங்களிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. (ச)

**நான்காம் ஆண்டு நினைவு தினம்**

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 06.11.1952 | 27.06.2007 |



**திருமதி தியாகேஸ்வரி வேலாயுதபிள்ளை**

திதி- துவாதசி (வளர்பிறை)

எம் பிறப்பிற்காக உதிரம் சிந்தி
வளர்ப்பிற்காய் பூவுடல் வருத்தி
எம் எதிர்கால வாழ்விற்காய்
ஆசைக் கனவுகள் கண்டீர்கள்
உம் மூத்த மகன் வைத்திய கலாநிதியாயும்
உமக்கு சுருதியைப் பேரப்பிள்ளையாயும் தந்துள்ளார்
உம் ஆசை மகன் கடல்சார் எந்திரியாகவும்
உம் நேச மகள் வங்கியாளராகவும்
உம் இளைய மகன் ''கணிதம்'' உயர் தரம் கற்கின்றான்
நீவீர் விரும்பியவாறு புதுமனை புகுந்தாகி விட்டது
நும் கனவுகள் நனவாகும் வேளை
எம்முடன் நீர் இல்லையே எனக் கண்ணீர் சிந்துகிறோம்.

"சாயிராம் மருந்தகம்",
கண்டிவீதி, சாவகச்சேரி.

கணவர்-
தி.வேலாயுதபிள்ளை.

(சி/574884)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த ராஜபக்ஷ போர்க்குற்றவாளி அனைத்து மாநிலங்களிலும் தீர்மானம்



## நிறைவேற்றுமாறு சீமான் கோரிக்கை

சென்னை, ஜூலை.12

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை போர்க்குற்ற வாளி என்று அறிவித்து இந்தியா விலுள்ள சகல மாநிலங்களிலும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

கர்நாடக மாநிலத்தில் உள்ள பயணிகள் விடுதியில் நேற்று முன்தினம் சீமான் செய்தியாளர் களை சந்தித்துப் பேசியபோது மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறு கையில்:

இலங்கையில் தனி ஈழம் அமைவதுதான் தமிழர்களின் குறிக்கோள். கடைசித் தமிழன் உள்ளவரை அதை வலியுறுத்து வான். ராஜபக்ஷவை போர்க்குற்ற வாளியாக அறிவிக்க வேண்டும் என எமது கட்சி போராட்டம் நடத்தி வருகிறது.

அண்மையில் தமிழக முதல மைச்சர் ஜெயலலிதா, ராஜ பக்ஷவை போர்க் குற்றவாளி யாக அறிவிக்க வேண்டும். இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று தமிழக சட்டசபையில் தீர்மா னம் நிறைவேற்றினார்.

இதே தீர்மானத்தை காங் கிரஸ்ஆளும்மாநிலங்களைத் தவிர கர்நாடகா, குஜராத் என ஏனைய அனைத்து மாநிலங்களிலும் நிறைவேற்ற வேண்டும் என்று எங்கள் கட்சி சார்பில் விரை வில் அனைத்து மாநில முதல மைச்சர்களையும் சந்தித்து பேச வும், இதுதொடர்பாக கடிதம் எழுதவும் உள்ளார்.

இலங்கையில் ஒரு லட்சத்து 76 ஆயிரம் தமிழர்கள் ஒரே நாளில் கொல்லப்பட்டுள்ளனர். இதுவரையில் 554 தமிழக மீன வர்கள் இலங்கை கடற்படை யால் சுட்டுக் கொல்லப்பட்டுள் ளனர்.

இலங்கைத் தமிழர்கள் பிரச் சினையில் முன்னாள் மத்திய அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண் டஸ், தமிழர்களுக்கு செய்த உதவிகளை கூட தற்போது உள்ள தமிழக மத்திய அமைச் சர்கள் எவரும் உதவி செய்ய வில்லை என்றார். (வ)

# ஊழலுக்கு எதிரான மத்திய அரசின் நடவடிக்கையால் சிறையில் ராசா!

ராகுல் காந்தி



டில்லி, ஜூலை 12

ஊழலுக்கு எதிராக மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை காரணமாகவே முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா சிறையில் இருக்கிறார் என்று காங்கிரஸ் பொதுச் செய லாளர் ராகுல் காந்தி கூறினார்.

உத்தரப் பிரதேசத்தில் கடந்த நான்கு நாள்களாக பாதயாத் திரை மேற்கொண்ட அவர், இறுதி நாளான கடந்த வெள்ளிக் கிழமை மாலையில் பஜ்னா என்ற கிராமத்தில் விவசாயிகளின் மத்தியில் பேசினார்.

ஊழல் விவகாரங்கள் தலை யெடுக்கும்போதெல்லாம் மத் திய அரசு கடுமையான நடவடிக் கைகளை மேற்கொண்டு வரு கிறது. அதன் காரணமாகவே முன்னாள் அமைச்சர்கள்கூட இப்போது சிறையில் உள்ளனர். ஊழல்முறைப்பாட்டுக்கு உள் ளான ராசாவும் மத்திய அரசின் நடவடிக்கை காரணமாகவே

இந்தச் சம்பவங்கள் மூலம், ஊழல் செய்தவர்கள் கண்டிப்பா கத் தண்டிக்கப்படுவார்கள் என் பதை அறிந்துக் கொள்ளலாம். ஊழல், லஞ்ச விவகாரங் களில் மத்திய அரசு துணிச்சலாக நட வடிக்கை எடுத்து வருகிறது என்று அவர் கூறினார்.

இந்தியாவில் ஊழலை ஒழிப் பதில் மத்திய அரசு உறுதியாக இருக்கிறது எனவும், அதற்குத் தேவையான அனைத்து நடவ டிக்கைகளையும் மத்திய அரசு துணிச்சலாக மேற்கொண்டு வரு கிறது எனவும் ராகுல் காந்தி பாராட் டுத் தெரிவித்தார். (வ)

# பூரணமாகக் குணமடைந்தார் ரஜனிகாந் விரைவில் வருகிறார் சென்னைக்கு

## தனுஷ் தகவல்

சென்னை, ஜூலை 12

நடிகர் ரஜனிகாந்த் சுகமடைந்து விட்டார் என்றும் அவரை அழைத்து வருவதற்காக அவரது மகளும் எனது மனைவியுமான ஐஸ்வர்யா சிங்கப்பூருக்குச் சென்று விட்டார் என்று நடிகர் தனுஷ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி ராணா படப்பிடிப்பின் போது நடி கர் ரஜனிகாந்துக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டது. 2 முறை இசபெல்லா மருத்துவ மனையி லும், அதன் பிறகு போரூரில் உள்ள ராமச்சந்திரா மருத்துவ மனையிலும் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு, மேலும் நவீன சிகிச்சை தேவைப்பட்டதால், விமானம் மூலம் சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்லப்பட்ட ரஜனி காந்துக்கு தீவிர சிகிச்சை அளிக் கப்பட்டது.

சிங்கப்பூர் மருத்துவர்கள், அவருடைய நோய்க்கான மூல காரணத்தைக் கண்டுபிடித்து சிகிச்சை அளித்ததன் காரண மாக உடல் நிலையில் முன்னேற் றம் ஏற்பட்டது. எனினும் ஒரு மாதம் சிங்கப்பூரிலேயே தங்கி யிருந்து சிகிச்சை பெற வேண் டும் என்று மருத்துவர்கள் கேட் டுக் கொண்டதால் ரஜனிகாந்த் தங்கியிருந்து தினமும் சிகிச்சை பெற்று வந்தார்.

சிகிச்சை முழுவதும் முடி வடைந்து அவர் பூரண குண மடைந்ததால், அவர் விரைவில் சென்னைக்கு வரவுள்ளார். அவர் சென்னைக்கு வரவுள்ள திகதி ரகசியமாக வைக்கப்பட்டுள் ளது - என்று தெரிவித்தார்.(வ)



சென்னை, வெறிநாய் கடிநோய் தடுப்புச் சங்கத்தின் 13 ஆவது தேசிய கருத்தரங்கு சென்னை வடபழனியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கருத்தரங்கின் இறுதி நாளான நேற்று முன்தினம் சுகாதாரத்துறை அமைச்சர் விஜய் கலந்து கொண்டு இளம் மருத்துவ விஞ்ஞானிகளுக்கு விருது வழங்கிக் கௌரவித்தார். வெறிநாய் கடி தடுப்புச் சங்கத்தின் தலைவர் சம்பத், பொது சுகாதாரத்துறை முன்னாள் தலைவர் இளங்கோ மற்றும் சங்க பொருளாளர் சீனிவாசராவ் ஆகியோர் அருகில் நிற்கின்றனர்.

# அசாமில் கோர ரயில் விபத்து; 20 பேர் பலி; 100 பேர் படுகாயம்

அசாம், ஜூலை 12

அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட ரயில் விபத்தில் 20 பேர் பலியாகி யதுடன் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந் துள்ளனர். அவர்க ளில் 20இற்கும் மேற்பட்டோர் கவலைக்கிடமான நிலையில் உள் ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் நண்பகல் உத்தரப்பிரதேச மாநிலத்தில் இடம்பெற்ற ரயில் விபத்தில் 60 பேர் இறந்தனர். 150 இற்கும் மேற்பட்டோர் காயமுற்றனர். இந்த சம்பவம் விபத்தா அல் லது சதிச்செயலா என்ற விசாரணை முடிவதற்குள் அன்றைய தினம் இரவு அசாமில் மேற்படி ரயில் விபத்துச் சம்பவம் பெரும் அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது.

கவுகாத்தியிலிருந்து பயணித்துக் கொண்டிருந்த எக்ஸ்பிரஸ் ரயிலில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பயணித்து கொண்டிருந் தனர். இந்நேரத்தில் ரயில் தண்டவாளத்தில் பெரும் வெடிச்சத்தம் கேட்டது.

இதனையடுத்து வேகமாகச் சென்று கொண்டிருந்த ரயில் தண்டவாளத்தில் இருந்து விலகிக் கவிழ்ந்தது. இதில் 100 இற்கும் மேற் பட்டோர் காயமுற்றுள்ளதாக முதல் கட்ட தகவல் தெரிவிக்கிறது. 20 பேர் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சை பெற்று வருகின் றனர்.

கவுகாத்தியில் இருந்து புறப்பட்ட இரண்டரை மணி நேரத்தில் நலபாரி மாவட்டம் சென்றபோது இந்த ரயில் விபத்து ஏற்பட் டுள்ளது. சம்பவம் நடந்த பகுதி அடர்ந்த காட்டுப்பகுதி என்பதால் மீட்புப் படையினர் செல்ல தாமதம் ஏற்பட்டது. இதனையடுத்து அருகி ல் உள்ள கிராம மக்கள் விபத்தில் சிக்கியவர்களுக்கு உதவி செய்து மீட்டனர்.

இந்த ரயில் கவிழ்ப்புக்கு போடாலேண்ட் நக்சல்கள் காரணமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இதில் பயன் படுத்தப்பட்ட பெரும் சக்தி வாய்ந்த வெடிபொருள்கள் கண்டறி யப்பட்டதாக பொலிஸ் வட்டாரம் தெரிவிக்கிறது. சம்பவ இடத்தில் மீட்புப் பணிகள் துரிதமாக டம்பெற்று வருகின்றன. (வ)

# இலங்கை மக்கள் படுகொலை; இந்தியக் கூட்டு சதியாளர்களுக்கும் தண்டனை வழங்க வேண்டும்

## தமிழர்களம் வலியுறுத்து

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு அந்த நாட்டு ஜனாதிபதி ராஜபக்ஷவு டன் கூட்டுச் சதிகாரர்களாக இருந்த கருணாநிதி, சிவ்சங்கர் மேனன், கே. ஆர். நாராயணன், நிருபமா ராவ் ஆகியோரை குற்றவாளிக் கூண்டில் ஏற்றி அப்பாவித் தமிழர்களைக் கொன்ற அரக்கர்களாக இவர் களை அறிவித்து உரிய தண் டனையை வழங்க வேண்டும் என்று தமிழர்களம் வலியுறுத்தி யுள்ளது.

நூற்றுக்கணக்கான தமிழர் களத் தொண்டர்கள், மற்றும் பல தமிழர் தேசிய அமைப் புக்கழகத்தினர் ஆகியோர் புதுச் சேரி முதலமைச்சர் அடிகள் வீதி யில் நடத்திய கண்டன ஆர்ப் பாட்டத்தில் தமிழர்களப் பொதுச் செயலாளர் அரிமாவளவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் அவர் மேலும் பேசுகையில்:

உண்மையை உணர்ந்திருக் கிற தமிழக மற்றும் புதுச்சேரி அரசுகளும் பல்வேறு அரசியல் அழுத்தம் கொடுக்கும் வகை யில் செயற்பட வேண்டும். தமி ழகச் சட்டமன்றத்தில் இலங்கை அரசுக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றியது போல புதுச் சேரி அரசும் தீர்மானம் நிறை வேற்ற வேண்டும்.

பல்லாயிரக் கணக்கான ஈழத் தமிழர்களை கொத்துக் கொத்தாகக் கொன்றொழித்தது இலங்கை அரசு மட்டுமல்ல! இந்தியாதான் அதற்கு முற்று முழுதாக துணைபோனது என்று உலகுக்கே வெட்ட வெளிச்ச மாகத் தெரிகின்ற உண்மை.

இதை அண்மையில் ராஜபக் ஷவே உறுதிபடக் கூறியிருக் கிறார். அதாவது இந்தியாவின் வழிகாட்டுதலிலேயே நான் தவறிப்போனேன் என்று கூறி யுள்ளார். ஆனால், எய்தவன் இருக்க அம்பை மட்டும் இன்று குற்றம் சாட்டுகிறோம். ராஜ பக்ஷ என்ற கொலையாளியை, குற்ற வாளியைக் கழுவிலேற்ற வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

ஆனால், ஈழ மண்ணில் நடந்த மக்கள் படுகொலைக ளுக்கும் ஆறாய் ஓடியக் குருதி வெள்ளத் துக்கும் இந்தியாவும் இந்திய அதிகாரிகளும் பொறுப் பில்லையா?

கருணாநிதி, சிவ்சங்கர் மேனன், கே. ஆர். நாராயணன், நிருபமா ராவ் ஆகியோரின் கூட் டுச் சதியாலும், ஒத்துழைப் பாலும்தான் இந்தத் தமிழ் இன அழிப்புப் போர் நடந்திருக்கிறது என்பதை மறுப்பவர் எவருமில்லை. இவர் கள் ஏதுமறியா இளித்தவாயர் கள்போல சுற்றிச் சுழன்று வருகின்றனர். இவர்களையும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி அப்பாவித் தமிழர்களைக் கொலை செய்த அரக்க மாந்தராக இவர்களை அறிவித்து உரிய தண்டனையைத் தாமதமின்றி இவர்களுக்கு வழங்க வேண் டும்-இவ்வாறு அவர் வலியுறுத் தினார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
12 ஜூலை 2011 செவ்வாய்க்கிழமை

# கற்பிட்டிக் களப்பில் வைத்து 8 மீனவர்களை கடற்படையினர் தாக்கியதாக முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 12
கற்பிட்டிக் களப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 08 மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப் பட்டுள்ளதாகத் தேசிய மீனவஒன்றியம் தெரிவித்துள்ளது.

தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி, மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீனவர்களே இந்தத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக அதன் ஏற் பாட்டாளர் ஹர்மன் குமார குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில், கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரியவிடம் வினவியபோது, அவ்வாறான சம்பவம் எதுவும் இதுவரை பதிவாகவில்லை என அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட எட்டு மீனவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டதாக வனாத்தவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடற்றொழில் திணைக்களமும் இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக அதன் பணிப்பாளர் லால் டி சில்வா தெரிவித்துள்ளார். (ற)

# உணவு ஒவ்வாமையால் 35 மாணவிகள் காத்தான்குடி வைத்தியசாலையில்

காத்தான்குடியிலுள்ள பெண்கள் அரபுக் கல்லூரி ஒன்றைச் சேர்ந்த 35 மாணவிகள் உட்கொண்ட உணவு ஒவ்வாமை காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முற்பகல் 11 மணியளவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக காத்தான்குடி வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
குறித்த கல்லூரி விடுதியில் நேற்று முன்தினமிரவு வழங்கப்பட்ட உணவு மாணவிகளுக்கு ஒவ்வாமையே இதற்குக் காரணமாக இருக்கலாம் எனவும், இந்த மாணவிகளுக்குத் தொடர்ந்தும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், உணவு மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ற)

# புதிய மிருகக் காட்சிச்சாலை வாகொல்லவில் விரைவில் திறக்க திணைக்களம் நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 12
வாகொல்ல புதிய மிருகக் காட்சிச்சாலையை விரைவில் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பின்னவல யானைகள் சரணாலயத்துக்கு அருகில் அமைந்துள்ள வாகொல்ல மிருகக்காட்சிச் சாலையின் நிர்மாணப் பணிகள் 80 வீதம் பூர்த்தியடைந்துள்ளதாக அதன் பணிப்பாளர் ஹாஷ்ரா சேனாங்க குணரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த மிருகக்காட்சிச்சாலையில் நாட்டுக்கே உரித்தான மிருகங்களுக்கும், அழிவடைந்து வரும் மிருகங்களுக்கும் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் காணப்படும் இட வசதிகள்ள விட இங்கு அதிகளவு வசதிகளை அமைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு உரித்தான சிறுத்தைப் புலிகளைப் பாதுகாப்பதற்காக சிறுத்தைப் புலிகளுக்கான பிரத்தியேக இடமொன்றை அமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஹாஷ்ரா சேனாங்க குணரத்ன மேலும் தெரிவித்தார். (ற)

## குத்துவிளக்குகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 12
பலாலி வீதியில் அமைந்துள்ள இந்துசமயப் பேரவையின் மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த இரண்டு பித்தளைக் குத்துவிளக்குகள் கடந்த 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு களவு போயுள்ளதாக அந்த அமைப்பின் செயலாளர் சக்திகிரீபன் தெரிவித்துள்ளார்.

இரண்டு விளக்குகளும் 25 ஆயிரம் ரூபாவுக்கும் கூடுதலான பெறுமதி உடையதுடன் ஒரு விளக்கின் நிறை சுமார் 30 கிலோவுக்கும் அதிகமாகும்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளாக அவர் தெரிவித்தார். (ஐ-323)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 12
மாவை. கொல்லங்கலட்டி சடச்சப்பை ஞானவைரவர் ஆலயத்தின் பாலஸ்தாபனம் நாளை புதன்கிழமை காலை 8 மணி முதல் மு.ப. 11 மணிவரை இடம் பெறவுள்ளது.

இதன் ஆரம்பக்கிரியை வழிபாடுகள் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும்.

ஆலயப் பிரதம குரு சிவ ஸ்ரீ வெ. செல்வரத்தினம் தலைமையில் பூசை வழிபாடுகளை வவுனிக்குளம் சிவாபுரநாதர் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ செல்வா விம்லராய குருக்கள் நிகழ்த்துவார்.

(ற-313)

## மரண அறிவித்தல்

### காசிநாதர் குலசேகரம்



விளானை கணவோடை, களபூமி, காரை நகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதர் குலசேகரம் நேற்று முன்தினம் (10.07. 2011) ஞாயிற்றுக்கிழமை அகாலமரண மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிநாதர்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம் -சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் சந்திரலீலா (லண்டன்), பத்மலீலா (ஆசிரியை, கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்), காசிநாதன் (லண்டன்) குலமகள், இரட்ணலீலா, புவனேந்திரன் (Jet.D. Express, கொழும்பு), அருளேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சபாநடேசன் (லண்டன்), அமுதசிங்கம் (இ.போ.ச, காரைநகர்), கவிதா (லண்டன்), இராமகிருஸ்ணன் (ஆசிரியர், வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர்) ஆகியோரின் அன்பு மாமனும், கார்த்திகன், அகோகிலன், அபிராமி, பிரணவறூபன், றவீந்திரன், மஞ்சுளா, குமரன், அமரன், தமிழினி, நவனீதன், ஜாதவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2011) செவ்வாய்க்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
விளானை, கணவோடை, களபூமி, காரைநகர். மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### பரமலிங்கம் இரத்தினராசா



தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய இலங்கை வங்கி முகாமையாளர் பரமலிங்கம் இரத்தினராசா 10.07.2011 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தொல்புரம் பரமலிங்கம் - வள்ளியம்மை தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற மாவிட்டபுரம் சுப்பையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் அபர்ணாவின் (கனடா) தந்தையும் குமரனின் (கனடா) மாமனும் காலஞ்சென்றவர்களான வரதராசா, சரசானந்தராசா மற்றும் சண்முகராசா ஆகியோரின் சகோதரரும் நாகேஸ்வரி, பாலராணி, நவராசா (இந்தியா), காலஞ்சென்ற சிவராசா, தவராசா, ஞானேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 12.07.2011 காலை 8மணி முதல் மாலை 6 மணி வரையும் 13.07.2011 காலை 8 மணி முதல் கிரியைகள் ஆரம்பமாகும் வரையும் வைக்கப்படும். இறுதிக்கிரியைகள் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி தகனத்துக்காக பிற்பகல் 3 மணிக்குக் கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
(சி/1652) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் குலசேகரம் புவனேந்திரன்
(JET D EXPRESS -COLOMBO)
அவர்களின் அன்புத் தந்தை
அமரர்
**காசிநாதர் குலசேகரம்**
அவர்கள் சிவபாதமடைந்ததையிட்டு கவலையில்
ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கும்,
உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

Arrul Global Express
International Courier & Cargo Service
No.1, Brown Road
Jaffna.
T.P : 021 222 6113

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
12 ★ 02 ★ 1951



மறைவு
12 ★ 07 ★ 2010

டென்மார்க்கை வசிப்பிடமாகவும் சிறுப்பிட்டியைப்
பிறப்பிடமாகவும் கொண்ட
*அமரர் சதாசிவம் சிவசுப்பிரமணியம்* (வெள்ளை)

தித்திக்கும் உன் ஞாபகங்கள் ஈர விழிகளில்
நின் கால் தடம் தேடி அலைகிறது - அன்பின்
முகமது மலர்ந்து புன்னகை நினைவின் பிரிவால்
ஓராண்டாகியும் உன் பிரிவால் வாடுகிறோம்.

சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி. (5730)
உன் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

## ஆண்டு ஐந்தில் விஞ்சும் நினைவுகளுடன்



REV. SR. M. ANTONINA A.C

கல்விக்கு உரமூட்ட மேற்கொண்டாய் துறவு தன்னை
பல்வேறு சாதனைகள் ஏற்றியவே உன் புகழை
நல்லோரும் சான்றோரும் வாழ்த்தினரே வாயார
எல்லாமே மறைந்து ஆண்டுகளும் ஐந்தாச்சே
நல்லாயன் இல்லம் தன்னில் நறுமலராய் வாழ்வாய் என்று
சொல்லரிய திருப்தியுடன் வாழ்த்துகின்றோம் இறைவனையே

புலோலி. (5729) குடும்பத்தினர்.

பிரம்மாண்டமான ஆடித் தள்ளுபடி
மாபெரும் மலிவு விற்பனை
நல்லூர்
சரவணா ரெக்ஸ்
விதவிதமான எண்ணற்ற ஆடைத்தெரிவுகளுக்கு
இன்றே விரையுங்கள்
காலம் :
09.07.2011
தொடக்கம்
31.07.2011 வரை
நேரம்:
காலை 9 மணி
முதல் இரவு
8 மணிவரை
இடம்: சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை (கெங்காதரன் மருத்துவமனை அருகாமை)
கே.கே.எஸ்.வீதி, தட்டாதெருச் சந்தியில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.
குறிப்பு: ஆடித் தள்ளுபடியை
முன்னிட்டு ஏழு நாள்களும் வியாபாரம் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் முதியோர் காப்பகத்தில் தீ! 16 பேர் துடிதுடித்து மரணம்!!

மாஸ்கோ, ஜூலை 12

உக்ரைன் நாட்டில், முதியோர் காப்பகம் ஒன்றில், நேற்று முன்தினம் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. இதில் 16 பேர் துடிதுடித்துப் பலியாகினர். 11 பேர் படுகாயமடைந்தனர்.

உக்ரைனின் மேற்குப் பகுதியில் உள்ள துப்ரோவித்ஷி மாவட்டத்தில் பலொயி கிராமத்தில், மரம் மற்றும் செங்கற்களால் கட்டப்பட்ட முதியோர் காப்பகத்தில், நேற்று முன்தினம் திடீரெனத் தீப்பற்றி சில மணி நேரங்களுக்குள் கட்டடம் முழுவதும் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

பல மணி நேரப் போராட்டத்தின் பின்னரே தீ அணைக்கப்பட்டது. இந்த விபத்தில் சிக்கி 16 பேர் பலியாகினர். இரண்டு ஊழியர்கள் உட்படப் 11 பேர், பயங்கர தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர்.

முதியோர் காப்பகத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவரின் அஜாக்கிரதை காரணமாகவே இந்தத் தீ விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

விவாதம்......



சிரியாவில் புதிய அரசியல் சீர்திருத்தம் தொடர்பாக அந்தநாட்டு நாடாளுமன்றக் குழுவினர் நேற்றுமுன்தினம் தலைநகர் டமாஸ்கஸ் நகரில் ஒன்றுகூடி விவாதித்தனர்.

# கிளர்ச்சியாளர்களை சுட்டுக்கொன்ற பொலிஸாரை பதவி நீக்கம் செய்ய எகிப்து பிரதமர் உத்தரவு

கெய்ரோ,ஜூலை 12

எகிப்து நாட்டில் சமீபத்தில் கிளர்ச்சியாளர்களைச் சுட்டுக் கொன்ற பொலிஸாரைப் பதவி நீக்கம் செய்யப் பிரதமர் எஸ்ஸாம் ஷராப் உத்தரவிட்டுள்ளார்.

எகிப்து நாட்டை பல ஆண்டுகளாக ஆட்சி செய்த ஹோஸ்னி முபாரக்கை பதவிவிலகக் கோரி, கடந்த ஜனவரி முதல் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். கெய்ரோவில் உள்ள தாரிர் சதுக்கத்தில் 18 நாள்களாக முகாமிட்டு இளைஞர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி, முபாரக்கை பதவி விலகச் செய்தனர். இந்தப் போராட்டத்தின் போது கிளர்ச்சியாளர்கள் 846 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தநிலையில் எகிப்தின் இடைக்காலப் பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள எஸ்ஸாம் ஷராப், தாரிக் சதுக்கத்தில் நடந்த கூட்டத்தில் பேசுகையில், ''கிளர்ச்சியாளர்களைக் கொன்ற பொலிஸாரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என, மக்கள் விரும்புகின்றனர். அவ்வர்கள்விருப்பப்படி எட்டுப் பொலிஸ் அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்படுவர்.

கிளர்ச்சியின் போது ஏராளமானோர் கொல்லப்பட்ட சம்பவம் குறித்தும் முபாரக் ஆட்சியில் நடந்த ஊழல்கள் குறித்தும் விரைவாக விசாரணை நடத்தும்படி தலைமை நீதிபதியிடம் கோரியுள்ளோம்'' என்றார்.

# ஆப்கனில் கடத்தப்பட்டவர்கள் தலை துண்டிக்கப்பட்டுக் கொலை

ஹெராத், ஜூலை 12

ஆப்கானிஸ்தானில் கடந்த நான்கு நாள்களுக்குமுன் கடத்தப்பட்ட கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஏழு பேர், தலை துண்டிக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் பராக் மாகாணத்தில் நேட்டோப் படைகளின் சார்பில், 30 பேர் கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இவர்களை அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் துப்பாக்கி முனையில் கடத்தி சென்றனர்.

முதலில் இவர்களைத் தலிபான்கள் கடத்திச் சென்றதாகக் கூறப்பட்டது. பின்னர், கடத்தியவர்கள் கொள்ளையர்கள் எனத் தெரிந்தது. கடத்தப்பட்டவர்களில் ஏழு பேரின் தலைகள் துண்டிக்கப்பட்ட உடல்களைப் பொலிஸார் நேற்று முன்தினம் கண்டெடுத்தனர்.

இவர்கள், ஆப்கன் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள். ஏனைய 23 பேரின் நிலை என்ன என்பது தெரியவில்லை.

# வங்கதேசத்தில் வெடித்த கலவரத்தில் பலர் காயம்

தாகா, ஜூலை12

வங்கதேசத்தில் எதிர்க் கட்சிகள் நடத்திய, கடையடைப்பின் போது கலவரம் வெடித்தது. இதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

வங்கதேச அரசு சமீபத்தில் ஒரு சட்ட திருத்த மசோதாவைக் கொண்டு வந்தது. அதில் படைத் தவர்'எனக் குறிப்பிடப் பட் டுள்ள வார்த்தையை நீக்க வலியுறுத்தி பிரதான எதிர்க் கட்சியான கலிதா ஜியாவின் வங்கதேச எதிர்க்கட்சி, அதன் கூட்டணிக் கட்சிகளான ஜமாத் - இ-இஸ்லாமி ஆகியவை உட்பட, 14 க்கும் மேற்பட்ட கட்சிகள், 30 மணி நேர, கடையடைப்புக்கு அறிவித்தன.

இதன் போது வங்கதேசத்தில் தாகா உட்படப் பெரும்பாலான நகரங்களில் கலவரம் வெடித்தது. போராட்டக்காரர்கள், வீதிகளில் தடைகளை ஏற்படுத்தி இருந்ததால் போக்குவரத்தும் தடைப்பட்டது. தீவைப்பு, பொலிஸார் மீது தாக்குதல் உள்ளிட்ட சம்பவங்கள் நடந்தன. பொலிஸாரின் துப்பாக்கிகளைப் பறித்து, வன் முறையில் ஈடுபட்டனர். இந்த வன்முறையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். போலிஸ் தரப்பில் பத்துப் பேர் காயமடைந்தனர்.

# சூழலை மாசுபடுத்தும் நிறுவனங்கள் மீது கூடுதல் வரி விதிப்பு

சுற்றுச்சூழலை வெகுவாக மாசுபடுத்தும் 500 நிறுவனங்களுக்கு தனி வரி விதிக்க ஆஸ்திரேலிய அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி நிறுவனங்கள் வெளியேற்றும் ஒவ்வொரு தொன் கரியமில வாயுக்கும் தலா 23 ஆஸ்திரேலிய டொலர்கள் வரியாகக் கட்ட வேண்டும்.

அதிகளவில் காற்றை மாசுபடுத்தும் நாடுகளில் ஆஸ்திரேலியாவும் ஒன்று என இயற்கை ஆர்வலர்கள் குற்றம் சாட்டியதையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

# உலகின் நீளமான பாலம் பாதுகாப்பற்ற நிலையில்

## சீனாவில் புதிய சர்ச்சை

பீஜிங், ஜூலை 12

சீனாவில் குயிங்டவ் மற்றும் ஹூவாங்டவ் தீபகற்பத்தை இணைக்கும் வகையில், கடலில் கட்டப்பட்ட உலகிலேயே மிக நீளமான பாலம் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாகத் தற்போது சர்ச்சை எழுந்துள்ளது.

சீனாவில் கடலில் கட்டப்பட்ட இத்தப் பாலம், 42.5 கி.மீற்றர் நீளமானது. பாலத்தின் இணைப்புப் பகுதிகளில் விரிசல் இருப்பதாகத் தற்போது சீனப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது. கடந்த மாதம் 30ஆம் திகதி, இத்தப் பாலம் திறக்கப்பட்டதில் இருந்து தினமும் 18 ஆயிரம் வாகனங்கள் பாலத்தில் செல்கின்றன. 10 ஆயிரத்து 580 கோடி ரூபா செலவில் கட்டப்பட்ட இப்பாலம், நிலநடுக்கம் உட்பட பேரழிவுகளை தாங்கும் வகையில் கட்டப்பட்டுள்ளது.

''பாலத்தின் இணைப்புகளில் போடப்பட்டுள்ள 'போல்ட்'கள், வயர் இணைப் புக்காக அவ்வப்போது கழற்றப் பட்டுப் பின்னர் மாட்டப்படும். இதில், ஆபத்து எதுவும் இல்லை'' என்று, இதந்தப் பாலம் கட்ட நிதியுதவி வழங்கியுள்ள உள்கட்டமைப்பு நிறுவனம் பதில் அளித்துள்ளது.

# பிரிட்டனின் புகழ்பெற்ற பத்திரிகை மூடப்பட்டது கண்ணீர் மல்க வெளியேறினர் அலுவலர்கள்!

லண்டன், ஜூலை 12

பிரிட்டனின் புகழ்பெற்ற, 'நியூஸ் ஒப் தி வேர்ல்ட்' பத்திரிகை நேற்றுமுன்தினம் தனது கடைசிப் பதிப்பை வெளியிட்டு அலுவலகத்தை இழுத்து மூடியது. கடைசிப் பதிப்பைத் தயாரித்து அச்சுக்கு அனுப்பிய பத்திரிகையின் உதவி ஆசிரியர்கள் மற்றும் செய்தியாளர்கள் கண்ணீர் மல்கத் தங்கள் அலுவலகத்தை விட்டு வெளியேறினர்.

பிரிட்டனில் இருந்து வெளிவரும் 168 ஆண்டு காலப் பெருமை உடைய, 'நியூஸ் ஒப் தி வேர்ல்ட்' பத்திரிகை, இளவரசர் வில்லியமின் உதவியாளரில் இருந்து முக்கிய அரசியல்வாதிகள் வரை அனைவரது தொலைபேசிகளையும் ஒட்டுக்கேட்ட விவகாரத்தில் சிக்கியது. பத்திரிகை மீது, நாடாளுமன்றில் எம்.பி க்கள் கடுமையாகக் குற்றம் சாட்டினர். இதையடுத்து பத்திரிகையின் அதிபர் ரூபர்ட் முர்டோக், பத்திரிகையை நிறுத்திவிடப் போவதாக அறிவித்தார்.

அதன்படி நேற்றுமுன்தினம் வெளியான இதழின் அட்டைப் படத்தில் பத்திரிகையின் பல்வேறு அட்டைப் படங்கள் இருக்க, ''தேங்க்யூ அண்ட் குட்பை'' என்று பெரிய வடிவில் வார்த்தைகள் அச்சிடப்பட்டிருந்தன.

இவை குறித்து உட்பக்கம் அளிக்கப்பட்டிருந்த விளக்கத்தில், ''1843 முதல் 2011 வரை வெளியான இந்தப் பத்திரிகை, மிக எளிய வார்த்தைகளுடன் விடைபெறுகிறது'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

பத்திரிகை ஆசிரியர் காலின் மைலர், பணியாளர்களுக்கு அனுப்பி கடைசிக் குறிப்பில்,''நாம் எப்படி இருந்திருக்க வேண்டுமோ அப்படி இருக்கவில்லை''என்று, வருத்தத்துடன் தெரிவித்திருந்தார்.

நேற்று கடைசிப் பதிப்பு வெளியாகிறது என்பதால், பத்திரிகை விற்கும் கடைகள், கூடுதல் பிரதிகளைக் கேட்டிருந்தன. அத்துடன், அப்பத்திரிகையில் மிக அதிகளவில், அறக்கட்டளை களின் விளம்பரங்கள் இடம் பெற்றிருந்தன. அதோடு, ''இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கடைசிப் பதிப்பின் லாபம் அனைத்தும் அறக்கட்டளைகளுக்கு வழங் கப்படும்'' எனவும் குறிப்பிடப் பட்டிருந்தது.

இரண்டாம் பக்கத்தில், 1843, அக்டோபர் 1 ஆம் திகதி வெளியான பத்திரிகையின் பதிப்புப் படம் முழுப்பக்க அளவிலும், அதற்கு அடுத்த பக்கத்தில், பத்திரிகை வெளிக் கொணர்ந்த பரபரப்பான ஊழல்கள், மோசடிகள், முக்கியமான சம்பவங்கள் பற்றிய அட்டைப் படங்களும் இடம் பெற்றிருந்தன.

இதேவேளை''நியூஸ் ஒப் தி வேர்ல்ட்'' பத்திரிகை அதிபர் ரூபர்ட் முர் டோக், பத்திரிகை மீதான குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்காக லண்டன் வந்து சேர்ந்தார் இதுகுறித்த விசாரணைகள் முடிவடையும் வரையிலும் அவர் சில காலம் லண்டனில் தங்கியிருப்பார்.

# ஜவாஹிரியை கைது செய்யக் கோரிக்கை

வாஷிங்டன் , ஜூலை12

பாகிஸ்தானில் ஒளிந்திருக்கும் அல்குவைதாத் தலைவர் அய்மான் ஜவாஹிரியை குறி வைத்துப் பிடிக்கும் படி, அந்த நாட்டு அரசிடம் கேட்டுள்ளோம் என அமெரிக்க ராணுவத்துறை அமைச்சர் லியோன் பெனிடா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ராணுவத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள லியோன் பெனிடா, ஆப்கனுக்குச் செல்லும் வழியில் அளித்த பேட்டியில்;

பாகிஸ்தானில் ஒளிந்துள்ளதாகக் கருதப்படும் அல்குவை தாத் தலைவர் ஜவாஹிரியை குறி வைத்துக் கைது செய்யும் படி கூறியுள் ளோம். அல்குவைதாத் தலைவர்களை எந்த முறையில் கைது செய்வது என்பது குறித்த ஆலோசனைகளையும் அளித்துள் ளேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி மென்பந்தாட்டம்;

# சாவகச்சேரி நகரசபைக்கு முதல் வெற்றி

தென்மராட்சி, ஜூலை 12
சாவகச்சேரி நகரசபை கிரிக்கெட் அணி நல்லூர் பிரதேச சபை கிரிக்கெட் அணியை 15 ஓட்டங்களால் வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

இந்த வருட உள்ளூராட்சி வாரத்தையொட்டி நல்லூர் பிரதேச சபையினால் யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கிடையிலான 12 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய மைதானத்தில் நடந்துவருகிறது.

ஆரம்பப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சாவகச்சேரி நகரசபையின் அணித்தலைவர் அ.சதீஸ் முதலில் துடுப்பாடத் தீர்மானித்தார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய அணித் தலைவர் அ.சதீஸ் துணைத் தலைவர் அ.அகிலதாஸ் ஆகியோர் நல்லூர் பிரதேச அணி பந்து வீச்சாளர்களின் பந்துகளை நாலாபுறமும் அடித்து ஓட்டங்களைக் குவித்தனர். முதலாவது விக்கெட் இணைப்பாட்டமாக 64 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளையில் 47 ஓட்டங்களைப் பெற்ற அ.சதீஸ் ஆட்டமிழந்தார்.

பின்னர் களமிறங்கிய சு.தங்கராஜா பந்துகளை அடித்து ஆடி 19 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். அகிலதாஸ் 28 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

12 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 101 ஓட்டங்களை சாவகச்சேரி நகர சபை அணி பெற்றது.

நல்லூர் பிரதேச சபை கிரிக்கெட் அணியைச் சேர்ந்த ஜெகதீஸ் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

102 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் ஆடத் தொடங்கிய நல்லூர் பிரதேச சபை அணியின் முன்னணி வீரர்கள் ஓட்டங்கள் குவிக்கத் தவறியதால் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 86 ஓட்டங்களைப் பெற்று 15 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

பின்னிலை அணி வீரர் ரவீந் திரன் அதிக பட்சமாக 18 ஓட் டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

சாவகச்சேரி நகரசபை அணியின் சார்பில் பந்து வீசிய சி.ஜெயகாந்தன் 3 விக்கெட்டுக்களையும் சு.சங்கர், அ.சதீஸ், அ.அகிந்தன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

அணியின் விக்கெட் காப்பாளர் சு.தங்கராஜாவின் சிறப்பான பங்களிப்பு நல்லூர் பிரதேச அணியின் விக்கெட்டுக்கள் விழ காரணமாக அமைந்தது. (ஐ-207)



அரியாலை சனசமூக நிலைய முன்பள்ளியின் விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற ரயில் நிலைய அதிபர் ஆ.நா. செல்வராசா வெற்றிபெற்ற முன்பள்ளி மாணவரொருவருக்குப் பரிசில் வழங்குகிறார். (135)

**வேலையாள்கள் தேவை**

யாழ்.நகரில் நவீன ஜூஸ் கடை (Juice Bar) ஒன்றுக்கு வேலையாள்கள்தேவை. ஜூஸ் தயாரிப்பதில் முன் அனுபவம் விரும்பத்தக்கது. ஆண்களும், பெண்களும் விண்ணப்பிக்கலாம். தக்க சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்பு: 0750828323**

**WALK IN INTERVIEW**

**SALES REPRESENTATIVE**

We are the authorized distributors for PC House PLC to distribute CARBONN Mobile Phone in the Jaffna District.

We need a young smart ideal person with experience to work as a Sales Representative for the above distribution.

Those who wish to join can call over for an interview to be held at 10 a.m. on 13.07.2011 at our Stores at Pirappamkulam Road, Jaffna. (Near Pantrikottu Pillayar Kovil, K.K.S.Road, Jaffna)

Manager,
Narayana Hardwares Trader,
Stanley Road, Jaffna.
T.P.:021 222 5390

# துடுப்பாட்டத்தில் அசத்தி வென்றது கொக்குவில் இந்துக் கல்லூரி

வலி.வடக்கு, ஜூலை 12

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீரர்களின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாது தடுமாறிய கொக்குவில் இந்துக் கல்லூரியை பிரதாபன், நிக்சன் ஆகியோரின் துடுப் பாட்டம் வெற்றிப் பாதைக்கு இட்டுச்சென்றுள்ளது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் 15 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி 35 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 31:1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 162 ஓட்டங்களை பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் ஓட்டம் எதனையும் பெறாது ஆட்டமிழக்க அடுத்து வந்தவர்களும் கூட அதிக ஓட்டம் பெறாத நிலையில் 04 விக்கெட்டுக்களை இழந்து மிகவும் குறைந்த ஓட்டமான 21 ஓட்டங்களைப் பெற்றவர்கள் 05 விக்கெட்டுக்களை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றனர்.

பிரதாபன் எட்டு நான்குகளுடன் 52 நிக்சன் 47, சாருகன் 19 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 28 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த வைகரன் 09 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 46 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டக்களையும் பார்த்தீபன் 7.1 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 19 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் பிரணவன் 29 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

163 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 39:1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

கஜன் ஆட்டமிக்காது 19, பார்த்தீபன் 16, [illegible] 14 ஓட்டங்களைப் [illegible] உதிரிகளாக 25 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த விதுர்சன் 7.1 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 17 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கஜுசாந் 10 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 22 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் பௌத்திரன் 08 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் நிதர்சன் 08 ஓவர்கள் பந்து வீசி 36 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் சங்கீர்த்தன், சாருஜன் முறையே 06 10 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (ஐ-86)

**SACERDOTAL GOLDEN JUBILARIAN**



Rev. Fr. Louis Ponniah, O.M.I.

பொன்னான இந்த ஐ பத்து ஆண்டுகளில்
பொன்விழாக் காணும் ஒப்பற்ற குருமணியாம்
பொன்னையா அடிகளாரின் நிகரற்ற சேவைக்காய்
பொன் மயமாம் கிறிஸ்து எனும் அருட்பெரும் சோதி பதம்
பொன்மலர்கள் பலசூடி நன்றி பல நவில்கின்றோம்

7, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (5727) A.S.அகஸ்ரின் குடும்பம்.

**மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்**



இலங்கை தேசிய கூடைப்பந்தாட்ட அணியில் இடம்பிடித்து, இந்தியாவில் இடம்பெறவுள்ள சர்வதேச கூடைப்பந்தாட்டப் போட்டியில் விளையாடவுள்ள யாழ். இந்துவின் மைந்தன்
**சண்முகலிங்கம் வாகீசன்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
தொடர்ந்தும் சாதனைகள் படைக்க எல்லாம் வல்ல ஞானவைரவப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

*யாழ்.இந்துக் கல்லூரி.*
*(A/L 2008)* (5733) - நண்பர்கள்.

**பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**ஜெயபுரம்**

**அறிவித்தல்**

**வாக்காளர் இடாப்புக் காட்சிப்படுத்தல்**

30.06.2011 உடன் முடிவுறுத்தப்பட்ட வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர் இடாப்பின் பிரதி கிளை நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் ஆட்சேபனைகள், திருத்தங்கள் இருப்பின் 18.07.2011இற்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு எழுத்துமூலம் அறியத் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*வி.சொக்கநாதன்.* (5735) *சி.தாரணி*
தலைவர். செயலாளர்.

**சவுதி அரேபியா சுத்திகரிப்பாளர்**
**VACANCIES IN KSA CLEANERS**

சவுதி கேட்டரிங்ஸ் கொம்பனியில் சுத்திகரிப்பாளர்களுக்கான உடனடி வேலைவாய்ப்பு கீழ்க்காணும் நிபந்தனைக்கமைய

| | தொகை | சம்பளம் |
|---|---|---|
| சுத்திகரிப்பாளர்கள் | 25 | SR 700, Rs.21,700/- (ரியால் ரூபா 31/-) |

- தங்குமிட வசதி இலவசம் • உணவு இலவசம்
- வைத்திய பரிசோதனை, போக்குவரத்து இலவசம்
- ஒப்பந்தகால முடிவில் நாடு திரும்ப விமான டிக்கட் இலவசம்.
- ஒப்பந்தகாலம் 02 வருடம்.

தொடர்புகொள்ள:
ஹேவாஸ் அசோசியேட்ஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
இல. 05, பிகரிங்ஸ் வீதி, கொழும்பு-13.
(ஹெட்டியாவத்தை சந்தி) Tel : 0114-610680
Licence No. 750
App. No.: AL/750/Advt/1/11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டம் சமனிலையில் கிண்ணம் இந்தியாவிடம்



மேற்கிந்தியத்தீவுகள் சென்றுள்ள இந்திய அணி, மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இதில் மூன்றாவது டெஸ்ட் சமநிலையில் முடிந்தது. மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு சந்தர்போல் கைகொடுத்தார். பொறுப்பாக ஆடிய இவர் சதம் விளாசினார். தொடக்கத்தில் அசத்திய இந்திய பந்து வீச்சாளர்கள் கடைசிக் கட்டத்தில் திணறினர். முதலிரண்டு போட்டிகளின் முடிவில் இந்திய அணி 1-0 என்று முன்னிலை பெற்றது. மிக முக்கியமான மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் ஆட்டம் டொமினிகாவில் நடந்தது. முதல் இன்னிங்ஸில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 204, இந்தியா 347 ஓட்டங்கள் எடுத்தன. பின்னர் இரண்டாவது இன்னிங்ஸ் தொடக்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு கிர்க் எட்வர்ட்ஸ் சதம் (110) அடித்து கைகொடுத்தார். நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் 6 விக்கெட்டுக்களுக்கு 224 ஓட்டங்கள் எடுத்திருந்தது. நேற்று முன்தினம் கடைசி மற்றும் ஐந்தாம் நாள் ஆட்டம் நடந்தது. ஹர்பஜன் சுழலில் தலைவர் டரன் சமி(17) சர்ச்சைக்குரிய முறையில் வெளியேறினார். ராம்போல் (1), ரன் அவுட்டானார்.


### மேற்கிந்தியத்தீவுகள் அபாரம்

இதற்குப் பின்னர் சந்தர்போல், பிடல் எட்வர்ட்ஸ் இணைந்து துணிச்சலாகப் போராடினர். ஆட்டத்தை சமநிலை செய்யும் நோக்கில் உறுதியுடன் துடுப்பெடுத்தாடிய சந்தர்போல், டெஸ்ட் ஆட்டங்களில் தனது 23 ஆவது சதம் எட்டினார். இது இந்தியாவுக்கு எதிராக இவரது 6 ஆவது சதம். தொடர்ந்து அபாரமாக ஆடிய இவர், இந்தியாவின் வெற்றி கனவுக்கு சிக்கலை ஏற்படுத்தினார். உணவு இடைவேளைக்கு பின்னர் மேற்கிந்தியத்தீவுகள் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களும் இழந்து 322 ஓட்டங்கள் எடுத்தது.

179 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கில் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியானது. முதல் பந்திலேயே முகுந்த் ஆட்டமிழந்து வெளியேறினார். பின்னர் முரளி விஜயும் (45), ரெய்னா (8) ஆட்டமிழந்தனர். டிராவிட் (34), லக்ஸ்மன் (3) ஓட்டங்கள் என்று மொத்தம் 94/3 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஐந்தாம் நாள் ஆட்டம் முடிவடைந்தது. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இந்தியா 1-0 என்ற கணக்கில் தொடரை வென்றது.

மூன்றாவது டெஸ்டின் ஆட்டநாயகனாக மேற்கிந்தியத்தீவுகளின் சந்தர்போல் அறிவிக்கப்பட்டார். தொடர் நாயகனாக இந்தியாவின் இசாந்த் சர்மா அறிவிக்கப்பட்டார். (15)

# கையெழுத்துக்காக காத்திருக்கும் 'ஹரிப்பொட்டர்' நாயகன்



கிரிக்கெட் அரங்கில் சச்சின் உண்மையிலேயே ஒரு ஜாம்பவான். நான் அவரது தீவிர ரசிகன். அவரை சந்தித்து 'ஓட்டோகிராப் (கையெழுத்து)' வாங்கக் காத்திருக்கிறேன், என்று பிரபல 'ஹரிபொட்டர்' படத்தின் கதாநாயகன் டேனியல் ராட்கிளிப் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தை சேர்ந்த இளம் ஹொலிவுட் நடிகர் ராட் கிளிப். இவர் நடித்து வெளியான 'ஹரி பொட்டர்' படம், உலக அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. கிரிக்கெட் பிரியரான இவர், இந்திய அணியின் 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சினை சந்திக்க ஆசைப்படுகிறார்.

இந்தியாவை பற்றி நிறைய விடயங்கள் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்குள்ள மக்கள் என்னைப் போலவே கிரிக்கெட் மோகம் கொண்டவர்கள் என்பது தெரியும். சமீபத்தில் நடந்த உலகக் கிண்ணத் தொடரின் போது இந்தியா வர திட்டமிட்டிருந்தேன். ஆனால் இசை அல்பத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததால் எனது பயணம் தள்ளிப் போனது. மிக விரைவில் இந்தியா செல்ல உள்ளேன்.

### கிரிக்கெட்டில் சச்சின் உண்மை

யிலேயே ஒரு ஜாம்பவான். நான் அவரது தீவிர ரசிகன். விரைவில் அவரை சந்தித்து 'ஓட்டோகிராப்' வாங்க உள்ளேன். அந்த 'திரில்' அனுபவத்துக்காக நானும் எனது நண்பர்களும் காத்திருக்கிறோம் - என்றார். (15)

# வாய்ப்புக் கொடுத்து வம்பில் மாட்ட வேண்டாம்

இலங்கையின் அம்பாந்தோட்டை நகருக்கு பொதுநலவாய போட்டிகளை நடத்தும் வாய்ப்பை வழங்குவதன் மூலம் ஆபத்திற்குமுகம் கொடுக்க வேண்டாம் என்று ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரத்தின் விண்ணப்பத்தை பரிசீலிக்கும் 71 நாடுகளின் பிரதிநிதிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

'டில்லியில் ஏற்பட்ட கஷ்டங்களின் பின்னர் இது 'ரிஸ்க்' எடுப்பதற்கான நேரம் அல்ல. இதுதான் தூதுக்குழுவினருக்கு நாம் அனுப்பிய உறுதியான செய்தியாகும், என்று கோல்ட் கோஸ்ட் 2018 திட்டத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மார்க் பீற்றர் கூறினார்.

2018 ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டு விழாவை நடத்துவதற்கு இலங்கையின் அம்பாந்தோட்டை நகரமும் ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரமும் மாத்திரமே தற்போது போட்டியில் உள்ளன.

கோல்ட் கோஸ்ட் நகரம் இதில் முன்னிலையில் இருப்பதாக கருதப்பட்டாலும் அம்பாந்தோட்டை உற்சாகம் பெற்று வருகின்றது. யுத்தம் முடிந்த நிலையில் பொதுநலவாய விளையாட்டு விழாவை நடத்துவதானது 2004 ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியின் அபிவிருத்திக்கான ஆரம்பமாக அமையும் என்பது அம்பாந்தோட்டை பிரசாரமாக உள்ளது.

பொதுநலவாய அமைப்பிலுள்ள அதிக நாடுகள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளாகும். அவர்கள் அரசியல் காரணங்களுக்காக வாக்களிக்கலாம் என்று கிறிபித் பல்கலைக்கழகத்தின் விளையாட்டு முகாமைத் துவ பேராசிரியர் கேர்ஸ்டைன் டூபி கூறியுள்ளார். கடந்த காலங்களில் விளையாட்டு மூலம் அபிவிருத்தியை நாடிய நாடுகள் ஏனைய பொதுநலவாய நாடுகளின் ஆதரவை பெற்றுள்ளன எனவும் அவர் கூறினார்.

இறுதியில் சிறந்த விளையாட்டு விழாவை நடத்துவதை தூதுக்குழுவினர் விரும்புவர். இங்கு எம்மிடம் அனைத்தும் உள்ளன. அம்பாந்தோட்டையில் தற்போதைய நிலையில் எதுவுமில்லை. அவர்கள் ஒரு தீர்ப்பை மேற்கொள்ள வேண்டும். அவர்கள் 'ரிஸ்க்' எடுப்பார்களா? என்று அவர் கூறியுள்ளார். (15)

# அரையிறுதியில் ஆசிய அணி



பெண்களுக்கான உலகக் கிண்ணக் கால்பந்து தொடரின் காலிறுதியில், ஜப்பான் அணி 1-0 என்ற கோல் கணக்கில் ஜெர்மனியை வீழ்த்தியது. இதன் மூலம் உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிக்கு முன்னேறிய முதலாவது ஆசிய அணி என்ற வரலாறு படைத்தது.

ஜெர்மனியில் பெண்களுக்கான 6 ஆவது 'பீபா' உலகக் கிண்ண கால்பந்து தொடர் நடக்கின்றது. இதில் காலிறுதியில், நடப்புச் சம்பியன் ஜெர்மனி அணி, கத்துக் குட்டியான ஜப்பானை சந்தித்தது.

இரு அணி வீராங்கனைகளும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியதால், ஆட்டத்தின் கடைசி நிமிடம் வரை எந்த ஒரு அணியாலும் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. பின்னர் இரு அணியினருக்கும் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இதில் எழுச்சி கண்ட ஜப்பான் அணிக்கு, ஆட்டத்தின் 108 ஆவது நிமிடத்தில் கரினா மருயமா, ஒரு சூப்பர் கோல் அடிக்க, 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் ஜப்பான் அணி, உலகக் கிண்ண கால்பந்து தொடரின் அரையிறுதிக்கு முன்னேறிய முதலாவது ஆசிய அணி என்ற புதிய வரலாறு படைத்தது. தவிர, ஜெர்மனி அணியின் 'ஹட்றிக்' சம்பியன் பட்டக் கனவு தகர்ந்தது. கடந்த 2003, 2007 இல் ஜெர்மனி அணி, கிண்ணம் வென்றது. உலகக் கிண்ண அரங்கில், ஜெர்மனி அணியின் வெற்றி நடைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. கடந்த 1999 இல், அமெரிக்காவுக்கு எதிரான காலிறுதியில் தோல்வி கண்ட ஜெர்மனி அணி, அதன்பின்னர் தொடர்ந்து 15 போட்டிகளில் தோல்வியைச் சந்திக்காமல் இருந்தது.

மற்றொரு காலிறுதியில் பிரான்ஸ், இங்கிலாந்து அணிகள் மோதின. இதன் முதல் பாதி முடிவில் இரு அணியினராலும் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. பின்னர் இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட இங்கிலாந்து அணிக்கு, ஆட்ட[illegible] ஆவது நிமிடத்தில் ஜில் [illegible] ஒரு கோல் அடித்து கைகொடுத்தார். இதற்கு பிரான்ஸ் வீராங்கனை எலிசி புசாகிலா, ஆட்டத்தின் 88 ஆவது நிமிடத்தில் ஒரு சூப்பர் கோல் அடித்து பதிலடி கொடுத்தார். இதனால் ஆட்டநேர முடிவில் 1-1 என்ற கோல்க் கணக்கில் சமநிலை வகித்தது.

பின்னர் இரு அணியினருக்கும் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இதில் எந்த ஒரு அணியினராலும் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. இதனால் போட்டியின் முடிவு 'பெனால்டி ஷொட் அவுட்' முறைக்குச் சென்றது. இதில் அபாரமாக செயல்பட்ட பிரான்ஸ் அணி [illegible] என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் பிரான்ஸ் அணி முதன் முறையாக உலகக் கிண்ண அரையிறுதிக்கு முன்னேறி சாதனை படைத்தது.

உலகக் கிண்ண கால்பந்து தொடரில், நேற்று முன்தினம் நடந்த மூன்றாவது காலிறுதியில் ஆஸ்திரேலியா, சுவீடன் அணிகள் மோதின. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சுவீடன் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது முறையாக (2003, 2011) அரையிறுதிக்கு முன்னேறியது. கடந்த 2003 இல் இறுதி வரை முன்னேறிய சுவீடன் அணி, இரண்டாவது இடம் பிடித்தது. (15)

# கைகொடுத்தார் சேவாக்

போட்டியின் போது நெருக்கடி இல்லாமல் ஓட்டங்கள் சேர்க்க அதிரடி தொடக்க வீரர் சேவாக் கைகொடுத்தார் என்று இந்திய வீரர் கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து சுற்றுப்பயணம் செய்யவுள்ள இந்திய அணி நான்கு டெஸ்ட், ஐந்து ஒரு நாள் மற்றும் ஒரே ஒரு 'ரி-20' போட்டி கொண்ட தொடரில் பங்கேற்கின்றது. இந்தத் தொடருக்கான இந்திய அணியின் துணைத் தலைவராக தொடக்க வீரர் கௌதம் கம்பீர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து கம்பீர் கூறியதாவது,

முதுகு வலி காரணமாக மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் பங்கேற்க முடியாமல் போனது ஏமாற்றம் அளிக்கின்றது. தற்போது காயம் குணமடைந்த நிலையில், இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் முழுமையாக பங்கேற்க முழு உடற்தகுதியுடன் உள்ளேன்.

ஒவ்வொரு தொடருக்கு முன் கடுமையாக பயிற்சி மேற்கொண்டது போல, இங்கிலாந்துக்கு எதிரான தொடருக்கும் தயார் செய்து வருகிறேன். இந்தத் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திசாதிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான தொடரில், சக வீரர் சேவாக் விளையாட இருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது. நான் சிறந்த தொடக்க வீரராக ஜொலித்ததற்கு சேவாக்கின் ஒத்துழைப்பு முக்கிய காரணம் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
12 ஜூலை 2011 செவ்வாய்க்கிழமை

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வன்னியசிங்கம் தனலஷ்மி



நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வன்னியசிங்கம் தனலஷ்மி (10.07.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வன்னியசிங்கத்தின் அன்பு மனைவியும், தவமலர், ஜெயந்தினி, சாந்தினி, பாஸ்கரன், றமணி, றதிதரன், சிறிதரன் ஆகியோரின் அன்புத் தாயும், வரதலிங்கம், நவரட்ணராஜா, அருட்சோதி, யமுனா, அரியநாயகம், செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, முருகமூர்த்தி மற்றும் சங்கரமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2011) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காந்தாளம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
பிள்ளைகள்.

(1967)

## துரைசிங்கம் அம்பிகைபாலன்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் அம்பிகைபாலன் (10.07.2011) ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியர் துரைசிங்கம் (J.P) காலஞ்சென்ற சற்குணமணி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், சுகந்தன்(சுவிஸ்), சுகந்தி, ஜெயகாந்தி (ஜேர்மன்), யாழினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோதிநாதன்(மயூரி, இரும்பக உரிமையாளர்), மனோகரன்(ஜேர்மன்), யசோதரன்(இரும்புத் தொழிலகம்- திருநெல்வேலி), பெயாஸ்திரிஸ்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

குறுக்குறோட்,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
செ.துரைசிங்கம் (J.P)
[தந்தை]

(5738)

## தேர்தல் அலுவலர்களுக்கு நாளை பயிற்சி வகுப்பு

கிளிநொச்சி, ஜூலை 12

தேர்தல் கடமைகளுக்காக விண்ணப்பித்து கடமையாற்றத் தகுதியிருந்தும் இதுவரை பயிற்சி வகுப்புக்கு அழைப்புக் கடிதங்கள் கிடைக்கப்பெறாத கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் நாளை புதன்கிழமை கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர், கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர், எழுதுவினைஞர் ஆகியோருக்கே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(ஒ)

## விபத்துக்களில் மூவர் காயம்

தென்மராட்சி, ஜூலை 12

மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் சிக்கி மூவர் காயமடைந்த வெவ்வேறு சம்பவங்கள் நேற்று இடம்பெற்றன.

மந்துவிலில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் வரணி- இயற்றாளையைச் சேர்ந்த பெரியதம்பி சுதன்(வயது-22), கைதடியில் இடம்பெற்ற மற்றறொரு விபத்தில் இதே இடத்தைச் சேர்ந்த எஸ். ஜெயச்சந்திரன் (வயது-37) வீதியோரத்தில் கட்டப்பட்டிருந்த மாடு மறுகரைக்குச் சென்றதால் அதன் கயிற்றில் மோட்டார் சைக்கிள் சிக்கியதில் அதில் பயணித்த கொடிகாமம் வடக்கைச் சேர்ந்த வேலாயுதபிள்ளை ஸ்ரீபிரதீஸ்வரன் (வயது-29) ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர். (ஐ-207)

### வீடு வாடகைக்குத் தேவை

4 பேர் கொண்ட குருக்கள் குடும்பத்துக்கு அவசரமாக வீடு வாடகைக்குத் தேவை. (கொக்குவில் பகுதி விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு- 0213737816, 0776589046

### பணிப்பெண் தேவை

குழந்தை பராமரிப்புக்கு பணிப்பெண் தேவை.
காட்டுக்கந்தோர் ஒழுங்கை, கச்சேரியடி, யாழ்.
தொடர்பு- 0776752865

### கதவுகள் விற்பனைக்கு

நவாலி, சென். பீற்றேர்ஸ் தேவாலயத்தில் இருந்து கழற்றிய 8அடி, 2அடி கொண்ட கதவு விற்பனைக்குண்டு.
16.07.2011 இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே:- 0778999961.

### தேவை

Ice-Cream விநியோகஸ்தர்களுக்கு விற்பனையாளர்கள் (Sales representatives) உதவியாள்கள் (Porters) தேவை.
ஈச்சமோட்டை, யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:-021 567 1024, 021 222 0614.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர்

### கா. குலசேகரம்

அவர்களின் திடீர் மறைவையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களை அவரின் குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள் யா/ சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், காரைநகர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆசிரிய சகோதரத்துவ உறுப்பினர் க. உதயசந்தர் அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் கந்தையா கணேசலிங்கம்

[ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, சாவகச்சேரி]


அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

(5744)

## மரண அறிவித்தல்

### சுவாமிநாதர் நடராசா



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதர் நடராசா நேற்று (11.07.2011) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுவாமிநாதர்- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், அரியரட்ணம்- குட்டிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பூமணியின் அன்புக் கணவரும், பாக்யம், தம்பிராசா, பவளம், பொன்னுத்துரை ஆகியோரின் சகோதரரும், பாலசிங்கம், செல்வரட்ணம், சிவகுருநாதன், தனபாலசிங்கம், கனகரட்ணம், திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மைத்துனரும், பராசக்தி, ஞானசக்தி, பத்மநாதன்(ராசன்), காலஞ்சென்ற கமலநாதன்(அப்பன்) மற்றும் குலநாதன்(கண்ணன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவிராஜ், சிறிதரன், கமலாதேவி, மணிலோஜினி ஆகியோரின் அன்பு மாமனும், ஈழவாணி, சிந்துஜா, அபிராமி, பிரணியா, கோபிதன், கீர்த்திதன் ஆகியோரின் அன்புப் பேரனும், சோழனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 11-12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காட்டு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.


தகவல்:
குடும்பத்தினர்.

(5739)

## மரண அறிவித்தல்

### வேதநாயகம் இம்மனுவேல் இராஜநாதன்

[கோல்டன் பாம் உரிமையாளர்]



புலோலி, பருத்தித்துறையைப் பிறப்பீடமாகவும், இல.77, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேதநாயகம் இம்மனுவேல் இராஜநாதன் நேற்று (11.07.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேதநாயகம்-மேரியம்மா தம்பதியரின் மகனும், ஜோக்கீம்பிள்ளை- மரியம்மா பாக்கியம் தம்பதியரின்மருமகனும், மாலா ஜோவிற்றாவின் அன்புக் கணவரும், வேஜின் கியூறி(கொமர்ஷல் வங்கி), அல்ஸ்ரன் பிறாங்இனோடினேஸ், வில்சன் யூட்ஸ் (சென். ஜோன்ஸ் கல்லூரி), அலக்ஸ் கொட்வின்(சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் ஜெகநாதன், விமலா, பத்மினி காலஞ்சென்ற கௌசாம்பிகை மற்றும் ராகினி, காலஞ்சென்ற லோகநாதன் ஆகியோரின் அருமைத் தம்பியும், மாலதி(கனடா), மாலினி(லண்டன்), ஜொய்சி(ஓமான்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஊர்வலத் திருப்பலி (14.07.2011) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். புனித யுவானியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்துக்காக புலோலி புனித சூசையப்பர் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

77, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(5745)

சீட்டிழுப்பு இல. 2417
திகதி 10.07.2011

### மஹஜன சம்பத — அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து: S   வெற்றி எண்கள்: 4 2 7 4 2 0

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | S | 4 | 2 | 7 | 4 | 2 | 0 | ரூபா. | 25,320,663/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 4 | 2 | 7 | 4 | 2 | 0 | ரூபா. | 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 2 | 7 | 4 | 2 | 0 | ரூபா. | 100,000/= | பரிசுகள் | 09 |
| 3ம் பரிசுகள் | | | | 7 | 4 | 2 | 0 | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 85 |
| 4ம் பரிசுகள் | | | | | 4 | 2 | 0 | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 856 |
| 5ம் பரிசுகள் | | | | | | 2 | 0 | ரூபா. | 100/= | பரிசுகள் | 8,467 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 0 | ரூபா. | 20/= | பரிசுகள் | 83,778 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 4 | 2 | 7 | 4 | 2 | | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 09 |
| 8ம் பரிசுகள் | | 4 | 2 | 7 | 4 | | | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 85 |
| 9ம் பரிசுகள் | | 4 | 2 | 7 | | | | ரூபா. | 100/= | பரிசுகள் | 847 |
| 10ம் பரிசுகள் | | 4 | 2 | | | | | ரூபா. | 50/= | பரிசுகள் | 8,401 |
| 11ம் பரிசுகள் | S | | | | | | | ரூபா. | 20/= | பரிசுகள் | 33,578 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 25,689,720.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 8,479,570.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 2470662, 4607000 Hotline 2433631

முடிவுகளை அறிய www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கூட்டமைப்புக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் முன்னெப்போதும் இல்லாத வகையில் வடக்கில் குறிப்பாக யாழ்.குடாநாட்டில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலமடங்கு பலப் படுத்தப்பட்டுள்ளன.

இப்படியான ஒரு சூழலில் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் வீட்டில் நாயை வெட்டித் துண்டித்து தலைவேறு உடல் வேறாகப் போடுகின்றனர்.

நாயின் துண்டிக்கப்பட்ட தலை வேட்பாளரின் வீட்டுக்கேற்றில் செருகி வைக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவத்தோடு நின்றுவிட வில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரின் வீட்டின் முன் மலர் வளையம் வைக்கின்றனர். போஸ்டர்களிலும் வீட்டு மதிலிலும் கழிவுகளையும் கழிவு எண்ணெய் யும் ஊற்றி அலங்கோலப்படுத்தி வருகின்றனர்.

இத்தனை பாதுகாப்புக்கும் மத்தியில் இப்படி மிலேச்சத்தனமான - அநாகரிகமான சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. அரசின் அனுசரணை இன்றி இவை நடைபெறமுடியுமா? முடியாது. அரசுக்கும் பங்குண்டு என அடித்துக் கூறும் கீர்த்தி தென்னக்கோன் அங்கு இடம்பெற்ற வேறு சம்பவங்களையும் பட்டியல் போட்டுக் காட்டுகின்றார்.

* முதன்முறையாக அளவெட்டியில் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கலந்துரையாடலின் போது 50இக்கும் மேற்பட்ட இராணுவ சீருடை தரித்தவர்கள் ஏ.கே. 47, மண்வெட்டிப் பிடிகள், இரும்புக் கம்பிகள் சகிதம் நின்று தாக்குதல் நடத்தியமை.

* வல்வெட்டித்துறையில் கூட்டணி வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் தேர்தல் அலுவலகம் தாக்கி நொறுக்கப் பட்டமை.

* தென்மராட்சியில் மிருசுவில், தவசிக்குளத்தில் கூட்டமைப்பு ஆதரவாளர் கந்தையா அசோகலிங்கம் என்பவரின் வீட்டின் முன் மலர்வளையம் வைக்கப் பட்டு, மதிலில் ஒட்டப்பட்ட போஸ்டர்கள் மீது கழிவு ஒயில் ஊற்றப்பட்டமை.

* வலி.மேற்கில் கூட்டணி வேட்பாளரான திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் என்பவரின் வீட்டின் மீது கற்களையும், கண்ணாடிப் போத்தல்களையும் வீசித் தாக்கி உள்ளமை. அவரது வீட்டு மதிலில் ஒட்டப் பட்டிருந்த போஸ்டர்கள் மீது கழிவு ஊற்றப்பட்டமை.

* கிளிநொச்சியில் கூட்டமைப்புக்காக பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டமை.

* கிளிநொச்சியில் கூட்டமைப்பின் கூட்டங்களுக்குச் செல்லவிடாமல் மக்களை இராணுவத்தினர் தடுத்துநிறுத்தியமை.

* கூட்டமைப்பினரின் தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்ளும் இடங்களைச் சுற்றி அளவுக்கு அதிகமாக - வழமைக்கு மாறாக - இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டமை. இவை அனைத்துமே தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டவை.

இந்தச் சம்பவங்கள் அனைத்துமே பொலிஸிலும் தேர்தல்கள் தொடர்பான வன்முறைகளைப் பதிவு செய்யும் மத்திய நிலையத்திலும் அவ்வப்போது பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இந்தச் சம்பவங்கள் அனைத்துமே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரசார நடவடிக்கைகளை முடக்கவும் மக்கள் மத்தியில் பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்தி கூட்டமைப்பினருக்குப் பின் செல்லாமல் - ஆதரவு தராமல் தடுக்கும் ஒரு யுக்தியாகவுமே கருதமுடியும்.

எனவே இவை அனைத்துமே அரசின் அனுசரணையுடன்தான் இடம்பெறுகின்றன என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை என்று அடித்துக் கூறுகின்றார் 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன்.

குறிப்பு: அரச தகவல் திணைக்களம் அனுப்பி இருந்த ஊடக அறிக்கை வருமாறு:-

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரங்களை முடக்க அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்பட்டுவருவதாக வடபகுதி செய்திப்பத்திரிகை ஒன்றில் வெளியான தகவலை அரசாங்கம் முற்றாக மறுப்பதாகவும் அதில் எந்தவித உண்மையும் இல்லையெனவும் அரசாங்கத் தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல தெரிவித்தார்.

கடந்த 30 வருடங்களாக வடக்கில் தடைப்பட்டிருந்த ஜனநாயக அரசியல் உரிமைகளை இந்த அரசாங்கமே மீட்டுக் கொடுத்தது.

இதனடிப்படையில் இந்த மாதம் வடக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜனநாயக ரீதியில் சுதந்திரமாகச் செயற்பட சகல கட்சிகளுக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

அமைதியான தேர்தலை நடத்தப் பாதுகாப்புப் படையினர் உறுதிபூண்டுள்ளனர். கோரிக்கை விடுக்கப்பட்டால் தேர்தலில் போட்டியிடும் சகல கட்சிகளுக்கும் எதுவித பேதங்களுமின்றி உரியபாதுகாப்பை வழங்க அரசாங்கம் தயாராக உள்ளது.

ஜனநாயக ரீதியில் போட்டியிட்டு தேர்தலில் வெற்றிபெற முடியாதவர்கள் மக்களின் அனுதாபத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இவ்வாறான பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றனர்''

இதுதான் பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல வெளியிட்ட மறுப்பு அறிக்கை.

அரசாங்கத் தகவல்திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல மறுத்த ''கூட்டமைப்பின் பிரசாரங்களை முடக்கத் திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது அரசு-கபே அமைப்புக் குற்றச்சாட்டு'' என்ற இந்தச் செய்தி 09.07.2011 ஆம் திகதிய உதயனின் முதற்பக்கச் செய்தியாகும். (ஒ-2)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி பத்மலீலா அமுதசிங்கம்
அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் காசிநாதர் குலசேகரம்**

அவர்களின் மறைவினால் ஆழ்ந்த
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அன்னாரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரிய நல்லுறவு மன்றம்
யா/ கலாநிதி ஆ.தியாகராஜா மகாவித்தியாலயம், காரைநகர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
**இராமுப்பிள்ளை சிவலிங்கம்**

தோற்றம்
26.10.1928

மறைவு
12.06.2011

*இன்று (12.07.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

கொத்துக்கட்டி வீதி,
நாவாலி தெற்கு,
மானிப்பாய்.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நமசிவாயம் நடேசன்

ஓய்வுபெற்ற முன்னாள் பொதுவேலைகள் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளரும் யாழ்.மாநகர சபையின் முன்னாள் விசேட ஆணையாளருமாகவும் கடமையாற்றிய நமசிவாயம் நடேசன் 06.07.2011 புதன்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம்-செல்லாச்சிப் பிள்ளை தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்ற அன்னலெட்சுமியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான தையல்நாயகி, சதாசிவம், மகேஸ்வரி, மகேசன், சரஸ்வதி, வாலாம்பிகை மற்றும் சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அருமைச் சகோதரனும், தேவகி, கண்ணகி, கௌரி, சங்கரன், சிவகாமி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.07.2011 சனிக்கிழமை 06, Soldiers Place, Woodline, N.S.W. 2560 ஆஸ்திரேலியாவில் நடந்தேறியது.

(5742)
தகவல்:
ந.சிவசுப்பிரமணியம்
தம்பியார். (கொட்டடி)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
30 . 11 . 1971



மறைவு
29 . 05 . 2011

**அமரர் குணரட்ணம் செல்வராஜா (ரட்ணா)**

கடந்த (29.05.2011) அன்று இறைபதம் எய்திய எங்குடும்பத் தலைவர் அமரர் குணரட்ணம் செல்வராஜா அவர்களின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிமூலம் இரங்கல் செய்தி வெளியிட்டவர்களுக்கும் மற்றும் சகல வழியிலும் எமக்கு உதவிபுரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*சிரித்த பங்கயம் ஒத்த சீராளனே*
*உரித்தான எம்மைப் பிரிந்து - எங்குற்றாய்*
*தரிக்காத காலன் இப்படியும் வந்தானோ*
*சிரித்த முகத்தோனே இனியுன்னை காண்போமோ*
*மரித்தவுன் ஆன்மா என்றும் அமைதிகாண்க*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

மாப்பியன் மில்லேன்,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
5749
என்றும் உங்கள் நினைவுகளுடன்,
மனைவி மற்றும் குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **தம்பிராஜா பாலகிருஷ்ணன்**
[ஓய்வுபெற்ற தபாலதிபர்]
திதி: சதுர்த்தசி

மண்ணில்
13.04.1926

விண்ணில்
16.06.2008

பாரினிலே பார்க்கத் துடிக்கின்றோம் அப்பாவை
பாசத்துக்கு இலக்கணமான எங்கள் தந்தையை
பரிதவிக்கின்றோம் பிரிவைத் தாங்க இயலாமல்
பரமனை வேண்டுகின்றோம் ஆத்ம சாந்திக்காக

சவனாய்,
பருத்தித்துறை.
(கி/1718)
திருமதி பா.ரட்ணமலர்
(மகள்)

## மரண அறிவித்தல்

### செல்லையா சிவசுப்பிரமணியம்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவசுப்பிரமணியம் நேற்று (11.07.2011) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சேனாதிராசாவின் சகோதரனும், காலஞ்சென்ற பார்வதிப் பிள்ளையின் அன்புக் கணவரும், மங்களேஸ்வரன் (ஐயாத்தம்பி) கௌரிதேவி, சவுந்தலாதேவி, காலஞ்சென்ற வர்களான சுசீலாதேவி, ஜெயதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வராசா, செல்வரத்தினம், விமலாதேவி ஆகியோரின் மாமனும், கஜதீபன், செந்தீபன், கார்த்தீபன், பங்குஷா, கிந்துஜன், முகுந்தன், ஸ்ரீகாந்தன், சரண்ஞா, லாவன்யா, சதுர்த்திகா, கவிதா, சாரங்கா ஆகியோரின் பேரனும் தர்ணிகா, சதுர்த்திகன், கபிஷா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2011) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காட்டு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டக்ளஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ், சாவகச்சேரி நகர, பிரதேசசபை ஆகிய வற்றின் வேட்பாளர்களும் அவர்களது ஆதரவாளர்களுமாக 200 க்கும் மேற் பட்ட சைக்கிள்கள் இந்தப்பிரசாரப் பணி யில் ஈடுபட்டனர்.

இவர்கள் கைதடியில் ஆரம்பித்து கைதடிநுணாவில், மட்டுவில் தெற்கு சந்திரபுரம், மட்டுவில் வடக்கு சரசாலை தெற்கு, சரசாலை மத்தி, சரசாலை வடக்கு, கனகம்புளியடி, வேம்பிராய், மந்துவில் கிழக்கு, மந்துவில் மேற்கு ஆகிய கிர்ாமங்கள் தோறும் ஒழுங்கை ஒழுங்கையாக வீடு வீடாகச் சென்று பிரசாரத்தை மேற்கொண்டனர்.

இந்த சைக்கிள் பிரசாரம் தொடர்ந்து வரணி, கொடிகாமம், மிருசுவில், கச்சாய், கெற்பேலி, அல்லாரை, மீசாலை, சங்கத் தானை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் இன்னொரு தினத்தில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-10-207)

BIT Revision Free
Revision Course Fee
MCS Supported By UNDP/JRRP
University of Colombo
Register before 12.07.2011
324,Palaly Road,Parameswara Junction
For new batch Scholorship Details,Pls SMS 0772395895
மேலதிக கற்கைநெறிக்கட்டணம் இன்றி BCS, Com-Engineer(USA)Oracle JAVA, IELTS / TOEFL

பொருளியல்
NB.கஜீதரன் B.A, H.N.Dip in Acc
புதிய தேர்ச்சிகள் ஆரம்பம்
2013 A/L
தேர்ச்சி - 01 உற்பத்தி சாத்திய வளையி
தேர்ச்சி - 02 சந்தைக் கேள்வி நிரம்பல்
2012 A/L
தேர்ச்சி - 05 தேசிய கணக்கீடு
தேர்ச்சி - 06 சமநிலை தேசிய வருமானம்
★ கிழமையில் 6 மணித்தியால வகுப்புகள்
★ காலை அட்டவணை அலுவலகத்தில்
NEC யாழ். நகர். (பருத்தித்துறை வீதி.)

## தேர்தல்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தபால்மூல வாக்களிப்பு நடைபெறும் இன்றைய நாள் முதல் தேர்தல் முடியும் வரையான காலப்பகுதியில் நேரடி வாக்க ளிப்பு தினம்வரை இவர்கள் குடாநாட்டில் பாதுகாப்பு கடமைக ளில் ஈடுபடவுள்ளனர். (ஒ-4)

## வவுனியா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு பிள்ளைகள் உள்ளனர்.

★ பொன்னம்பலம் சிவகுமார் என்பவர் மன்னார் முருங்கன் தம்பனைக்குளத்தைச் சேர்ந்தவர். இவர் கடந்த 02.03.2007 முதல் எவ்வித வழக்கு விசாரணையுமின்றி சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றார். இவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

★ மரியதாஸ் நேவில் டெல்றொக்சன் என்பவர் யாழ்ப் பாணம் பாஷையூரைச் சேர்ந்தவர். இவர் 17.10.2009 அன்று வவுனியாவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

★ மட்டக்களப்பு, பண்டைக்குடாவெளி, காரைக்காட்டுப் பகுதியிலுள்ள வேப்பவெட்டுவானைச் சேர்ந்த ரங்கசாமி நந்தகுமார் கடந்த 20.09.2009ஆம் ஆண்டு முதல் சிறைத்தண் டனை அனு பவித்து வருகின்றார்.

மேற்கண்ட நால்வரைப் போன்றே வவுனியா சிறைச் சாலை யில் 48 கைதிகள் இருக்கின்றனர் என உண்ணாவிர தம் இருந்து வருவோர் அறிவித்துள்ளனர். உண்ணாவிரதிகள் தங்கள் கைப் பட வவுனியா நீதிமன்ற நீதிவானுக்கும் தங்களது கோரிக் கைகளை எழுதிக் கொடுத்துள்ளனர் எனத் தெரிவித் தனர்.

உண்ணாவிரதிகளை நேற்றுக் காலை நேரில் சென்று பார்வையிட்டு அவர்களது கோரிக்கைகளை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் கேட் டறிந்து கொண்டார். அவர்களது கோரிக்கை தொடர்பாக உரிய நட வடிக்கை எடுக்குமாறு நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமுக்குத் தொலை நகல் ஊடாக அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொலைநகல் ஊடாக அனுப்பப்பட்ட அவரது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

அரசியல் கைதிகள் நீண்டநாள்களாக விசாரணைக் கைதி களாக எவ்வித விசாரணையுமின்றி சிறைகளில் தடுத்து வைக் கப்பட்டுள்ளனர். இதனால் அவர்களது உறவினர்கள், மனை விமார், பெற் றோர், பிள்ளைகள், அன்புக்குரியவர்கள் மிகவும் மனவேதனை அடைந்துள்ள னர்.

குடும்பத்தின் ஆண்துணை இல்லா ததாலும், பொருளா தாரத்தை ஈட்டிக் கொடுக்கக்கூடிய நபர்கள் இல்லாத தாலும், குடும்பத்தை வழிநடத்தக் கூடிய தலைவர்கள் இன்மையாலும் அவர்களது குடும் பங்கள் சீரழிகின் றன. பிள்ளைக ளின் கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள் ளது. இவர்களது நிலைமையை உளவியல் ரீதியி லும் மனிதாபிமான ரீதியிலும் அணுக வேண்டியுள்ளது. எனவே, இவர்க ளது குடும் பச் சூழ் நிலையைக் கருத் தில் கொண்டு இவர் களை விரைவில் விடுதலை செய்வ தற்கு ஏற்ற நடவ டிக்கைகளை மேற் கொண்டு உதவு மாறு அக் கடிதத் தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10 ★ 02 ★ 1943



மறைவு
23 ★ 06 ★ 2010

அமரர் சிவக்கொழுந்து காசிநாதன்
திதி: 12.07.2011

அன்பால் பூத்த விழிகளும்
ஆரத்தழுவிய கரங்களும்
ஈரம் நிறைந்த இதயமும் ஓய்ந்து
ஆண்டொன்று ஆகிறது.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (5731)

குடும்பத்தினர்.

MyWay English இன் இலவச ஆங்கில பயிற்சிப்பட்டறை
ENGLISH WORKSHOP
ஆங்கிலம் பேசுவதற்கு தேவையான அனைத்து விடயங்களும்
இரண்டு மணிநேரத்தில் முழுமையாக கற்பிக்கப்படும்
காலம் : 14.07.2011 வியாழக்கிழமை (போயா விடுமுறை)
பிரிவுகள் : 8.00 - 10.00, 10.00-12.00. 2.00-4.00, 4.00-6.00
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)
இடம் : யாழ் மத்திய கல்லூரி
அனுமதி இலவசம்
* ADMISSION
* CERTIFICATE
* BOOK
ALL FREE
அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், வங்கியாளர்,
பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், பட்டதாரிகள்,
A/L மாணவர், இளைஞர், யுவதிகள் கலந்துகொள்ளலாம்.
கலந்துகொள்ளும் அனைவருக்கும் கலந்துகொண்டதற்கான
சான்றிதழ், மற்றும் கற்றல் புத்தகம் முற்றிலும் இலவசம்
MyWay English 182 , Stanley Rd, Jaffna
077 33 63 456

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
மணியம்
கணபதிப்பிள்ளை
(முன்னாள் அதிபர், யா/ தும்பளை
சிவப்பிரகாச ம.வி.)

தோற்றம்
27 ★ 08 ★ 1951

மறைவு
12 ★ 07 ★ 2007

நெல்லண்டைப் பதியில் உதித்தவரே,
நேயமனமும் நேர்மையும் கொண்டவரே,
பண்புடனே பல் பெருமை சேர்த்தவரே,
பாசமூட்டி பாலர் எம்மை வளர்த்தவரே,
ஊருக்காய் உழைத்த உத்தமரே

உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் - பிரார்த்திக்கின்றோம்.

"சாந்தி"
நெல்லண்டை, பருத்தித்துறை. (27-25) (சி/1715)

மணியம் கணபதிப்பிள்ளை
ஞாபகார்த்த நிதியம்.

## மரண அறிவித்தல்கள்

### முருகு செல்லத்துரை

மூர்த்தியங்கூடல், Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத் தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட முருகு. செல்லத்துரை நேற்று (11.07.2011) திங்கட்கிழமை கால மானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சிவகுமார் (மருமகன்).
மூர்த்தியங்கூடல்,
Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (5747)(52-25)

### திருமதி தவராஜலிங்கம் தேவி

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும், தற்போது லண்டனில் வசித்தவருமான திருமதி.தவராஜலிங்கம் தேவி கடந்த (10.07.2011) ஞாயிற்றுக் கிழமை லண்டனில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
குடும்பத்தினர் (லண்டன்).
(5750) (52-25)

தமிழ்த் தேசியத்தின் தன்மானத் தன்னாட்சி சின்னம்
இலங்கை தமிழரசுக் கட்சி
ஒற்றுமையாக தவறாது வாக்களிப்போம். (சி-1720)(52-25)

இடமாற்றம்
நாராயணா கட்டடப் பொருள்கள் வர்த்தகர்
NARAYANA HARDWARES TRADER
இதுவரை இல. 87, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கிவந்த
எமது மேற்படி வர்த்தக நிறுவனம் 14.07.2011 முதல் இல. 115, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு மாற்றப்படவுள்ளது என்பதனை
எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.
- நிர்வாகம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org